Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 8/50

දිනමුරසු වාරමලර්

டிசம்.05-11,1993

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 28



எக்ஸ்ரே ரிப்போர்ட்

## அரசியல் சதுரங்கத்தில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும்
## ஜனாதிபதி வெல்லுவாரா?



ஆன்மீகம்



யுத்த பூமியில் உருவாகிவரும் சமாந்தர வயது வட்டம்

இராஜ தந்திரி

எடுப்பது பிச்சை—
படுப்பதோ
பஞ்சு மெத்தை
ஒரு பிச்சைக்காரனின்
இராஜ வாழ்க்கை

தகவல் பெட்டி

ஸ்போர்ட்ஸ்

வண்ணமயமான சினிவிசிட்

ஹேமஸ் ஸ்பெசல்

கண்ணே மதுமிதா

புதுமைத் தொடர்

சிறுகதை

விடுகதை

பாப்பா முரசு



## உங்கள் இல்லங்கள் என்றும் குதூகலமாக இருக்க வேண்டுமா?
## இனிய யோசனைகள்!

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
25வது வெற்றிவிழா வார முரசோடு
இனிய அன்பளிப்பாய்
முரசு குறுநாவல் தந்தது.
எனினும்- சில பகுதிகளில்
குறுநாவல் தரப்படவில்லை என்று
வாசக நெஞ்சங்கள் வருத்தம்
தெரிவித்துள்ளீர்கள்.

தவறு எம்முடையதல்ல.
இணைப்பும் உண்டு என்று
முகப்பிலே குறிக்கப்பட்டிருந்தது.
பழக்கத்திலே இல்லை என்பதால்
சில விற்பனைப்பிரதிநிதிகள்
குறுநாவலை இணைத்துக்கொடுக்க
மறந்ததும் உண்டு.
உரிமையோடு கேட்டு வாங்கியிருக்கலாம். ■

தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர்
முரசுக்காகத் தந்த
புதிய தொடர் ஒன்று தயாராக இருக்கிறது.

ஏற்கனவே- அது பற்றிய அறிவித்தலும்
முரசிலே வெளியிடப்பட்டது.
உடனே வாசக நெஞ்சங்கள் பலர்
உரிமையோடு மடல் வரைந்திருந்தீர்கள்.

நம் நாட்டு எழுத்தாளர்களின்
ஆக்கங்கள் இருக்கும் போது
அயலக எழுத்தாளரின்
ஆக்கங்கள் முக்கியமா?
என்று கேள்வி மேல் கேள்வி.

ரசிகன் எழுதிவரும்
கண்ணே மதுமிதா நிறைவடைந்ததும்
அவர் ஒரு புதிய தொடர் தரவேண்டும்
என்று வாசக நெஞ்சங்கள் பலர்
மடல் வழியே கோரிக்கை விட்டுள்ளீர்கள்.

ரசிகனின் புதிய தொடர்
நிச்சயம் இடம் பெறும்.
அயலக எழுத்தாளரின் தொடர்
கையில் இருக்கிறது.
நம்மூர் எழுத்தாளர்களுக்கு முரசில்
ஒதுக்கப்படும் இடத்தை ஆக்கிரமிக்காத
வகையில்
அதனை வெளியிடுவது பற்றி
யோசிக்கப்படுகிறது. ■

"நூறு பூக்கள் மலரட்டும்"
இது- செஞ்சீனத்தின் தலைவர்
மா ஓ சேதுங் சொன்ன வாசகம்.

அந்த நூறு பூக்களும்தான்
புதிய கருத்துக்கள்.
கருத்துக்கள் பிறக்கும் போது
எதிர்க்கருத்துக்களும் உதிக்கின்றன.
ஆகவே
கருத்து மோதல்களும் களத்துக்கு வருகின்றன.

வாதம்-பிரதிவாதம் என்பன
ஜனநாயக அரங்கில்
தேவையற்ற கருத்துக்களை
சுத்தம் செய்யும் துடைப்பம் போலவும்
தூய்மைப் பணியாற்றுகின்றன.

துடைப்பத்தைத் தொடாதே
'தொட்டால்- இங்கே பார்
துப்பாக்கி" என்று
மிரட்டுகிறவர்களும் இருக்கிறார்கள்.

உண்மையில்
அவர்கள் கோழைகள்.

மறைப்புக்கள்- கருத்து மறுப்புக்கள்
என்பவை
மக்களுக்கு எதிரானவை.
சரியானவற்றுக்கும் எதிரானவை.

முரசு-
கருத்து மோதல்களுக்கு இடம் தரும்.
வாத- விவாதங்களுக்கும் களம்தரும்.
ஆனால்-
விதண்டாவாதங்களுக்கு
மதிப்புத்தராது.

முரசுக்கு
எவர் வேண்டுமானாலும்
எப்படி வேண்டுமானாலும்
முத்திரை குத்திக்கொள்ளட்டும்.
ஆனால் முரசு
எத்திசையில் தவறு நடந்தாலும்
சுட்டிக்காட்டும் தனது தனித்துவத்தால்
பதித்துவரும் முத்திரையே
நிரந்தரமானது. நீடித்திருக்கக்கூடியது.

சிலர்- முரசுக்கு
அவர்களோடு தொடர்போ
இவர்களோடு தொடர்போ
என்று முடியைப் பிய்த்துக்கொண்டும்
பொறாமைப்பட்டும் கொண்டிருப்பதால்
அதனைச் சொன்னேன்- பாவம்,
அவர்களுக்கு ஏன் வீண் சிரமம்?

முரசுக்கு எல்லோரோடும் தொடர்புண்டு.
ஆனால்-எவர் தவறு எனினும்
அதைச் சுட்டிக்காட்டத் தயங்காது.
சரியானது சொல்லத் தயங்காது. ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-25

களம் தேடி வந்தவற்றில்
வெற்றிமுகம் கண்ட கவிதையும்,
வியக்கப்பட்டவற்றில் இடம்பிடித்தவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**கைதி**

ஐ.நா.வின்
அங்கீகாரத்துடனோ
நீ
அடைக்கப்பட்டிருந்தாய்?

கே. பவானந்தி
புதுநகர்,
மட்டக்களப்பு.

### பாராட்டுக்குரிய கவிதைகள்

**"கனவுதான்"**

"இது-
வசந்தம் தொலைந்து போன
வட-கிழக்கு மக்களின்
கசந்து போன
கடைசிக் கனவு"

நவாசியா-ஏ.கரீம்
புடவைக் கட்டு

**மீண்டும் வருக**

அமைதிப் புறாவே
நன்றி மீண்டும் வருக!
உங்கள் நல்வரவை நாடும்
உருக்குலைந்த
ஓவியங்கள் நாங்கள்.

க.மெக்டலின்
அக்கரைப்பற்று-9.

**வேடிக்கையா?**

சாகும் நிலையில்
சமாதானம் இருப்பதை
வேடிக்கை பார்க்கவா- இந்த
வெண்புறா பறந்து போகின்றது.

பாண்டியூர் சந்திரிகா
கல்முனை.

**இது நியாயமா?**

சிறகை ஒடித்துவிட்டு
சிறைக் கதவை திறப்பது
என்ன நியாயம்?

எம்.ஜியாத்
மாத்தளை.

**வேதனைகள் தீர்ந்திடுமோ**

ஓ. விலங்கொடித்துப் பறக்கிறதே
வெண்புறா.
இனி வேதனைகள் தீர்ந்திடுமோ?

எஸ்.சிவசாமி செல்வராஜ்
பூண்டுலோயா.

**சமாதானம்**

அடைந்து கிடந்த
சமாதானப் புறா
வெளிப்படுகிறது.
இன்னொரு கூட்டைத் தேடி.

மக்கொன லின்னாஸ் சௌக்கத்.

இன்று திறந்தவர்கள்
நாளை மூடலாம்.
ஏமாறப்போவது
எல்லோரும்தான்!

கே.ஸ்ரீரஞ்சனி
செங்கலடி.

**நிஜம்**

நம் நாட்டில்
இதுவே
நிஜமாகி
விடக்கூடாதா?

நா. அன்புச்செல்வம்
ஆரையம்பதி-2.


**"சமாதானம்"**

மனித மனங்கள்
மரணித்துப் போனதால்
சமாதானப் பணியை
"வென்புறா" தேடுகின்றதோ...?

செ.சுகுமார். மாங்கேணி.



## கவிதைப் போட்டி இல-28



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். தபாலட்டையில் உங்கள் உணர்வினைப் பொறித்து எமக்கு அனுப்புங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.12.1993.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 28
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

**நிஜந்தானா?**

நான் நினைத்தேன்
உன்
இறக்கைகளல்லவா...
உடைக்கப்பட்டு
விட்டதென்று!

அ.ரவிசங்கர்
செங்கலடி.

விலங்குகளை உடைத்துக் கொண்டு
விரைந்து செல்லும் வெண்புறாவே!
கலைந்து விட்ட தேசத்தினை
காக்கவா நீ செல்லுகிறாய்!

பூவிழி-வாழைச்சேனை.

**கருணை**

கொஞ்சம் நில்
'புளட் ப்ரூஃப்' தருகிறேன்
அணிந்து செல்!

ஜேக்கப் மைதிலி
முறக்கொட்டாஞ்சேனை.

இது!
இடைக்காலத் தீர்வுக்காக-
திறக்கப்பட்ட கதவுதான்
நிரந்தரமானதல்ல.....

கே.கோவிந்தராஜ்
வாழைச்சேனை.

"சின்ன சின்ன-ஆசை
சிறகடிக்க-ஆசை
சிறையை விட்டுவெளியே
சென்று வர-ஆசை"

செல்வி. வி.வினோபாஜினி
திருகோணமலை.

**எதிர்பார்ப்பு**

வந்துவிட்டாயா
உனக்குத்தானே
இத்தனை காலமும்
அழைப்பு மணி
விடுத்திருந்தோம்!

சு.ரீற்டா
ஏறாவூர்-01.

கொல்லாமல் சாகாதே-எப்படி?
சொல்லாமல் விடமாட்டார்கள் வாசகர்கள்.

முரசின் 25வது வெள்ளிவிழா வார இலவச இணைப்பாக தரப்பட்ட 'கொல்லாமல் சாகாதே' குறுநாவலுக்கு பிரமாதமான வரவேற்பு.

மடல்கள் வந்துகொண்டேயிருந்தமையால் திரட்டித்தர சற்றுத் தாமதித்தோம்.




முரசு தந்த போனஸ் எம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. வடிவமைப்பும் அருமை.

எஸ்.நிலாந்தன்-திருகோணமலை.

•

'கொல்லாமல் சாகாதே' குறுநாவல் தந்த ரசிகனுக்கு கைகுலுக்கி வாழ்த்துச் சொல்ல வேண்டும் என்று ஆசை. நிறைவேறுமா?

கே.ரவிசங்கர்-கொழும்பு-11.

•

கடைசிவரை சஸ்பென்சாகவே கதையை நகர்த்திச் சென்று, இடையிலே சூடும் கலந்து ரசிகன் சிலிர்க்க வைத்துவிட்டார்.

என்.நசீர்-புத்தளம்.

•

கண்ணே மதுமிதா மூலம் அறிமுகமாகி 'கொல்லாமல் சாகா'தேயில் சொல்லாமல் கொள்ளாமல் ரசிகன் எம்மை தன் ரசிகர்களாக்கி விட்டார்.

வீ.ஜெகநாத்-வீ உதயராணி.

•

சினேகத்திற்குரிய தினமுரசே, உந்தன் வெள்ளிவிழா 25வது இதழ் படு கவர்ச்சிகரமாக வீறு நடை போட்டு வெளிவந்தது. வாவ்! ரசிகனின் 'கொல்லாமல் சாகாதே' தீபாவளி போனஸ் கிடைத்தது நன்றி. கதை நமக்கு தீபாவளி கேசரி அல்வா மாதிரி சுவை.

# வாசக(ர்)சாலை

தினமுரசுக்கும், ஆசிரியருக்கும் எந்தன் நல்வாழ்த்துக்கள் சமர்ப்பணம்!

செல்வன். ஷஹிர்ஷா தாஸிம்-தர்கா நகர்.

•

அன்பின் தினமுரசே!

உன் 25வது முரசு எனக்குக் கிட்டியது. அருமையிலும் அருமை. இருந்த போதிலும் உன்னுடன் இணைக்கப்பட்டிருந்த 'கொல்லாமல் சாகாதே' இலவச குறுநாவலும் அருமையாக இருந்தது. தொடர்ந்து இப்படியான பல சுவாரசியமான செய்திகளைத் தருவாயென்று நம்புகின்றேன்.

கலையுள்ளம் மசூத் அஹமத்-காத்தான்குடி-03.

•

கடந்த வார தீபாவளி தேன் கிண்ணம் தந்த சிறப்பான கவிதைகளை தெவிட்டாத தேனாக சுவைத்தேன்.

யாரது மறைமுகமாக "மதுமிதாவை" எழுதிவருவது? தெரியாத இதயங்கள் தேடி அலையுதே.

சாரதா தேவி சண்முகம்- மஸ்கெலியா.

•

தினமுரசே,

எங்கள் இதயத்தைக் கொள்ளை கொண்டுள்ள கண்ணே மதுமிதா என்ற தொடர்கதையை எழுதும் ரசிகனை எங்களுக்கு அறிமுகம் செய்து வைக்க மாட்டாயா முரசே? ஏங்குது எங்கள் நெஞ்சம். உனது சேவை என்றும் வளரட்டும்.

முகமது சுல்தான் சர்மிளா-மூதூர்-01.

•

அன்பார்ந்த தினமுரசே!

'கொல்லாமல் சாகாதே' ரசிகனின் ருசிகர தீபாவளி போனஸ் கிடைக்கப்பெற்றது. நன்றி. அப்பப்பா! மகிழ்ச்சியோ தாளவில்லை. "கண்ணே மதுமிதா" மூலம் ருசி கண்ட பூனைகளாச்சே நாங்கள், கேட்கவும் வேண்டுமா? பார்த்தோம், ரசித்தோம், சுவைத்தோம். பாராட்டத்தான் ரசிகனைத் தேடுகிறோம். ஹூம்... தலை காட்ட மாட்டேங்கிறார். எனினும் எமது பாராட்டுக்கள், நன்றிகள் முரசுக்கும், ரசிகனுக்கும் உரித்தாகுக.

செல்விகள்-கமல்நேசி, இளையமகள்- களுத்துறை (தெற்கு)

•

"முரசே! நீ இருபத்தைந்தாவது முறை மலர்ந்த போது உன் உடன் வந்த அன்பளிப்பை பார்த்து மகிழ்ந்தேன். நன்றிகள். சின்னதாக இருந்தாலும் "கொல்லாமல் சாகாதே" மெய்சிலிர்க்க வைத்தது."

செல்வி. சுபாஷினி தேவி வேலாயுதம்-கொழும்பு-07.

•

அன்பின் தினமுரசே,

உனது வெள்ளிவிழா சிறப்பிதழ் படு அட்டகாசம். ரசிகர்களுக்கு, தீபாவளி (வெள்ளிவிழா) பரிசாக நீ தந்த (கொல்லாமல் சாகாதே!) குறு நாவல் வெரி சூப்பர்.

வளர்க உனது பணி.-வாழ்க உன்னை ஆக்கியோர்கள்.

'ரஜனிப்பிரியன்'- ஏ.பீட்டர்-கஹவத்த.

அன்பின் தினமுரசே!

உன் வரவால் நாங்கள் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. கவிதை போட்டி தந்து ஆர்வத்தை தூண்டி விடுகின்றாய். 25வது இதழ் சமாதானப்புறாவின் (கவிதைப் போட்டி) சின்னத்தோடே வந்து எம்மை முத்தமிட்டது. கண்ணே மதுமிதா இரகசிய ரசிகன் யார் என்று சொல்ல மாட்டீர்களா? வெற்றியுடன் என்றும் பவனி வந்து வாழ்க என்று வாழ்த்துகிறோம்.

ஸரீனா-எஸ். ஹமீட்,
ஹலீமா.எஸ்.ஹமீட் மொஹமட் ஹில்மி,
மல்வானை ஹின்ன- அக்குறணை.

•

தினமுரசு எடுத்ததும் முதல் "கொல்லாமல் சாகாதே" குறுநாவலை படித்தேன். விறுவிறுப்பான கதை. ஐயோ... எப்படி வர்ணிக்க! ரசிகனின் கையை தேடுகின்றேன் கைகுலுக்க. மறைந்து இருக்கும் ரசிகன் யார் என்று சொன்னால் எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாய் இருக்கும். யார் அந்த ரசிகன்? அன்பளிப்புக்கு நன்றி தினமுரசே!

எம். ஹயாத்-மட்டக்குளிய.



ஜனநாயகம் என்றால் எப்படியிருக்கும் என்பதே தமிழர்களுக்கு மறந்து போய்விட்டது. தினமுரசின் மூலம் மீண்டும் பல்வேறு கருத்துப் போக்குகளுக்கு களம் கிடைத்துக் கொண்டிருப்பது மகிழ்ச்சியே.

எ.நவரத்னம்-நீர்கொழும்பு.

•

பெண்களுக்கு சம முக்கியத்துவம் கொடுக்கும் முரசை பாராட்ட வார்த்தைகளைத் தேடுகிறேன். பெண் தாழ்வானவள் அல்ல என்பதை எடுத்துக்காட்டும் முரசுக்கு சபாஷ்.

கு.சியாமளா- மட்டக்களப்பு.

ராஜதந்திரியின் அலசல் அரசியலில் மேம்பாடு தேடுகிறவர்களுக்கு பிடித்தமானதாக இருக்கிறது. பாராட்டுக்கள்.

ச. வேலாயுதம்- கொழும்பு-06.

எக்ஸ்ரே ரிப்போட் சிலருக்கு மரண அடி கொடுத்தாலும் உண்மைகளை அறியவிரும்புவோருக்கு உற்சாகம் தருகிறது. தொடரட்டும் ரிப்போட்.

ஆ.கமலநாதன்-சிலாபம்.

# "தனியரசுக்கான பாதையே இறுதியான பாதை"! "சமாதான வழியில் தீர்வுகள் கிடைக்காது"!!

## பிரபாகரனது உரையின் முக்கியமான பகுதி

- ❑ பிராந்திய வல்லரசும், உலக வல்லரசும் விடுத்த சவால்களை முறியடித்தோம்.
- ❑ எமது இயக்கம் மட்டுமே தமிழீழக் கோரிக்கையைக் கைவிடவில்லை.
- ❑ ஒவ்வொரு நாடும் தேசிய சுயநலத்தையே முன்னிறுத்துகிறது.
- ❑ ஆறாயிரம் உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 26ம் திகதி தமது அமைப்பினரின் மாவீரர் நாளை முன்னிட்டு பிரபாகரனது உரை அவர்களது வானொலியில் இடம்பெற்றது.

அந்த உரையின் சில பகுதிகள் ஏற்கனவே வேறு தென்னிலங்கை பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. ஆயினும் பிரபாகரன் தனது உரையின் போது வலியுறுத்திய முக்கிய விடயங்கள் அவற்றில் காணப்படவில்லை என்றே தெரிகிறது. பிரபாகரனது பேச்சில் இடம் பெறாத விடயங்களும் சில பத்திரிகைகளில் வெளிவந்ததுதான் வேடிக்கை.

தமிழீழ கோரிக்கையைக் கைவிடாமை. அந்த கோரிக்கையின் அடிப்படையில் சமாதானக் கதவுகளை திறந்து வைத்துள்ளமை, இந்தியப் படைகள் மீதான தமது வெற்றியை முன் நிறுத்துவதுடன், இந்தியாவோ, வேறெந்த வல்லரசோ ஈழக் கோரிக்கையை எதிர்த்தாலும் தாம் கைவிடப்போவதில்லை என்பதை வலியுறுத்துகின்றமை என்பவையே பிரபாகரனது பேச்சின் முக்கிய கருப் பொருட்களாக அமைந்தன.

திரு.வே.பிரபாகரனது உரையின் முக்கிய பகுதிகள் எவ்வித மாற்றமும் இன்றி கீழே தரப்படுகின்றன.



வே. பிரபாகரன்

"எமது நாடு எமக்கே சொந்தம் என்ற உரிமைக் குரலை உலகெங்கும் முழங்கச் செய்த உன்னத தியாகிகளை நாம் எமது நெஞ்சுப் பசுமையில் நிறுத்திக்கொள்ளும் தேசியநாள் மாவீரர்நாள்.

இன்றைய தினம் ஒரு தேசிய எழுச்சி தினம். எமது தேசம் சுதந்திரம் வேண்டி உறுதி பூணும் புரட்சி தினம்.

எமக்கொரு நாடு வேண்டும். எமது மக்களுக்கு விடுதலை வேண்டும். எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கை யுடனே மாவீரர்கள் களத்தில் வீழ்கிறார்கள்.

6000க்கும் அதிகமான இலட்சிய வேங்கைகளின் சத்திய வாக்காக விடுதலை முழக்கம் கேட்கிறது. இந்த விடுதலை முழக்கத்தின் எழுச்சி கொண்டே எமது இலட்சியப் பயணம் தொடர்கிறது.

எமது விடுதலை இயக்கம் ஆரம்பமான காலத்தில் இருந்தே எத்தனையோ நெருக்குதல்களையும், சோதனைகளையும், ஆபத்துக்களையும் சந்தித்தபோதும் எமது அடிப்படையான அரசியல் இலட்சியத்தில் இருந்து என்றுமே நாம் தளர்ந்ததும் இல்லை, தடுமாறியதும் இல்லை. தமிழீழ தனியரசே தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சனைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையும், தெளிவும் உண்டு.

ஆயுதப் போராட்டம் மூலமே தனியாட்சி நிறுவ முடியும் என்று ஆர்ப்பரித்த ஆயுதக் குழுக்கள் தமது அரசியல் குறிக்கோளை கைவிட்டு தமிழினத்திற்கு துரோகமிழைத்து நிற்கின்றன.

எமது இயக்கம் மட்டுமே அன்றில் இருந்து இன்றுவரை வகுத்துக்கொண்ட குறிக்கோளில் இருந்து வழி தவறவில்லை.

தமிழீழ தனியரசு என்ற இலட்சியத்தை அடைவதிலுள்ள இமாலய இடையூறுகளை நாம் அறியாமல் இல்லை. இந்த இலட்சியத்திற்கெதிராக எந்தெந்த சக்திகள் எப்படியெல்லாம் செயற்படும் என்பதும் எமக்குத் தெரியாததல்ல.

பிரதேச வல்லரசின் ஆதிக்க அபிலாசைகளும், உலக வல்லரசின் கேந்திர இலக்குகளும் எத்தகைய தலையீடுகளை ஏற்படுத்தும் என்பதனையும் நாம் எதிர்பாராமல் இருக்கவில்லை.

எமது போராட்ட இலட்சியம் நியாய மானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது. நாம் எமது போராட்ட இலட்சியத்தில் உறுதி பூண்டு நிற்க வேண்டும். இறுதிவரை போராடும் மக்கள்தான் விடுதலையை வென்றெடுப்பார்கள்.

இந்த உலகமானது மானிட தர்மத்தின் சக்கரத்தில் சுழலவில்லை. ஒவ்வொரு நாடும் தனது தேசிய சுயநலத்தையே முதன்மைப்படுத்துகிறது.

மக்கள் உரிமை, மனித உரிமை என்ற தார்மீக அறத்திலும் மேலாக பெருளாதார-வர்த்தக நலன்களே இன்றைய உலக ஒழுங்கமைப்பை நிர்ணயிக்கின்றன. இந்த நிலையில் சர்வதேச சமூகம் உடனடியாக எமது போராட்டத்தை அங்கீகரிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

எமது போராட்டத்தின் வெற்றி உலகத்தின் கையில் தங்கியிருக்கவில்லை. எமது வெற்றியானது எமது பலத்தில், எமது உறுதிப்பாட்டிலேயே தங்கியுள்ளது.

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்சனைக்கு சமாதான வழியில் நியாய மான தீர்வை வழங்கப் போவதில்லையென நாம் காலம் காலமாக வலியுறுத்தி வருகிறோம்.

பேரினவாத தீவிரப் போக்கில் மாற்றம் ஏற்படும் என்று என்றுமே நான் நம்பிய தில்லை. பேரினவாதத்தின் கடுமையான போக்கு தனியரசு என்ற ஒரே பாதையைத் தான் தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்துள்ளது. அந்தப் பாதையில் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழி யில்லை. இந்தப் பாதை வழியே நாம் எமது பயணத்தை தொடர்கிறோம். எமது மாவீரர்கள் ஏற்றி வைத்த சுடரொளியில் தெளிவாகப் புலப்படும் அந்த சுதந்திரப் பாதை வழியாக நாம் எமது இலட்சியப் பயணத்தை தொடர்வோம். புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்."

இவ்வாறு பிரபாகரன் தனது உரையின் போது தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் படையினரை தமது இயக்கக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி களுக்கு தாக்குதல் நடத்த அனுப்பக்கூடாது.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் அப்படியே இருக்கக்கூடியதாக சமாதானம் பற்றிப் பேசலாம் என்பதையும் பிரபாகரன் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு படையினர் தாக்கினால் சமாதானக் கதவு மூடப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈழக் கோரிக்கையையும், தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளையும் கைவிடாத நிலையில் சமாதானப் பேச்சு ஒன்றுக்கு தாம் தயார் என்பதாகவே பிரபாகரனது பேச்சு அமைந்திருக்கிறது.

தமது இயக்கமே ஈழக் கோரிக்கையை கைவிடவில்லையென்றும், ஏனைய தமிழ் அமைப்புக்கள் அக் கோரிக்கையை கைவிட்டு துரோகம் செய்து விட்டன என்றும் திரு. பிரபாகரன் தெரிவித்திருப்பதால் ஈழ்க் கோரிக்கையை தமது இயக்கம் எப்போதும் கைவிடாது என்பதை வெளிப்படுத்தி யிருக்கிறார்.

சமஷ்டித் தீர்வுக்கு திரு. பிரபாகரன் தயாராக இருப்பதாக புலிகளின் பிரமுகர்கள் சிலர் முன்பு தெரிவித் திருந்தனர்.

ஈழக் கோரிக்கையை கைவிட்டு ஏனைய தமிழ் அமைப்புக்கள் தமிழினத்துக்கு துரோகம் இழைத்து விட்டதாக திரு. பிரபாகரன் தெரிவித்துள்ளமையால் வேறு மாற்றுத் திட்டம் பற்றிய புலிகள் அமைப்பு பிரமுகர்களது பேச்சுக்கள் குறித்து அரசியல் அவதானிகள் சிலர் சந்தேகம் எழுப்பு கின்றனர்.

திரு. வே.பிரபாகரனது உரையானது தமிழீழக் கோரிக்கையை உலகம் அங்கீ கரிக்கிறதோ இல்லையோ அதற்காக இறுதிவரை தமது இயக்கம் செயற்படும் என்பதையே வலியுறுத்துகிறது.

இதே சமயம் புலிகள் அமைப்பின் அரசியல் துறையினால் மாவீரர் நாளை முன்னிட்டு ஒரு பிரசுரம் வெளியடப்பட்டது.

"எமது தலைவரின் காலத்தில், அவரது தலைமையில் தமிழீழத்தை நிறுவுவோம். அந்த இலட்சியத்தில் உறுதி பூண்டு நிற்போம்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்குடா நாட்டிலும், மன்னார், வன்னிப் பகுதிகளிலும் புலிகள் அமைப் பினர் மாவீரர் நாள் நிகழ்ச்சிகளை நடத்தி னார்கள். பொதுக்கூட்டங்கள் ஆரம்ப மாவதற்கு முன்னர் புலிகள் அமைப்பினரின் அணிவகுப்புகளும், பாண்ட் வாத்திய இசைகளும் இடம் பெற்றன. ●

## விகிதாசார நியமனங்கள் பேச்சளவில் மட்டுமா? மலையகத் தமிழ் மக்கள் மனம் உடைந்து கேட்கிறார்கள்!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் இன விகிதாசார அடிப்படையில் அரச துறைகளில் நியமனங்கள் வழங்கப்படும் பொழுது மலையகத் தமிழர்களுக்கு 12 வீதமும் முஸ்லிம்களுக்கு 7 வீதமும் வழங்கப்பட வேண்டுமென்பது மத்திய மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் முடிவாகும்.

என்றாலும் இந்த விகிதாசார நியமனங்களைக் கூட மலையக இந்திய வம்சாவளி மக்களின் குழந்தைகளுக்குப் பெற முடியவில்லையென கவலையும் அதிருப்தியும் தெரிவிக்கப்படுகின்றது.

பொது எழுதுநர் சேவையில் இணைத்துக் கொள்ளும்பொருட்டு சில மாதங்களுக்கு முன்னர் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 90 புள்ளிகளுக்கு மேற்பட்ட தொகையை எடுத்தோருக்கே தமிழ் மொழி மூலத்தில் கருமமாற்ற நியமனம் வழங்கப்பட்டது. இந்தப் புள்ளியை எடுத்த மூன்று முஸ்லிம் இளைஞர்களுக்கே நியமனம் கிடைத்தது. மலையக இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்களுக்கு 12 சதவீத நியமனம் கிடைக்க வழியிருந்த போதிலும் கூட பரீட்சையில் 90க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறாததன் விளைவாக இருவருக்கு மாத்திரமே நியமனம் கிடைத்தது.

கண்டி டி.எஸ்.சேனநாயக்க நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மத்திய மாகாண எழுதுநர் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்ட 67 பேருக்கு நியமனம் வழங்கும் வைபவத்தில் ஆணைக்குழுவின் செயலாளர் திரு. டபிள்யூ. என்.விஜயவர்த்தன உரையாற் றும்போது இத்தகவலை அங்கு வெளியிட்டார். இவ்வாறு வழங்கப்பட்ட நியமனங்களில் 60சத வீதத்தினர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தோர் ஆவர்.

போட்டிப்பரீட்சையில் போதிய திறமை காட்டாததன் விளைவாகவே கிடைக்க வேண்டிய நிலுவையும் இனவிகிதாசார அடிப்படையில் மலையகத் தமிழர்களுக்குக் கிடைக்காமல் போய்விட்டதும் வேதனையோடு குறிப்பிடத்தக்கது. ●

## புனரமைக்கப்பட்டது வீதி!-தேங்கி நிற்கிறது மழைநீர்!! மூன்று இலட்சம் செலவிட்டும் முழுமையற்ற பணி!

(நிந்தவூர் நிருபர்)



நிந்தவூரிலுள்ள வீதிகளுள் மிகவும் பிரதானமானதாகத் திகழும் மத்திய வீதி (ஆஸ்பத்திரி வீதி) யின் அவல நிலையையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனைப்பிராந்திய அலுவலகப் பராமரிப்புக்கு உட்பட்ட இந்த வீதியால் நிந்தவூர் அரசினர் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவ, மாணவியர்கள், மீனவர்கள் போக்குவரத்து செய்வது வழக்கமாகும்.

ஆனால் இந்த வீதியின் மூங்கிலடிச்சந்திப் பகுதியில் சுமார் 500 அடி நீளத்திற்கு - ஒரு சிறு மழை பெய்தால்கூட மழை நீர் தேங்கி நிற்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தனைக்கும் நெசவுக் கைத்தொழில் அமைச்சர் ஜனாப். எம்.ஏ. அப்துல் மஜீத் அவர்களின் பெரு முயற்சியால் சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர்தான் இந்த வீதி புனரமைப்புச் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

வீதி புனரமைப்பு வேலையைப் பொறுப்பேற்ற ஒப்பந்தக்காரரின் (கொந்தராத்துக்காரர்) செயல் திறன் லட்சணமா? இது என்றும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக இந்த மழைநீர் தேங்கி நிற்கும் பகுதியைச் செப்பனிட ஆவன செய்ய வேண்டுமென அப்பிரதேச மக்கள் கோருகின்றனர். நடக்குமா காரியம்? ●

## யார் பிறந்தால் என்ன? யார் இறந்தால் என்ன? வேலை இருந்தும் தூங்கும் அலுவலகம்!

(திருகோணமலை)

திருகோணமலை பிறப்பு இறப்புப் பதிவாளர் அலுவலகம் சோம்பலின் உச்சக்கட்டத்தில் இருக்கிறதா எனப் பொதுமக்கள் கேட்கிறார்கள்.

சகல அலுவல்களும் மிக மிக மந்த கதியில் நடப்பது மாத்திரமின்றி பல விண்ணப்பங்களுக்கு பதிலே இல்லாமற் போய்விடுவதும் உண்டு. ஒரு சான்றிதழுக்குப் பல தடவைகள் விண்ணப்பித்தும் உரிய பலன் கிடைக்காமல் தோல்வி கண்ட பொதுமக்கள் செய்வதறியாது தலையிலடித்துக் கொள்கிறார்கள்.

சகல விபரங்களும் கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான சான்றிதழ்கள் கூட வழங்கப்படாமற் போவது இங்கு சாதாரணமாகிவிட்டது. விண்ணப்பதாரர் நேரிற் சென்று கேட்டால் தபாலில் அனுப்பப்பட்டு விட்டதாகவும் தபாற்கந்தோரில் போய்க் கேட்கும்படியும் கூறி விடுகிறார்கள்.

தபாற்கந்தோரில் சென்று கேட்டாலோ 'ஆயிரக் கணக்கான கடிதங்களை உரிய இடத்தில் சேர்க்கும் நாங்கள் இவர்கள் போடும் கடிதங்களை மாத்திரமே தொலைத்துக் கொண்டிருக்கிறோம்' என்று வேடிக்கையுடன் கூறுகின்றனர். தபாற்கந்தோரில் கடமைபுரிபவர்களின் விண்ணப்பங்கள் கூட இந்தக் கதிக்கு உள்ளாகி இருப்பதாகக் கூறப்படுகின்றது.

## மட்டக்களப்பில் சோதனை!

மட்டக்களப்பில் பாதுகாப்புப் படையினர் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் புலிகளுக்கு இழப்புகளை ஏற்படுத்துவதால், புலிகள் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் ஊடுருவக் கூடும் என்று படையினர் தரப்பில் கருதப்படுகிறது.

வழிச் சோதனைகளால் பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலகங்களுக்குச் செல்வோர் காலதாமதமாகச் செல்ல வேண்டி ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது.


## வெள்ளத்தில் அகதிகள்

யாழ்குடாநாட்டில் பெய்துவரும் கடும் மழையால் வீதிகள் நதிகளாகவும் குளங்களாகவும் மாறியிருக்கின்றன.

அங்குள்ள அகதி முகாம்களுக்குள்ளும் வெள்ளம் புகுந்திருக்கிறது.

விளம்பரப் பகுதி

SARIKA TEX
Ladies Tailoring
24 மணிநேரத்தில்
சாறி பிளவுஸ்
சல்வார் கமீஸ்
உங்கள் உடலமைப்புக்கேற்றபடி
நவீன முறையில் தைத்துக்கொள்ள
Hewa Shopping Complex
No. 69/5-1/1, 1st Floor,
Galle Road,
Dehiwela South.



மலையாள
மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட்டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
33, Daily fair Complex, NUWARA ELIYA.
Dial: 052-2508 & 3093
Celltel. 072-26088, 078-61933

COLOMBO BRANCH:
26, CHARLYMONT ROAD,
WELLAWATTA.
DIAL:01-583250. 078-71243 FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

# கலைஞரின் தவறும், வை.கோவின் பிரிவும்! இளம் தலைமுறை நம்பிக்கை இழக்கிறது!!

தருவது தமிழகச் செய்திகள் ஏழுமலை

திராவிட முன்னேற்றக்கழகத்தில் இருந்து வை.கோபால்சாமி நீக்கப்பட்டுவிட்டதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் அன்பழகன் அறிவித்திருந்தார்.

அவரது அறிவிப்பையடுத்து தி.மு.க இளைஞர்கள் மத்தியில் தலைமை மீதான நம்பிக்கையீனங்கள் தோன்றியுள்ளன.

கட்சியில் இருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர் வை.கோபால்சாமி திருச்சிக்கு சென்றார்.

புகையிரத நிலையத்தில் வை.கோபால்சாமிக்கு மாபெரும் வரவேற்புக்கொடுக்கப்பட்டது. உற்சாகமான கோசங்கள் எழுப்பப்பட்டன.

கட்சியை குடும்பச் சொத்தாக மாற்றுகிறார் கலைஞர் என்ற கருத்து கட்சியின் தீவிர உறுப்பினர்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்திருக்கிறது.

வை.கோபால்சாமி தனது நியாயங்களை சொல்ல கட்சியின் பொதுக்குழுவைக் கூட்டுமாறு கோரிக்கை விடுத்தார்.

கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. வை.கோபால்சாமியை பொதுக்குழுவில் சந்திக்க கலைஞர் தயக்கம் காட்டினார்.


கட்சியின் பொதுச்செயலாளர் பேராசிரியர் அன்பழகன் கலைஞர் மு.கருணாநிதியின் விருப்பம் அறிந்து செயற்படுகிறவர்.

கலைஞர் சொல்லாமல் அவர் எந்த முடிவையும் எடுப்பவரல்ல.

அவரது பெயரில் அறிக்கை வந்தது. வை.கோபால்சாமி கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதால் நீக்கப்படுவதாக.

பொதுக்குழுவை ஏன் கூட்டவில்லை என்பதற்கும் அன்பழகன் விளக்கம் சொல்லியிருந்தார்.


கட்சியில் 40 இலட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு உறுப்பினரின் பிரச்சனைக்காகவும் பொதுக்குழுவையும், செயற் குழுவையும் கூட்ட முடியாது என்பதுதான் அவரது வாதம்.



வை. கோபால் சாமி

ஆனால், வை. கோ. சாதாரண உறுப்பினரல்ல. கலைஞரால் தனது போர்வாள் என்று அழைக்கப்பட்டவர். "தம்பி உள்ளான் படைக்கஞ்சான்" என்று பேரறிஞர் அண்ணா சொன்னது போல, கலைஞரால் ஒரு காலத்தில் "தம்பி" என்று வாஞ்சையோடு அழைக்கப்பட்டவர்.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். கட்சியின் தேர்தல் பணிக்குழு செயலாளராக பணியாற்றியவர்.



கலைஞர் மு. கருணாநிதி

அவ்வாறான ஒருவரை அலட்சியம் செய்து சாதாரண உறுப்பினரின் நிலையோடு ஒப்பிட்டது சரியல்ல என்பதே பரவலான கருத்தாக இருக்கிறது.

வை.கோவுக்கு இழைக்கப்பட்டிருப்பது அநீதி என்றே தி.மு.க ஆதரவாளர்கள் பலரும் சொல்கிறார்கள்.

வை.கோ. செய்த தவறு என்ன? கட்சிக்கட்டுப்பாட்டை மீறியதுதான்அவர் செய்த குற்றம் என்றால், கலைஞருக்கும் தெரியாமல் அவர் யாழ்ப்பாணம் போய் வந்த போது நீக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் செய்யவில்லை. இப்போது மட்டும் என்ன அவசரம் வந்தது என்று கேட்கிறார்கள்.

கலைஞரை வசை பாடிய காளிமுத்து போன்றவர்கள் மீண்டும் கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

"கலைஞரே என் தலைவர். தி.மு.கவே என் மூச்சு" என்று செயற்பட்டு வந்த வை.கோ கட்சியில் இருந்து தூக்கி வீசப்பட்டிருக்கிறார்.

கலைஞர் தன்னைச் சுற்றியுள்ள குடும்பத்தவர்களாலும், துதிபாடிகளாலும் பலவீனப்படுத்தப்பட்டுள்ளார்.

தனக்குப் பின்னர் கட்சியை கொண்டு நடத்தக்கூடிய தலைமைக்குப் பதிலாக, கட்சியை தன் குடும்பத்திடம் ஒப்படைத்து விட்டுச் செல்ல நினைக்கிறார்.

அண்ணா உயிரோடு இருந்த போது அவரும் அப்படி நினைத்திருந்தால் கலைஞர் கட்சித் தலைமைக்கு வந்திருக்க முடியுமா?

தனது குடும்பத்திற்கும் கட்சிக்கும் இடையே அண்ணா தெளிவான எல்லைக் கோடு பிரித்திருந்தார்.

அதனால் தான் அவரது மறைவுக்கும் பின்னரும் கழகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் கலைஞர் தனக்குப் பின்னர் கழகத்தை வழிநடத்தக்கூடிய துடிப்பான தலைமையை தூக்கி எறிந்து விட்டார்.

இவைதான் கழக இளைஞர்களின் வேதனைக் குரல்களாக ஒலிக்கின்றன.

எப்படியோ தி.மு.கவில் இருந்து வை.கோபால்சாமி வெளியேற்றப்பட்டதன் மூலம் அக்கட்சிதுடிப்பான இளைய தலைமுறையோடு ஒரு முறிவை ஏற்படுத்திக் கொண்டது.

தமிழ்நாட்டு விடுதலைப் படை போன்ற தீவிரவாதக் குழுக்கள் தலையெடுத்து வருகின்றன. தி.மு.க போன்ற கட்சிகள் மீது இளைஞர்கள் நம்பிக்கையிழப்பது அவ்வாறான குழுக்களது வளர்ச்சிக்கே வழி கோலும். ■

## அவகாசம் கேட்கிறார் கலைஞர்!

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை பற்றி ஜெயின் கமிஷன் விசாரித்து வருகிறது.

தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியையும் அக் கமிஷன் அழைத்திருந்தது.

தனது தரப்பு வாதத்தை எடுத்துச்சொல்ல இரண்டு மாதகால அவகாசம் வேண்டும் என்று கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

ராஜீவ் கொலைக்கு புலிகள் மட்டும் காரணமா? அல்லது வெளிநாட்டுச் சதியும் இருக்கிறதா என்பதை ஆராயவே ஜெயின் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வர்மா கமிஷன் ராஜீவ் கொலை பற்றி விசாரித்தது. பாதுகாப்பு ஏற்பாடுகள் சரியாக இருந்திருந்தால் ராஜீவைக் காப்பாற்றியிருக்கலாம் என்ற கருத்துப்பட நீதிபதி வர்மா தனது அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தார்.

## பஸ் தரிப்பிடமின்றி பயணிகள் அவதி!

குருநாகல்-கண்டி பிரதான வீதியில் அமையப் பெற்ற பறகஹதெனிய மக்களுக்கு கடந்த பல வருடங்களாக பஸ் தரிப்பு நிலையமொன்று இல்லாதது பெருங்குறையாக உள்ளது.

இவ்வூர் மக்கள் பஸ்ஸுக்காக மரங்களின் கீழும், கடைகளிலும் ஒதுங்கி நிற்கும் பரிதாப நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக பாடசாலை செல்லும் மாணவர்கள் தங்களுக்கு ஒரு பஸ் தரிப்பிடமின்றி மழை, வெய்யிலில் அவதியுறுவதை மாவத்தகம பிரதேச சபைக்கு முறையிட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையாவது எடுக்கப்படாமல் இருப்பதையிட்டு பெரும் கவலை கொண்டிருக்கின்றனர்.

எனவே, பறகஹதெனிய மக்களின் இப்பெரும் குறைபாட்டை நீக்குவதற்குரிய தகுந்த நடவடிக்கையை மேற்கொள்வது அவசியமாகும்.

-ரியாஸா-பறகஹதெனிய.

## ஆலயம் அமைக்க அடிக்கல்

நுவரெலிய ஆவெலியாவில் உள்ள ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் திருக்கார்த்திகை விழாவும், திருவிளக்குப் பூசையும் வெகு சிறப்பாக நடைபெற்றன.

புனருத்தாரணம் செய்யப்பட்டு வரும் ஆலயத்தில் முருகன் கோவிலும், விநாயகர் கோவிலும் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் திரு.வி. ராதாகிருஷ்ணன் அடிக்கல் நாட்டு விழாவிற்கு தலைமை தாங்கினார். அராலியூர் சிற்பக்கலைத் திலகம் திரு. மா. பன்னீர்ச் செல்வமும், மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்ட அடிக்கல் நாட்டு விழாவில் பெருந்திரளான பக்தர்களும் சமூகமளித்திருந்தனர்.

## மீண்டும் ரயில் சேவை

(கந்தப்பளை நிருபர்)

1942ஆம் ஆண்டுக்கு முன் கந்தப்பளையில் ரயில் சேவை நடந்தது. அதற்குப்பிறகு சேவை நிறுத்தப்பட்டது. மீண்டும் கந்தப்பளை மார்க்கமாக ராகலை வரை ரயில் சேவை நடத்த ரயில்வே திணைக்களமும் போக்குவரத்து அமைச்சும் முயற்சி செய்து வருகின்றன. ரயில் சேவை நானுஓயாவில் இருந்து ஆரம்பிக்கப்படும்.

## பேருந்து நிலையத்தில் குழாய் நீரில்லை

குச்சவெளி பேருந்து நிலையத்தில் குழாய்நீர் வசதி இல்லாமல் போனது பெரும் குறையாகும். கடந்த வருடங்களில் பேருந்து நிலையத்தின் எல்லையுள் இருந்த ஒரு குழாய் நீர் பெறுமிடமும் தற்போது பேருந்து நிலைய எல்லைக்கு வெளியே உள்ளதோடு அதுவும் பழுதடைந்துவிட்டது.

குழந்தைகளையும், சிறுவர்களையும் பிரயாணத்திற்காக கொண்டுவருவோர் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கின்றனர். குறிப்பாக திருமலையிலிருந்து தூர இடமான வவுனியாவுக்கு பிரயாணம் செய்வோர் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கின்றனர். திருமலையிலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் பேருந்து சுமார் 30 மைல்களுக்கு அப்பால் உள்ள ஹொரவப்பத்தானையை அடையும் வரை இதற்கிடைப்பட்ட பிரதேசத்தில் தற்போது ஒர தமிழ் கிராமம் கூட இல்லை. நீர் பெறுவது கடினமாகும். திருமலைக்கும் ஹொரவப்பத்தானைக்கும் இடையில் ஆறு பரிசோதனை நிலையங்கள் உண்டு.

ஆகவே தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் திருமலை பேருந்து நிலையத்தினுள் குழாய் நீர் பெற வசதி செய்து கொடுப்பது சுகாதாரத்தை பேண வழிவகுப்பதோடு வரவேற்கத்தக்க ஒரு விடயமுமாகும்.

ரீ.ஏ.. சிபுனிஸ்-குச்சவெளி.

## புகார் பெட்டி

## நன்றியும்- கவலையும்

30.09.93 அன்று தினமுரசு தகவல் பெட்டியில் ஹப்புத்தளை பிள்க்வூட் தோட்டத்திற்கு அருகில் கொழும்பு பிரதான வீதியில் இருந்த அறிவிப்புப் பலகையில் தமிழ் மொழி மிகக் கொடூரமாக குதறப்பட்டிருப்பதை, படத்துடன் வெளியிட்டிருந்தது. கடந்த வாரம் மீண்டும் அங்கு சென்றிருந்த போது அந்த அறிவிப்பு பலகை திருத்தப்பட்டிருப்பதைக் கண்டேன். தவறைச் சுட்டிக்காட்டிய தினமுரசிற்கும் புண்ணியவான்களுக்கும் நன்றி. இன்னும் இலங்கை முழுதும் எத்தனை அறிவிப்புப் பலகைகளில் எப்படி எல்லாமோ தமிழ் கொலை நடத்தப்பட்டிருக்கலாம். அவை அனைத்தையும் சுட்டிக்காட்டியபின் தான் திருத்த வேண்டுமா? வெள்ளம் வந்தபின்தான் அணைகட்ட வேண்டுமா?

செ. ஆனந்த ராஜா
கொழும்பு-11.

## பாலமுனையில் ஒரு குறை

அட்டாளைச்சேனை செயலகப் பிரிவில் உள்ள ஒரு சிறிய கிராமம் தான் பாலமுனை. இங்கு நெற்செய்கைக் காணிகள் இருந்தும் நீர் வசதியற்று, செய்கை பண்ணமுடியாமல் வறுமையின் கொடுமையால் கண்ணீர் சிந்தும் ஏழை மக்கள் ஆயிரமாயிரம். இதை எத்தனையோ முறை நிவர்த்தி செய்ய எடுத்துச் சொல்லியும் எவருமே முன் வருவதாகத் தெரியவில்லை. இதன் பின்னராவது இதனைச் சீர் செய்து தரும்படி உரிய அதிகாரிகளிடம் ஊர்மக்கள் சார்பில் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

-பாலமுனை வாஹிட்-

## பரீட்சைப் பெறுபேறுமில்லை? அதனால் நியமனமுமில்லை?

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் (கிழ்த்தரம்) பதவிக்கான போட்டிப்பரீட்சை சென்ற 1993 ஆகஸ்ட் 22ம் திகதியன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்டது, இப்பதவியின் 08 (எட்டு) வெற்றிடங்களுக்காக ஆயிரத்திற்கு மேற்பட்டோர் விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். எனினும் பரீட்சை நடந்து மூன்று மாதமாகியும் இப்பரீட்சையின் முடிவு வராதது கண்டு பரீட்சார்த்திகள் கவலையடைந்து நம்பிக்கையிழந்துள்ளனர். பரீட்சை முடிவுகள் வராதா எனத் தினமும் அங்கலாய்த்த வண்ணமுள்ள மேற்படி பரீட்சார்த்திகளுக்கு இனிமேலாவது கிழக்குப் பல்கலைக்கழகம் பரீட்சைப் பெறுபேறுகளை அறிவித்து நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமா?

ஏ.எச்.ஏ. ஹுஸைன்
ஏறாவூர்.

## தரமான தமிழ் திரைப்படங்களுக்கு தட்டுப்பாடா?

எமது அரசாங்க தொலைக்காட்சி
நிலையத்தவர்களுக்கும் தனியார்
தொலைக்காட்சி
நிலையத்தவர்களுக்கும் நல்ல தரமான
தமிழ் திரைப்படங்கள்
கிடைப்பதில்லையா? தரமான பழைய
தமிழ் படங்களுக்கு தட்டுப்பாடா?
அல்லது தம்பி.வே சண்முகநாதன்
கடந்தவாரம் முரசில் சுயாதீன
தொலைக்காட்சியைப் பற்றி
விமர்சிக்கும் போது தமிழ் மக்கள் மீது
இத்தனை வெறுப்புணர்ச்சியா? என்று
கூறியது உண்மையா?
ரூபவாஹினியானாலும் சரி, சுயாதீன
தொலைக்காட்சியானாலும் சரி,
எம்.ரீ.வீ. ஒளிபரப்பானாலும் சரி.
நல்ல தரமான தமிழ்
திரைப்படங்களை ஒளிபரப்புச்
செய்தால் என்ன? சமீபத்தில்
எம்.ரீ.வீ. தொலைக்காட்சியில்
"சும்பவம்" தமிழ் திரைப்படம்
ஒளிபரப்பானது. நாமும் தமிழ்
திரைப்படம் பார்த்தோம்.
எமக்காகவும் தமிழ் திரைப்படம்
போடுகிறார்கள் என்று
கூறிக்கொள்ளலாம். அவ்வளவுதான்.
இனிமேலாவது ஒளிபரப்பப்படும் தமிழ்
திரைப்படங்கள் தரமானதாக
ஒளிபரப்பப்படும் என்று
எதிர்பார்க்கலாமா?

எஸ்.சிவகுமார்
நமுனுக்குல.

## எம்.ரி.வி. யாருக்கு?

இலங்கையில் போதியளவு தொலைக்காட்சி நிலையங்கள் இருந்தும், தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படும் நேரம் மிகச் சொற்பமே. எந்த நிலையத்தைத் திறந்தாலும் சிங்கள நிகழ்ச்சிகளுக்கு அடுத்தபடியாக ஆங்கில நிகழ்ச்சிகள் பெருவாரி. தமிழ் நேயர்கள் எவ்வளவோ இதை விமர்சித்தும் பயன் ஏதும் இல்லை. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தால் இலங்கையில் சிங்கள மக்களுக்கு அடுத்தபடியாக ஆங்கிலேயர்தான் இருப்பார்கள் போல் என்ற பிரமை ஏற்படுகிறது.

நிகழ்ச்சி அமைப்பாளர்களே! அண்மையில் எம்.ரி.வியில் ஒளிபரப்பப்படும் 'மகாபாரதம்' ஒரு அறிவுசார் காவியம். மாணவ மாணவியர்க்கு ஒரு பாடப்பகுதி. சைவம், வைஷ்ணவம் என்ற வேறுபாடு இல்லாத இலங்கை பௌத்தர்களுக்கும், இந்துக்களுக்கும் ஒரு பக்திக்காவியம். இதில் அடங்கியுள்ள பொறுமை, சாந்தி, சமாதானம், வீரம், தருமம், பெரியோரைக் கனம்பண்ணுதல், போன்ற அம்சங்கள் நற்பிரசைகளுக்கோர் வழிகோலி. இப்படியான ஒரு சரித்திரத்தின் அறிவுறுத்தல்கள் ஒவ்வொரு இன, மத மக்களையும் சென்றடைய வேண்டும். அப்படியானால் தான் நிகழ்ச்சி அமைப்பில் ஒரு பூரணத்துவம் ஏற்படும். இலங்கை ஒரு சிறிய நாடு. உள்ளது இரண்டே இரண்டு மொழிகள்தான். மகாபாரதத்தின் மொழிபெயர்பை சிங்களத்தில் போடுவதுடன் தமிழிலும் போடலாமே. இதில் என்ன கஷ்டம்?

ஐயா! இது எனது ஆதங்கம் மட்டுமல்ல. என்னைப் போல் பல நேயர்களின் அங்கலாய்ப்பே. எங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளும் இலங்கை அரசினால் முத்திரை ஒட்டப்பட்டு அனுமதிதரப் பட்டவைதான். தயவு செய்து ஆயிரத்துள் ஒன்றாக நடைபெறும் இப்படியான படங்கள், மாணவ மாணவியர் சம்பந்தமான நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் போது கொஞ்சம் கருணை காட்டவும். ரி.வி. வாங்கும் ஒவ்வொருவரும் 'டெக்'கும் வாங்க வேண்டுமென்பதை ஏற்படுத்திவிடாதீர்கள்.


க.வசீகரன்
கொழும்பு-09.

## "முத்திரை வாங்க மூன்று மைல்"


கனுல்வெலை மக்கள் கடிதங்கள், போடுவதாகயிருந்தாலும், முத்திரைகள் வாங்குவதாக இருந்தாலும் அல்லது தந்திகள் அனுப்புவதாக இருந்தாலும் மூன்று மைல் தொலைவிலுள்ள பிபிலைக்கே செல்ல வேண்டியுள்ளது. மற்றும் இக்கிராமங்களுக்கு வரும் தபால்கள் மிகவும் தாமதமாகவே வந்து சேர்கின்றன. மிக முக்கியமான தபாலாகயிருந்தும் அல்லது தந்திகளாக இருந்தாலும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு பின்தான் வந்து சேர்கின்றன.

எனவே, சம்மந்தப்பட்டவர்கள் விரைவில் கனுல்வெலை கிராமத்திற்கு தபாலக மொன்றை பெற்றுத் தந்தால் மிகவும் நன்றிக்குரிய விடயமாகும்.


செல்வன். எச். ஏ. நஸார்-பிபிலை.



எக்ஸ்ரே ரிப்போர்ட்



# அன்று அமுதர் கையாண்ட அரசியல் சாணக்கியம் அதுவே இன்று புலிகளின் அரசியல் தந்திரம்



நாரதர்

தலைநகர நிலவரம் கடந்த வாரம் முழுக்க ஒரே பரபரதான்.

வடக்கு-கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து கொழும்பில் வாழும் சகல தமிழர்களும் சௌபாக்கியமாக இருப்பதாக யாராவது நினைத்தால் அது பொய்.

சகல வசதிகளும் பொருந்திய வீடென்று சொல்லி பை நிறைய முற்பணம் வாங்கிவிட்டு பின்னர் படிப்படியாக நிபந்தனைபோட்டு சகல வசதிகளையும் பறிக்கும் சில வீட்டு உரிமையாளர்களோடு மல்லுக்கட்டுவதில் ஆரம்பித்து, ஆயிரத்து எட்டுப் பிரச்சனைகள்!

கொழும்பு வாழ்க்கை அப்படி ஒன்றும் சுகமான சுவையானதல்ல.

என்றாலும் வடக்கு-கிழக்கு நிலைமைகள், ஊரை நினைத்துப் பெருமூச்சு விட்டபடி, எப்படியோ நாட்களை நகர்த்திச் சென்றால் போதும் என்ற கட்டத்தில் வாழ வைக்கின்றன.

இவ்வாறான வாழ்க்கை நிலையில் சமீப காலமாக பரவும் வதந்திகள் இடைக்கிடையே பரபரப்பை ஏற்படுத்தித் தொலைக்கின்றன.

நெருப்பில்லாமல் புகையாது என்பார்கள். வதந்திகளுக்கு அது எந்தளவுக்குப் பொருந்தும் என்று தெரியவில்லை.

'கண்டியிலே ஒரு கடை எரிகிறது' என்று கொழும்புக்கு வந்து சொல்லும் ஒரு வதந்தி.

'கொழும்பிலே பிரச்சனை ஆரம்பமாகி விட்டது' என்று இன்னொரு வதந்தி போய் கண்டியிலே கதையளக்கும்.

இப்படித்தான் கடந்த வாரம் கொழும்பிலே முக்கியமாகவும், பிற பகுதிகளில் சின்னதான அளவுகளிலும் வதந்திகள் சிலந்திகள் போல கூடு கட்டிக் கொண்டிருந்தன.

'வதந்திகளையிட்டுக் கவலைப்பட வேண்டாம்' என்று பாதுகாப்புப் படையினர் தரப்பில் இருந்து சொல்லப்பட்டது.

பாதுகாப்புப்படையினர் பற்றிய நம்பிக்கை யீனங்கள் ஏற்பட்டுள்ளதாலும், ஏற்படுத்தப் படுவதாலும் அவர்கள் கூறும் உறுதிமொழி களையும் முற்றாக நம்ப முடியாத நிலையில் வதந்திகள் வெற்றிகரமாகப் பவனி நடத்திக் கொண்டிருந்தன.

நாட்டின் பாதுகாப்பு அமைப்புக்கள் மீது பரவலாக ஏற்பட்டுள்ள நம்பிக்கை யீனங்களையே வதந்திகளின் ஆதிக்கம் வெளிப்படுத்தியது.

என்றாலும், பாதுகாப்புப்படையினர் குறை சொல்ல முடியாத வகையில் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டிருந்ததை தலைநகரில் அவதானிக்க முடிந்தது.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் மிகுந்த கவனத்தோடு கண்காணிப்புக்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் செய்யப்பட் டிருந்தன.

வேண்டுமென்றே குழப்பத்தை ஏற்படுத்தி குளிர்காயக் கூடியவர்கள் என்று சந்தேகப்பட்ட வர்களை பொலிஸ் பட்டியல் போட்டு தேடிப்பிடித்தது.

ஆயினும் வடக்கிலே போர் முனையில் ஏற்படும் இழப்புக்களுக்குப் பதிலீடாக தெற்கே தமிழர்கள் தாக்கப்படலாம் என்றொரு வதந்தி பரவியது. அதற்கு நம்பகமான ஒரு தோற்றப்பாடும் ஏற்பட்டது என்று சொன்னால் இன ஒற்றுமை என்பது கத்தி முனையில் கயிற்றின் மீது நடந்து செல்லும் நிலையில்தான் இன்னும் இருக்கிறது என்றுதானே அர்த்தம்.

பத்திரிகையாளர் முதல் பட்டாணிக் கடை வைத்திருக்கும் சாதாரண சிங்கள குடிமகன் வரை பிரச்சனை வரும் என்று பயந்தார்கள். அப்படியானால் தம்மிடையே இன்னமும் இனவாதத்தை தூண்டும் சக்தியொன்று இருக்கிறது என்று அவர்கள் நம்புகிறார்கள் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

இங்கே யார் இன மோதலை ஏற்படுத்த முடியும்? அது நடக்காது என்று நம்பகமான உறுதியுடன் வதந்திகளைப் புறக்கணிக்கக் கூடிய சூழல் இன்னமும் ஏற்படவில்லை.

அவ்வாறான சூழலை ஏற்படுத்தாதவரை இன ஒற்றுமை என்பது நூலில் ஆடும் பட்டம் போலப் படபடத்தபடிதான் இருக்கும்.

■

சிங்கள மொழியில் வெளிவரும் ஒரு பத்திரிகை.

பெயரைச் சொன்னால் விற்பனையாகாத அந்தப் பத்திரிகைக்கு விளம்பரம் செய்வதாகி விடும். அதனால் பெயர் வேண்டாம்.

விசத்தைக் கக்கியிருக்கிறது. நரகல் வார்த்தைகளால் நாட்டின் சட்டமாஅதிபரைக் கூட சாடியிருக்கிறது.

பூநகரி மோதலின் பின்னர் பழிக்குப் பழி வாங்குவது என்று வெறித்தனமாக எழுதி வதந்திகளுக்கு ஓரளவு வலுவூட்டியதிலும் அந்தப் பத்திரிகைக்கும் ஒரு பங்கு இருக்கிறது.

இனவாதம் விலை போகும் என்ற நம்பிக்கையில் அந்தப் பத்திரிகை, கடை விரித்திருக்கிறது.

முன்னர் எமது தினமுரசு பற்றியும் அந்தப் பத்திரிகை பொய் தவிர வேறெதுவும் கலக்காமல் எழுதியிருந்தது.

இந்திய டுடே சஞ்சிகையில் வெளிவந்த புலிகள் அமைப்பினரின் ஒரு படத்தை வெளியிட்டு, அதுதான் தினமுரசு அலுவலகம் என்று அழகாகப் பொய் சொல்லியிருந்தது.

அவ்வாறான பொய்களாலும் விலை போகாத பத்திரிகையை விசம் நிரப்பி விற்பனை செய்யப் புறப்பட்டிருக்கிறார்கள்.

இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு நிதி கொடுக்கப்போகிறார்களாம்.

சிங்கள இளைஞர்களைத் திரட்டி தேசிய எழுச்சி ஊட்டப் போகிறார்களாம்.

சுருக்கமாகச் சொன்னால் பையை நிரப்பிக் கொள்ள ஒரு பாங்கான திட்டம் போட்டிருக்கிறார்கள்.

தங்கள் பத்திரிகையின் விற்பனையைப் பெருக்குவது பிரபாகரனின் கன்னத்தில் அறை வதற்கு சமமாக இருக்குமாம்.

வரே வா! என்னே தந்திரம்! இனவாதம் இங்கே யாருக்கெல்லாம் பயன்பட்டு வந்திருக்கிறது. எப்படியெல்லாம் பயன் படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு மற்றொரு சாட்சி இது.

வாக்குத் தேட வேண்டுமா? இனவாதம் பேசு. பொதுமக்களின் பிரச்சனையைத் தீர்க்க உன்னிடம் திட்டம் இல்லையா? போக்குக் காட்ட இனவாதம் பேசு. இப்படித்தான் அரசியலை சம்பாதிக்கும் தொழிலாக மாற்றியவர்கள் இனவாதம் வளர்த்தார்கள்.

போதாக்குறைக்கு பத்திரிகையாளர்கள் என்று தங்களை அழைத்தபடி சிங்கள வர்களுக்காக, தமிழர்களுக்காக, முஸ்லிம் களுக்காக என்று பிரித்து எழுதி பேதம் வளர்த்து தங்கள் பெயரை பிரபலமாக்கிய வர்களும், பையை நிரப்பிக்கொண்டு போனவர்களும் என்று நிறையப்பேரை பார்த்தாகிவிட்டது.

தற்போது அவ்வாறான முயற்சிகளுக்கு ஆர்வமான வரவேற்பு கிடையாது.

என்றாலும் எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம் என்பது போல குறிப்பிட்ட பத்திரிகை குட்டையைக் குழப்பிவிடப் பார்க்கிறது.

அந்தப் "பத்திரிகை" சொல்வதை யாரும் ஒரு பொருட்டாக எடுக்கப் போவதில்லை.



## அரசியல் சதுரங்கத்தில் ஆளும் கட்சியும்-எதிர்க் கட்சிகளும் விஜயதுங்கா வெல்லுவாரா?

அதன் கருத்துக்களுக்கும் மதிப்பிருக்கப் போவதில்லை.

ஆனாலும், விசம் கக்கும் சுயநல சக்திகள் தலைநீட்டிக்கொண்டே இருக்கின்றன என்பது கவனத்திற்குரியதாகும்.

■

யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினர் மாவீரர் தினம் நடத்தி முடித்துள்ளனர்.

வருடா வருடம் தமது பலியான உறுப்பினர்களது பட்டியலை வெளியிடுவது புலிகள் அமைப்பினரது வழக்கமாகும்.

தமது தரப்பில் இதுவரை காலமும் பலியானவர்களின் மொத்த எண்ணிக்கை 6100 பேர் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

அதில் பெண் உறுப்பினர்களும் இருக்கிறார்கள். 500 பெண்கள் வரை பலியானதாக புலிகளின் மாவீரர் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆறாயிரத்து நூறுபேர் பலியானது என்பது சாதாரண விசயமல்ல.

தமிழீழமே புலிகளின் தாகம் என்ற கோசத்தின் அடிப்படையில் திரட்டப்பட்ட இளைஞர்களும் பெண்களுமே போர் முனையில் உயிர் துறந்திருக்கிறார்கள்.

இதனை புலிகள் அமைப்பினர் தமது தியாகச் சாதனையாக கூறிக்கொள்கின்றனர்.

ஆனால் இதுவே புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை தமிழீழத்திற்கு குறைந்த தீர்வுக்கு உடன்பட முடியாதவராகவும் கட்டிப் போட்டிருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இத்தனை உறுப்பினர்களை இழந்து போக காரணமாக இருந்த ஒரு கோரிக்கையை கைவிட்டு குறைந்தபட்சமாக சமஷ்டித் தீர்வுக்கு உடன்படுவது கூட சாத்தியமில்லை என்றே தெரிகிறது.

பாரிய பலி கொடுப்புக்கள் எதுவும் இல்லாமல் வெறுமனே உணர்ச்சியைத் தூண்டும் பேச்சுக்களை மட்டுமே வெளியிட்டுக் கொண்டிருந்தவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினர்.

அடுத்த தேர்தலுக்குள் தமிழ் ஈழம், அடுத்த மே தினத்தில் தமிழ் ஈழம், அடுத்த பொங்கலுக்குள் தமிழ் ஈழம் என்று அதிஷ்டலாபச் சீட்டில் வந்துவிடும் பரிசு போல சித்தரித்து அவர்கள் மேடைகளில் முழங்கினார்கள்.

77 தேர்தல் முடிந்ததும் மெல்ல மெல்ல அவர்களது பேச்சுத் தொனி மாறுவதாகத் தெரிந்தது. தீவிரப் போக்கும் குறைந்தது.

இளைஞர்களின் இதய தெய்வமாக, தளபதியாக கருதப்பட்ட அமரர் அமிர்தலிங்கம் மீதே நம்பிக்கையீனங்கள் ஏற்பட்டன.

மாற்றுத்திட்டம், தமிழீழக் கோரிக்கையை மறுபரிசீலனை செய்வது போன்ற கருத்துக்களை அமுதர் வெளியிட்டபோது இளைஞர்களின் இரத்தம் கொதித்தது.

இப்போது புலிகள் அமைப்பினர் கூட சமஷ்டிக்கு தமது தலைவர் தயார் என்று கூறுகின்றனர்.

அமுதர் அப்படிக் கூடப் பேசவில்லை. "மாற்றுத்திட்டம் இருந்தால் அரசு முன்வைக்கட்டும். அதனை மக்களின் தீர்ப்புக்கு விட்டு அவர்களது ஆணையைப் பெறுவதற்கு நாம் தயார்." என்றே கூறினார்.

அதனைக் கூட அன்று பொறுக்க முடியவில்லை. அப்படிப் பேசுவது அரசியல் சாணக்கியம் என்று அமுதர் விளக்கம் அளித்த போதும் ஏற்கப்படவில்லை.

அதற்கு முக்கிய காரணமும் அமுதர்தான். அவர் தன்னைப் பற்றி உருவாக்கியிருந்த சமரசத்திற்குத் தயாராக இல்லாத தாளைத் தளபதி என்ற தோற்றமே அவரது சாணக்கியத்திற்கு இடம் தரமறுத்தது.

கூட்டணியினர் உருவாக்கிய உணர்ச்சி வெள்ளம் அவர்களால் அணைபோட முடியாதவாறு கட்டுமீறிப் புரண்டு வந்து இறுதியில் அவர்களையே அடித்துச் சென்றது.

அந்த அனுபவம் பிரபாகரனுக்கு தெரியாததல்ல.. அதனால்தான் தமிழீழத்திற்கு குறைந்த தீர்வுகள் பற்றிய பேச்சுக்கள் பிரபாகரனின் வாயில் இருந்து நேரடியாக வருவதில்லை.

இப்போது கூட திரு. பால்சிங்கம் தான் சொல்லியிருக்கிறார், "எமது தலைவர் சமஷ்டிக்கு தயாராக இருக்கிறார்," என்று அவர்தான் கூறியிருக்கிறார்.

ஆனால் பிரபாகரன் அநாதைச் சிறுவர்கள் இல்லத் திறப்பு விழாவிலும் தமிழீழத்தின் எதிர்காலச் சிற்பிகள் பற்றியே பேசுகிறார்.

சமஷ்டி தீர்வுக்கு புலிகள் தயார் என்று திரு. பாலசிங்கம் அறிவித்திருப்பது அரசாங்கம் இனப்பிரச்சனையே இல்லை என்று அறிவித்த பின்னர் ஏற்பட்ட நம்பிக்கையில்.

அதாவது, சமஷ்டி வழங்க அரசு முன்வராது என்ற நம்பிக்கையில் அப்படிப் பேசியிருக்கிறார்.

இது அமுதர் பயன்படுத்திய அரசியல் தந்திரம்.

முன்னர் அமுதர் அந்த தந்திரத்தைப் பயன்படுத்தியபோது திரு. வே. பிரபாகரன் முதிரா இளைஞராக இருந்தார்.

அதுதான் அமரர் அமுதர் இளைஞர் களுக்கு வேகமும் வேண்டும். விவேகமும் வேண்டும் என்று சொல்லியிருந்தார்.

இப்போது பிரபாகரனுக்கு ஏற்பட்டுள்ள அனுபவம் விவேகமும் தேவை என்பதை உணர்த்தியிருப்பதாகக் கருதலாம்.

இதனை அவர் முன்கூட்டியே உணர்ந்திருந்தால் அமிர்தலிங்கம் போன்ற நீண்டகால அரசியல் அனுபவத் தொடர்ச்சி உள்ள தலைவர்களை தமிழ் மக்கள் இழக்கவேண்டி ஏற்பட்டிருக்காது.

ஆனால், திரு. பிரபாகரன் தமிழீழத்துக்கு குறைந்த தீர்வுகளுக்கு முன்வந்தால் அமுதர் சந்தித்த உணர்ச்சி வெள்ளத்தை விட ஆயிரம் மடங்கு அதிகமான உணர்ச்சி வெள்ளத்தை எதிர்கொள்ள வேண்டிவரும்.

ஆறாயிரம் உயிர்கள் இழக்கப்பட்ட பின்னர் ஆற அமர இருந்து அரசியல் சாணக்கியம் பேச முற்படுவது எரிமலைக்கு மேலே இருந்து மகுடி வாசிப்பது போன்றது. அது பிரபாகரனுக்கும் தெரியும். சில விமர்சகர் களுக்கு வேண்டுமானால் தெரியாமல் போகலாம்.

■

இனப்பிரச்சனைக்கு உடனே தீர்வுகாணவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் சில உரத்துச் சொல்லியிருக்கின்றன. சிறிமாவோ பண்டாரநாயக்காவும் இனப் பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காணவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்.


இனப்பிரச்சனையின் தீவிரத்தையும் அதன் விளைவுகளையும் எதிர்க்கட்சிகள் உணர்ந் திருப்பது நல்லதொரு மாற்றம்தான்.

இந்த மாற்றத்தை எட்டுவதற்கே இத்தனை காலங்கள். எத்தனை இழப்புக்கள்?

ஆனாலும் எதிர்க்கட்சிகளின் பேச்சிலே பந்தை அரசாங்கத்தின் பக்கம்

(6ம் பக்கம் பார்க்க...)

## அதிரடி அய்யாத்துரை



இந்த வதந்தி இருக்குதே பாருங்கோ பொல்லாத போக்கிரி. எங்கையிருந்து வருகுது எண்டும் தெரியாது. எங்கை வரையும் போய் நிக்கும் எண்டும் தெரியாது. ரெண்டு கிழமையா கொழும்பை ஒரு கலக்குக் கலக்கிப்போட்டுது. இரு இன மக்களும் ஒவ்வொரு விதமா, நினைச்சு பயந்து கொண்டிருந்தது தான் பரிதாபம் பாருங்கோ.

தாண்டிக்குளம் எண்டு யார் பெயர் வைச்சது எண்டு தெரியேலலை. அதைத் தாண்டிவாறதே பெரிய பாடாய் இருக்குது. இரண்டு எழுத்துக்காரரும் சனம் தாண்டும் நேரமாப்பார்த்துத்தான் துவக்கை முழங்க வைக்கினம். அண்மையிலும் அப்படித்தான் நடந்தது. ஆனால் அவை அப்பிடிச் சுடுறது இது முதல் முறையிலலை. சண்டையிலை சனம் இடையிலை சிக்குப்படுறதைப் பற்றி யார்தான் கவலைப்படுறது? நினைச்சா கவலை வரும். நினைக்கிறது தெரிஞ்சா சிலருக்கு கோபம் வரும். அதாலை 'நினைக்கத் தெரிஞ்ச மனமே அதனை வெளியே சொல்லாதே' எண்டு பாட வேண்டியதுதான்.

தொலைக்காட்சிகளில் நல்ல நல்ல இங்கிலீஸ் படங்கள். ஹெலிகொப்டரிலை இருந்தும் சுடுகினம். கீழே இருந்தும் சுடுகினம். அதென்னவோ தெரியாது தமிழ்ப் படங்கள் போடேக்கை மட்டும் கத்தரிக்கோல் பாய்ஞ்சு வெட்டுது. தமிழிலே பேசிக்கொண்டு சுட்டால் மட்டும்தான் வன்முறையோ? எனக்கு ஒண்டுமா விளங்கேல்லை. அது கிடக்க இன்னொரு கேள்வி. எத்தனையோ தமிழ்ப்படங்கள் இருக்க பிறகேன் வெட்டியெறிய வேண்டிய காட்சிகள் உள்ள படங்களை போட வேணும்? அதைப் போடுவானேன் பிறகு வெட்டுவானேன்? சம்பந்தப்பட்டோரே சற்று யோசித்துப் பாருங்கோ.

அயல்நாட்டு தமிழ் நாடகங்களை சிங்கள மொழிக்கு மாற்றிக் கொடுக்கிற சிலர் செய்யிற சுத்துமாத்துக்கள் எக்கச்சக்கம். சம்பந்தப்பட்ட நாடகக்காரர்களிடம் உரிமை வாங்காமல் ஒளிபரப்பாகும் விசயம் தெரிஞ்சு போச்சு. வழக்குப் போட வேண்டி வரும் என்று சமீபத்திலை இலங்கை வந்த நகைச்சுவை நடிகர் ஒருவர் சொல்லிப் போட்டுப் போயிருக்கிறாராம். உரிமையாளர்களுக்கு கொடுக்க வேண்டியதை வாங்கி தங்கட பொக்கற்றுக்குள் போட்டுக் கொள்ளுறவை பாடு கஷ்டமாகப் போகுது. இப்ப நாடகத்தைப் பார்த்துச் சிரிக்கிறவை பிறகு அவையையும் பார்த்துச் சிரிக்க வேண்டி வருமல்லோ.

மற்றமொழி நண்பர் ஒருவர் எங்கட மொழிக்காரர் ஒருவரைப் பார்த்துக் கேட்டாராம். "எங்கை பிறந்த நாள் பார்ட்டி?" அவர் கேட்டது போன 26ம் திகதி. நண்பர் சொன்னாராம்- "அதெல்லாம் கிடக்கட்டும். இஞ்சை வதந்தி பரப்பியே அவற்றை பிறந்த நாளை பிரபலமாக்கிப் போட்டியள். இலவசமான பிறந்தநாள் விளம்பரம் மாதிரி சில சிங்களப் பத்திரிகைகளும் செய்திருக்கினம்." நண்பர் சொன்னதிலை நியாயம் இருக்குது. அவலை நினைச்சு உரலை இடிச்ச கதையும் நினைவுக்கு வருகுது.

சும்மா சொல்லக்கூடாது. தலைநகரிலை குழப்பம் செய்யக்கூடிய ஆட்களை சீருடையினர் குறிவைச்சுப் பிடிச்சு உள்ளுக்கை வைச்சிருந்தவை. தன்னி முகப்பாத்தியிலை சந்தியளிலை நிண்ட சனபேரை ஒரே அமுக்கு. அது உள்ளுக்கை போனால் சிலருக்கு தேவையில்லாத யோசனை வரும். முன்கூட்டியே யோசிச்சு செய்த நல்ல காரியத்தை பாராட்டத்தான் வேணும்.

அகதிகள் விசயத்திலை கொழும்பிலை இருக்கும் இந்து நிறுவனங்கள் சில நடந்து கொண்ட முறை சரியில்லை எண்டு அகதிகள் பலர் குறைப்படுகினம். "சேவை எண்டு சொல்லுறவை அகதியள் எங்கை வேணுமெண்டாலும் போய் சாவை அணைக்கட்டும் எண்டு நினைப்பது முறையோ" எண்ட மாதிரிக் கேக்கினம்.

இப்ப வாற பாடல்களிலை வார்த்தைப் பஞ்சம் வாட்டுது பாருங்கோ. அதொண்டுமில்லை. அந்தக்காலத்திலை எழுதினவை வர்ணிக்கக்கூடிய வார்த்தையளை எல்லாம் பாவிச்சுப் போட்டு போட்டினம். ஐயனாரிதனார் என்று ஒரு புலவர். புறப்பொருள் வெண்பாமாலை எழுதினவர். ஒரு இடத்திலை அழகான பெண்ணுக்கு அடுக்கியிருக்கிறார் பாருங்கோ உவமை

"தாமரை மேல் வைகிய தையல் கொல் தாழ் தளிரில்
காமரும் வானோர்கள் காவிகொல்- தேமொழி
மையமர் உண் கண் மடந்தை கண்
ஐய மொழியாது ஆழுமென நெஞ்சே."

இது சத்தியமா தமிழ்தான். விளக்கம் கேளுங்கோ. இதழ்களில் இனிய மொழி. மையுண்ணும் கண்கள். இவள் தாமரை மலரில் தங்கிய திருமகளோ? வானோர்களது காதலியான தெய்வமகளோ? இவள்தான் யாரோ? ஐயம் வருகிறது. ஆசையும் வந்துவிடுகிறது. துயரமும் வருகிறது. விடை அறியும்வரை துயரம்தானே? பாட்டெண்டா இதுதானுங்கோ பாட்டு.

# இராணுவம் நினைத்தால் ஆட்சி நிலைக்காது!

## முன்னாள் தளபதியின் துடுக்கான பேச்சு

## இந்தோனேசியாவில் சர்ச்சை!

முன்னாள் இராணுவ அதிகாரிகள் சிலருக்கு ஓய்வு பெற்றபின்னர் வாய் சும்மா இருக்காது.

துடுக்குத்தனமாக ஏதாவது பேசி சம்பந்தப்பட்ட அரசாங்கங்களை



### உலக ரவுண்டப்

சங்கடத்தில் நெளிய வைத்துவிடுவார்கள்.

இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி சுந்தர்ஜி வாய்திறந்த போதும் இந்திய அரசுக்கு அப்போது மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலை எற்பட்டது.

இப்போது இந்தோனேசியாவின் முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் வாய்திறந்திருக்கிறார்.

அவரது பெயர் மேஜர் ஜெனரல் செம்பிரிங்மெலியாலா. அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் ஆட்சியில் உள்ளவர்களை கையைப்பிசைய வைத்திருக்கிறது. இராணுவத்தை தலையைச் சொறிந்து கொள்ள வைத்திருக்கிறது.

ஜாக்கர்த்தாவில் வெளிவரும் ஒரு செய்தித் தாளில் மேஜர் ஜெனரல் சேம்பிரிங் மெலியாலாவின் பேட்டி ஒன்று வெளியாகியுள்ளது. அதில் "இந்தோனேசியாவில் இராணுவத்தின் ஒத்துழைப்பின்றி எந்த ஆட்சியும் நடைபெற முடியாது" என்று அழுத்தமாகக் கூறியிருக்கிறார்.

இராணுவத்திலுள்ளவர்களுக்கு இதனால் ஓரளவு பெருமிதம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மைதான்.

ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர்களும் சில அமைச்சர்களும் ஆளும்கட்சிப் பிரபலங்களும் இக்கூற்றினால் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இவர்கள் அரசியலில் இராணுவம் தலையிடுவதை விரும்பவில்லை. இராணுவம் அரசியலிலிருந்து ஒதுங்கியே இருக்க வேண்டும் என்பது அவர்களின் கருத்து.

இளைப்பாறிய மேஜர் ஜெனரல் மெலியாலா ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். அதுமட்டுமல்லாமல் ஜனாதிபதி சுஹார்ட்டோவின் நெருங்கிய நண்பரும் கூட.

பத்திரிகையில் இத்தகைய கருத்து வெளிவந்த அடுத்த நாளே ஜனாதிபதியுடன் கோல்ஃப் விளையாட்டில் ஈடுபட்டுள்ளார். அப்போது ஜனாதிபதி தனது கருத்தைப் பற்றி எத்தகைய கருத்தும் தன்னிடம் கூறவில்லை என்று கூறியிருக்கிறார்.

நீண்ட நெடுங்காலம் அந்நாட்டின் இராணுவத் தலைமைப் பீடத்திலும் அரசியலிலும் ஈடுபாடு கொண்டவரான அவருடைய கூற்றில் உண்மை இருப்பதாகவே பலரும் கருதுகின்றனர். ❑

## திருமதி செல்வியானது எப்படி?

ஆயிரம் பொய் சொல்லியும் ஒரு திருமணத்தை நடத்தலாம் என்று சொல்லுவார்கள்.

ஆனால் ஒரு கொலம்பியா நாட்டு அழகியோ தனக்கு திருமணம் நடக்கவே இல்லை என்று ஒரு பொய் சொன்னாள்.

காரணம்? ஆசை! அழகுராணிப் போட்டியில் வெல்லும் ஆசை.

பொய் சொன்னபோதும் அவள் பேரழகி என்பது மட்டும் உண்மை. அதனால் கொலம்பியா அழகுராணிப் போட்டியில் வெற்றி பெற்றாள்.

அழகுராணிப் பட்டமும் கிடைத்தது. அந்த அழகியின் பெயர் சாந்செஸ்.

சாந்செஸ் பட்டம் பெற்றதை அறிந்தவர்கள் குற்றச்



சாட்டுக்களோடு புறப்பட்டார்கள்.

அழகுராணிப் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் திருமணம் செய்திருக்கக் கூடாது என்பது விதி. ஆனால் சாந்செஸ் திருமணமானவள். எனவே விதியை மீறிவிட்டாள். பொய் சொல்லி பட்டம் பெற்று விட்டாள் என்றனர்.

சாந்செஸ் மறுத்தாள். மறுப்பு நிலைக்கவில்லை. அவளுக்கு திருமணம் செய்து வைத்த மதபோதகர் அத்ற்கான ஆதாரப் பத்திரங்களோடு ஆஜரானார்.

சாந்செஸ் மௌனமானாள். அழகுராணிப் பட்டமும் போனது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை. ●

## ஒழியுங்கள்! துப்பாக்கிக் கலாசாரத்தை!!

உலகத்து நாடுகள் அனைத்திலும் இப்பொழுது துப்பாக்கி கலாசாரம் தலை விரித்தாடுகிறது. பல நாடுகளில் பகிரங்கச் சந்தையில் வகைவகையான நவீன துப்பாக்கி ரகங்கள் எத்தகைய கட்டுப்பாடுமின்றி விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.



அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனை ஜப்பானிலிருந்து சென்ற மசாய்ச்சி ஹட்ரோரியும் அவர் மனைவி மெய்க்கோவும் வெள்ளை மாளிகையில் சந்தித்து உரையாடினர்.

இவர்களுடைய 16வயது மகன் யோஷிஹிரோ அமெரிக்க- ஜப்பான் மாணவர் பரிவாத்தனைத்திட்டத்தின் அடிப் படையில் அமெரிக்காவில் லௌஷியானாவில் கல்வி பயின்று வந்தான். யோஷிஹீரோவை அமெரிக்கக் குடியானவர் ஒருவர் த்துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டார். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கில் கொலை செய்தவர் குற்றவாளியல்ல என்று விடுதலை செய்யப்பட்டார். இதனால் ஜப்பானில் பெரும் பரபரப்பு எற்பட்டது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்கா சென்ற ஹட்டோரி தம்பதியினர், ஜனாதிபதி கிளின்ரனிடம் ஒரு வேண்டுகோளைவிடுத்துள்ளனர். "துப்பாக்கிக் கலாசாரத்துக்கு முற்றுப் புள்ளி வையுங்கள்" என்பதுதான் அந்த வேண்டுகோள்.

## ஒரு "குடிமகனும்" கழுதைச் சவாரியும்

சுவீடன் நாட்டில், ஜுஃஸ்டெல் நகரில் மோட்டார் வண்டிகள் மிக வேகமாக ஓடிக்கொண்டிருந்த ஒரு நெடுஞ்சாலையில் திடீரென போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது. வீதிக் கட்டுப்பாட்டில் ஈடுபட்டிருந்த போலிசார் குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைந்தனர்.




கோவேறு கழுதையொன்றில் ஒரு நபர் அனாயாசமாகப் பாடிக் கொண்டு அந்த வாகன நெரிசல் மிக்க வீதியில் பவனி வந்துகொண்டிருந்தார். 26 வயதுடைய றோல்ஃப் காள்சென் என்ற அந்த நபர் நன்றாகக் குடித்திருந்தார். போக்குவரத்துப் பொலிசார் கோவேறு கழுதையுடன் அந்நபரை வீதியை விட்டு அகற்றி போக்குவரத்தைச் சீர்செய்தனர்.

அவர் வீட்டில் இருந்து மூக்கு முட்டக் குடித்திருக்கிறார். போத்தல் காலி. இன்னும் போட்டால்தான் தெளிவு ஏற்படும் என்று நினைத்தாரோ என்னவோ மோட்டார் வண்டியை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். மதுபான விடுதியில் போய் தன் வயிற்றின் உள்ளே இடம் இருக்கும் வரை நிரப்பிக்கொண்டார்.

போதை தலைக் கேறியதால் மோட்டார் வண்டியில் வந்த விசயத்தை மறந்து விட்டார். வீட்டுக்கு நடந்து போக முடியுமா? முடியாது! என்ன செய்யலாம்? யோசித்தவரின் பார்வையில் அங்கு நின்ற கோவேறு கழுதை தெரிந்தது. கழுதையிருக்க கவலை ஏன்? கிளப்பிக் கொண்டு புறப்பட்டார். ஜாலியான சவாரி.

ஆனால் சவாரி தொடர பொலிசார் விடவில்லை. ஆளைப் பிடித்து அன்று இரவு முழுவதும் பொலிஸ் நிலையத்தில் போட்டுவிட்டனர்.

மறுநாள் நீதிமன்றத்தில் வழக்கு. கழுதையின் உரிமையாளர் நீதிபதியிடம் சொன்னார். "ஐயா கழுதையை களவாடியதற்காக அவருக்கு அபராதம் விதிக்க வேண்டாம். கழுதையை மட்டும் என்னிடம் ஒப்படைத்தால் போதும்." என்றாலும் பொதுமக்களுக்கு இடையூறு செய்தமைக்காக அந்த "பெரும் குடிமகனுக்கு" 143 அமெரிக்க டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டது. நேரம்தான். ●

## மாறு வேடத்தில் இராஜ"தந்திரிகள்"

ஏதன்ஸ் நகரின் பிரதான தெருவான மிதிம்னிஸ் சாலையில் ஒரு வொக்ஸ்வாகன் வண்டி வெகு நேரமாக தேடுவாரற்றுக் கிடந்தது.

நமது நாட்டைப் போல இவ்வண்டி மீதும் போலிசாரின் சந்தேகப்பார்வை விழுந்தது. சோதனை துவங்கியது.

இவ்வண்டிக்குள் ஒரு போலித்தலைமுடி டோப்பா, 9 எம். எம் பிரௌணிங் பிஸ்டல் மற்றும் ஒலிபரப்புக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. இந்த வண்டிக்குரியவர்கள் என்று இருவரை பொலிசார் கைது செய்தனர்.

விசாரணையிலிருந்து இவர்கள் இருவரும் அமெரிக்க இராஜதந்திரிகள் என்று தெரியவந்தது.

இராஜதந்திரிகளுக்கான தனிச்சலுகைகளைப் பயன்படுத்தி வழக்கோ விசாரணையோ இன்றி இவர்கள் இருவரும் அன்றையதினமே நாட்டை விட்டுக் கிளம்பி விட்டனர்.

கிரேக்க தேசத்தில் வன்முறைக் கும்பல்கள் அதிகம். ' அண்மையில் ஏதன்ஸ் நகரில் இடம்பெற்ற சம்பவங்களில் பல நாட்டுப் குடிமக்கள் 10 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர். இவர்களுள் அமெரிக்க படைப் பிரிவைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

இக்கொலைகளைப் பற்றி விசாரணை நடத்துவதற்காகவே இவ்விரு அமெரிக்க இராஜதந்திரிகளும் வந்திருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

வன்முறையாளர்களையும் பயங்கரவாதிகளையும் தேடிக்கண்டுபிடிப்பதில் கிரேக்க நாட்டுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் ஓர் ஒப்பந்தம் இருக்கிறது!

## போவோமா ஊர் கோலம்?



குரங்குக்கு ஒரு ஆசை. சவாரி செய்ய வேண்டும். வாகனம் ஓடத் தெரியாது. நல்ல குதிரையும் கிடைக்கவில்லை. அதனால் நாய்மீது சவாரி செய்து தன் ஆசையை நிறைவேற்றிக் கொண்டது. அவுஸ்திரேலியாவில் நடைபெறும் சர்க்கஸ் காட்சியொன்றில் இந்தச் சவாரி காண்போரை வியந்து இரசிக்க வைக்கிறது. வித்தியாசமான சவாரி தான். அந்த நாயும் தன்னை ஒரு குதிரையாகவே நினைத்துக் கொள்கிறது. பெரிய நினைப்பு.

## குரங்குச் சேட்டை!

மேற்கு இந்தியத் தீவுகளில் ஒன்றான கயானாவில் ஒரு குரங்கு செய்யும் சேட்டைகள் சொல்லி அடங்காது. வீடுகளுக்குள் புகுந்து அங்கிருக்கும் வாசனைப் பொருட்களை உடலில் பூசிக்கொள்கிறது. அதுமட்டுமோ பெண்கள் பூசும் உதட்டுச் சாயத்தையும் விட்டு வைப்பதில்லை. அதையும் எடுத்து போட்டுக் கொள்கிறது. இதுதான் (டா) குரங்குச் சேட்டை.

### எக்ஸ்ரே ரிப்... தொடர்ச்சி

அடித்துவிடுகின்ற நோக்கம் தெரிவதையும் கவனிக்காமல் இருக்க முடியவில்லை.

பிரச்சனைக்கு தீர்வுகாண தமது யோசனைகளை சொல்வதை விட எதிர்த் தரப்பில் உள்ளவர்கள் யோசனையை சொல்லட்டும் என்ற ரகத்திலேயே பேசி வருகின்றனர்.

அரசாங்கமோ எதிர்க்கட்சிகளுக்கு பிடி கொடுத்து விடக்கூடாது என்று நினைத்து தீர்வுகளைத் தனித்து முன்வைக்க தயக்கம் காட்டுகிறது.

பாராளுமன்றத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் சந்திக்கத் தயாராகி வருகிறார் ஜனாதிபதி.

குறித்த காலத்தில் இரு தேர்தல்களும் நடத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

வரப்போகும் தேர்தல்களை கருத்தில் கொண்டே இனிமேல் சகல கட்சிகளும் அரசியல் சதுரங்கத்தில் தமது காய்களை நகர்த்தும்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் ஏற்படும் வெற்றி தோல்விகள் ஆளும் கட்சியை பாதிக்கக்கூடும்.

இனப்பிரச்சனைக்கு அரசால் தீர்வு காண முடியவில்லை. யுத்தத்தில் வெல்ல முடியவில்லை என்கின்ற இரு முக்கிய பிரச்சனைகளையும் மையப்படுத்தி எதிர்க்கட்சிகள் தமது பிரச்சாரங்களை நடத்தும்.

அதனால்தான் இனப்பிரச்சனை இல்லை என்று ஜனாதிபதி சொன்னவுடன் சில எதிர்க் கட்சிகள் உடனே அதனை மறுத்தன.

இனப்பிரச்சனையே இல்லை என்றாகி விட்டால் பின்னர் இனப்பிரச்சனையை அரசால் தீர்க்க முடியவில்லை என்று சொல்லுவதற்கும் வாய்ப்பில்லாமல் போய் விடுமே. அப்படிக்கூட சிலர் கருதியிருக்கலாம்.

எப்படியோ அரசியல் சதுரங்கத்தில் தென்னிலங்கைக் கட்சிகள் வெல்வதிலும், தோற்பதிலும் இனப்பிரச்சனை தீர்வு பற்றிய விசயம் முக்கியமானதாக மாறியிருக்கிறது.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் தரப்பு இப்போது பலமாக இருக்கிறது.

எதிர்க்கட்சிகளின் கோட்டைக்குள் அமைதியாக ஊடுருவி, விரிசல்களை பயன்படுத்தி ஆளும்கட்சி தன் யானைப் பலத்தை தக்கவைக்க முயல்கிறது.

எனினும், அரசியலில் எதுவும் நடக்கலாம்.

யுத்தத்தின் எதிர்காலப் போக்கும் அரசியல் அரங்கில்மாற்றங்களை தோற்றுவிக்கலாம்.

எனவே, அரசியல் சதுரங்க வெற்றி தோல்வியை இப்போதே உறுதியாகக் கணித்துவிட முடியாது. ■

பூநகரியில் புலிகளின் 'தவளைப் பாய்ச்சல்' தாக்குதலின் காரணமாக அரசாங்கமும், பாதுகாப்புப் படையினரும் பெரும் தடுமாற்றத்துக்குள்ளாகியுள்ள நிலையே இன்று காணப்படுகின்றது.

கொழும்பு - காலிமுகத்திடல் தமிழீழ விடுதலைப்புலிகளும் இறந்த படையினர் பலரின் உடல்களை தாம் தகனஞ் செய்ததாகக் கூறியிருந்தனர். அத்துடன் தகனத்துக்குள்ளான உடல்களின் அஸ்த்தியையும் அரசாங்கத்திடம் சேர்ப்பித்திருந்தனர்.

ஆலயங்களையுமே பதம்பார்த்தவையாகக் காணப்படுகின்றன.

இது தவிர வடக்கே வான் பிரதேசத்தில் தோன்றும் ஒவ்வொரு போர் விமானங்களும், ஹெலிகாப்டர்களும், குண்டுகளாகவும் எரிபொருளாகவும்

அலசுவது – இராஜதந்திரி

# யதார்த்த பூர்வமாக அணுகப்படவேண்டிய வடக்கு-கிழக்குப் பிரச்னை!

பிரதேசத்திலேயே இராணுவத் தலைமையகக் கட்டிடங்கள் காணப்படுகின்றன.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தில் ஆட்சேர்ப்புக்கான நேர்முகப்பரீட்சை காலிமுகத்திடல் இராணுவத் தலைமையகத்தில் இடம் பெற்றது.

அப்போது காலிமுகத்திடலின் வீதியோரமாக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நீண்ட கியூ வரிசையில் நேர்முகப்பரீட்சையில் தோற்றுவதற்காக நின்றிருந்தனர்.

இந்த இளைஞர்களின் அநேகமானவர்கள் மிக இளவயதினராகவும்; கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாகவும் காணப்பட்டனர்.

பதினைந்து, பதினாறு வயதுக்குட்பட்டவர்களும் நேர்முகப்பரீட்சைக்கு வந்திருந்தனர். ஐந்தாந்தரம் வரையிலான கல்வியறிவே இராணுவத்தில் சேருவதற்கான ஆகக்குறைந்த கல்வித்தராதரமாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாகவே கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தை எட்டியிராத இளவட்டங்களும் பெருமளவில் நேர்முகப்பரீட்சைக்காக காலிமுகத்திடலை மொய்த்திருந்தனர்.

நீண்ட நேரம் கால்கடுக்க வரிசையாக நின்ற இந்த இளவட்டத்தினருக்கு, காலிமுகத்திடல் புல்தரைக் காட்சிகளும் சுவாரஸ்யமாகவே இருந்தன.

குடைகளை விரித்து அவற்றின் கீழே தம்மை மறந்து சல்லாபம் புரிந்து கொண்டிருந்த காலிமுகத்திடல் காதலர்களைக் கண்டு இந்த இளவட்டங்கள் இடையிடையே நையாண்டியாக விசில் அடித்த வண்ணமும் நின்றனர்.

காலிமுகத்திடலின் கடல் காற்றையும் அனுபவித்தபடி காதல் ஜோடிகளின் சல்லாபங்களையும் ரசித்தபடி ஒருவர் பின் ஒருவராக அந்த இளவட்டத்தினர் இராணுவ தலைமையகத்தினுள் நுழைந்த வண்ணமிருந்தனர்.

தாம் ஒவ்வொருவரும் கம்பீரமாக இராணுவச் சீருடையில் தோன்றும் காட்சியே அவர்களது மனதில் நிழலாடியிருக்க முடியும். அது தவிர இராணுவ நடவடிக்கைகளை மையமாகக் கொண்ட திரைப்படங்களில் தோன்றும் விறுவிறுப்பான கட்டங்களும் அவர்களின் மனக்கண்ணில் தோன்றியிருக்க முடியும்.

இத்தகைய எண்ணங்கள், காட்சிகளால் கவரப்பட்ட அந்த இளவயதினருக்கு நிஜவாழ்வில் ஓர் இராணுவ வீரனாக வாழ்வது எத்தனை அபாயகரமான அனுபவம் என்பது அன்று நேர்முகப் பரீட்சைக்கு கியூவரிசையில் நின்றபோது நிச்சயம் தெரிந்திருக்கமாட்டாது.

இராணுவ சேவையில் சேருவதற்காக நின்றிருந்த இளைஞர்களால் நிரம்பி வழிந்த காலிமுகத்திடல், இன்று அவர்களின் உற்றார் உறவினர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கக் காணப்படுகின்றது.

பூநகரியில் இடம்பெற்ற தாக்குதலையடுத்து நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் பலத்த காயங்களுக்குமுள்ளாகியுள்ளனர்.

உயிரிழந்த பலரின் உடல்களை யுத்தம் இடம்பெற்ற பகுதியிலேயே தகனஞ் செய்தும், புதைத்தும் விட்டதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடும் மோதல் இரண்டு மூன்று தினங்களுக்கு மேலாக இடம் பெற்றதால் இறந்தவர்களின் உடல்களை உடனுக்குடன் அப்புறப்படுத்துவது உசிதமான நடவடிக்கையாக இருந்திருக்க முடியாது.

மோதலில் குதித்திருந்த இராணுவத்தினரும், தப்பியோடிய இராணுவத்தினரும் தத்தமது உயிர்களைக் கையில் பிடித்து நின்றிருந்த வேளை, உயிரிழந்தவர்கள் குறித்து எவ்வகையிலும் சிந்தித்திருக்க மாட்டார்கள்.

எனவே சூட்டுக்காயங்களுடன் இறந்தவர்களின் உடல்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்படாத நிலையில் நிச்சயம் பெருமளவில் சிதைவுற்றிருக்கும்.

இந்நிலையில் அந்த உடல்களை அவை வீழ்ந்து கிடந்த இடங்களிலேயே மீட்புப்பணியில் ஈடுபட்டோர் மண்ணோடு மண்ணாக சங்கமமாக்கி விட்டிருப்பர்.

இது தவிர தாக்குதலை நடத்திய



"நாம் துப்பாக்கிகளை உற்பத்தி செய்கிறோம்; ஏவுகணைகளைத் தயாரிக்கிறோம். போர்க்கப்பல்களைக் கட்டுகிறோம். யுத்தவிமானங்களை உருவாக்கிறோம். ஆனால் கோடிக்கணக்கானவர்களுக்கு உலகில் உண்ண உணவில்லை. உடுக்க உடையில்லை. காலில் அணிவதற்குப் பாதணிகள் இல்லை. தங்குவதற்குத் தகுந்த உறைவிடங்கள் இல்லை.

இத்தகைய மக்களுக்கு செலவிடப்படவேண்டிய பணமே போர்த் தளபாடங்களாக வீணே விரயமாகின்றது."

-முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டுவிட் ஐஸநோவர்-

## யுத்த பூமியில் உருவாகிவரும் 'சமாந்தர வயது வட்டம்'!

இந்நிலையில் சாதாரண சிப்பாய்களின் உற்றார் உறவினர்கள், தத்தமக்குரியவர்களின் நிலையை அறியும் பொருட்டே மிகுந்த ஏக்கத்துடன் காலிமுகத்திடல் பகுதியில் குழுமி நின்றிருந்தனர்.

இவ்வாறு ஏக்கத்துடன் நிற்கும் பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் நாட்டின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்தவர்களாகவும், பெரும்பாலும் கிராமப்புறங்களிலிருந்தே வந்திருப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் மட்டுமே யுத்தம் இடம்பெறுகின்றது என அரசு வெளி உலகுக்குக் கூறிவருகின்றது. ஆனால் அந்த யுத்தத்தின் இழப்புக்கள் நாடு தழுவியவையாக இருப்பதனையே கடந்த வாரம் தென்னிலங்கையின் வீதிகள், சந்திகள், மற்றும் கட்டிடங்களில் பறக்க விடப்பட்டிருந்த வெள்ளைக் கொடிகள் பறை சாற்றியிருந்தன.

யாழ்குடாநாடு கடந்த பத்துவருட காலமாக பல்வேறு வகையான போர் அழிவுகளையும் அனுபவித்த ஒரு பிரதேசமாகவே விளங்குகின்றது. அங்கே அழிவதற்கு இனி எதுவுமே இல்லை என்ற நிலையே தற்போது தோன்றியுள்ளது.

புலிகள் மீதான தாக்குதல்கள், குண்டுவீச்சுக்கள் என்று கூறிக்கொண்டு போடப்பட்ட குண்டுகளில் அநேகமானவை குடிமனைகளையும், அமைதியான தினமும் பல இலட்ச ரூபாய்களைத் தமது அசுரப் பசிக்கு இரையாக்கி வருகின்றன.

இத்தகைய பாரிய விரயங்களை அவதானிக்கும் போது முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டுவிட் ஐஸநோவர் கூறியவை ஞாபகத்துக்கு வருகின்றன.

ஜனாதிபதி டுவிட் ஐஸநோவர் (Dwight Eisenhover) இரு தடவைகள் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர்.

இரண்டாம் உலகப் போரின் போது ஐஸநோவர் நேச நாட்டுப் படைகளின் ஐரோப்பியப் பிராந்தியத்துக்கான பிரதம தளபதியாகக் கடமையாற்றியிருந்தார்.

ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லரின் ஐரோப்பிய ஆக்கிரமிப்புக்களை முறியடிப்பதில் ஜெனரல் ஐஸநோவர் பெரும்பங்கு வகித்திருந்தார். ஹிட்லரின் படைகள் கைப்பற்றியிருந்த ஐரோப்பியப் பிரதேசங்களைக் கைப்பற்றும் வகையில் ஏனைய நேசநாட்டுப்படைத் தளபதிகளுடன் இணைந்து ஜெனரல் ஐஸநோவர் முக்கிய போர்த்திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தியிருந்தார்.

இறுதியாக ஜெனரல் ஐஸநோவரின் இராணுவ செயற் திட்டங்கள் வெற்றியளித்த நிலையில் ஹிட்லரின் நாஸிஸப்படைகள் புறமுதுகு காட்ட ஆரம்பித்தன.

தொடர்ந்து, ஐரோப்பாவை மீட்டெடுத்து இரண்டாம் உலகப்போரில் நேச நாட்டுப்படைகள் வெற்றியைத் தழுவியிருந்தன.

ஜெனரல் ஐஸநோவரின் இராணுவத் தலைமைக்குக் கிடைத்த வெற்றியே அவரைப் பின்னர் இரு தடவைகள் தொடர்ச்சியாக அமெரிக்க ஜனாதிபதிப் பதவியையும் வகிக்கச் செய்திருந்தது.

ஜெனரல் ஐஸநோவர் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதையடுத்து போரின் கொடுமை குறித்து தமது சொந்த அனுபவங்களை வெளியிட்டிருந்தார்.

போரினால் மனித குலத்தின் மாண்பு, மற்றும் அதன் அடிப்படை அத்தியாவசியத் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை ஜனாதிபதி ஐஸநோவர் ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஐஸநோவர் தாம் வெளியிட்ட கருத்தொன்றில் கூறியதாவது:-

"நாம் துப்பாக்கிகளை உற்பத்தி செய்கிறோம். எவுகணைகளைத் தயாரிக்கிறோம். போர்க்கப்பல்களைக் கட்டுகிறோம். யுத்த விமானங்களை உருவாக்குகிறோம்."

"ஆனால் உலகில் கோடிக்கணக்கானவர்கள் உண்ண உணவோ, உடுக்க உடையோ இன்றி வாழுகிறார்கள். காலில் அணிவதற்குப் பாதணி இன்றி இருக்கிறார்கள். தங்குவதற்கு தகுந்த உறைவிடமோ, அல்லது கூரையோ இன்றி அவஸ்த்தைப்படுகின்றார்கள். இத்தகைய மக்களுக்கு செலவிடப் படவேண்டிய பணமே வீணே போர்த்தளபாடங்களாக விரயமாகின்றது." என்று போர்க்காலத்தில் படைகளை வழிநடத்திப் பின்னர் ஜனாதிபதியாகத் தெரிவாகியிருந்த ஐஸநோவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு போர்க்களத்தில் மட்டுமின்றி, அரசியல் களத்திலும் பிரகாசித்த ஜனாதிபதி ஐஸநோவர் போர் என்பது, மாபெரும் கொடுமை என்று வர்ணித்திருக்கின்றார்.

ஆனால் இன்று இலங்கையின் ஆட்சியாளர்கள் ஓர் அர்த்தமற்ற யுத்தத்தை நடத்தி நாட்டைக் குட்டிச்சுவராக்குவதுடன், அயிரக்கணக்கில் உயிர்ப்பலிகள் ஏற்படுவதையும் தவிர்க்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இலங்கை அரசு ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய்களை விரயம் செய்து போர்த்தளபாடங்களை வாங்கிக் குவித்து வருகின்றது.

அத்துடன் ஓர் இராணுவச் சிப்பாயை உருவாக்கவும் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிடுகின்றது.

ஆனால் இச் செலவீனங்கள் யாவும் எதுவித பலனையும் தராதவையாகவே இருப்பதுடன், நாட்டின் இன்றைய போர் அநாவசியமானதொன்றென்பதனையே புலப்படுத்துவதாகவுமிருக்கின்றன.

கோடிக்கணக்கான ரூபாய் செலவில் அரசு வாங்கிக் குவிக்கும் போர்த்தளபாடங்கள் இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் கரங்களுக்கும் விரைந்து சென்று விடுகின்றன.

அண்மைக்காலங்களில் புலிகள் அரசின் பல கோடி பெறுமதியான யுத்தத் தளபாடங்களை நாசமாக்கியதுடன், மேலும் பலகோடி ரூபாய் பெறுமதியான தளபாடங்களை தம்வசமாக்கியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்துப் போரிடலாம். ஆனால் அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகளாகவே இருக்கின்றனர்.

இந்நிலையில் அரச படைகளிடமிருந்து கைநழுவி புலிகளின் வசம் போர் ஆயுதங்கள் சென்றடைவதை நோக்கும் போது, பெருமளவில் அரசு வாங்கிக் குவிக்கும் ஆயுதங்கள் இந்த நாட்டின் மக்கள் மத்தியிலேயே குவிந்து வருவதையும், நாட்டு மக்கள் நாளுக்கு நாள் கொடிய ஆயுதங்களுக்குப் பரிச்சயமாகி வருவதையுமே உணரக்கூடியதாக இருக்கின்றது.

அரச படையினரின் தரப்பில் இன்று சிரேஷ்ட அனுபவசாலிகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களின் இராணுவ நடவடிக்கைகளை முன்னின்று வழிநடத்திய சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளில் பலர் போரினால் கொல்லப்பட்டுள்ளார்கள்.

மேலும் பலர் சேவை மூப்பின் அடிப்படையில் பதவி உயர்வுகளைப் பெற்றுப் போர்க்களங்களிலிருந்தும் விலகிக்கொண்டுள்ளார்கள்.

வேறுபலர் இராணுவச் சேவையிலிருந்தும் ஓய்வு பெற்றுக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

எனவே தற்போது யுத்தப்பிரதேசங்களில் தலைமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கும் படை அதிகாரிகளில் பெரும்பாலானோர் இளவயதினராகவே காணப்படுகின்றனர்.

மறுபுறத்தே அரச படையினரை எதிர்த்துப் போரிட்டு வரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரும் இளவயதினராகவே காணப்படுகின்றனர்.

இரு தரப்பினரும் இவ்வாறு ஒரு சமாந்தரமான வயது வட்டத்தினுள் பிரவேசித்துள்ள நிலையில் நாட்டில் போர் நீடிப்பது, அநாவசியமான உயிர்ப்பலிகள் நாளாந்தம் பல்கிப் பெருகுவதற்கான சூழ்நிலையையே உருவாக்குவதாகக் காணப்படுகின்றது.

விளையாட்டு மைதானங்களில் வித, விதமான பந்தயங்களில் துள்ளிக்குதித்து விளையாட வேண்டிய பருவத்தினர், விபரீதமான இரத்த வெறிபிடித்த யுத்த நடவடிக்கைகளில் குதித்திருப்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

எனவே ஆட்சிப்பீடத்திலும், இராணுவத்தலைமைப் பீடத்திலும் இருப்போர் தமது கெடுபிடியான கண்ணோட்டங்களைக் கைவிட்டு யதார்த்த பூர்வமாக இன்றைய பிரச்சனையை அணுக வேண்டியவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

ஜனாதிபதி டி.பி விஜேதுங்க அடுத்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி இடம் பெறும் என்று அறிவித்துள்ளார்.

இத் தேர்தலில் ஆளுங்கட்சி வேட்பாளராகவும் அவர் போட்டியிடவிருக்கின்றார்.

"நாட்டில் இனப்பிரச்னை இல்லை; வடக்கு-கிழக்கில் பயங்கரவாதமே நிலவுகின்றது." என்று திரு. விஜேதுங்க கூறிவருகின்றார்.

அத்துடன் அப்பயங்கரவாதம் முறியடிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றார். ஆனால் வடக்கு-கிழக்கில் காணப்படும் நிலைமை ஒரு பயங்கரவாத நிலைமையாக இருப்பதை விட ஒரு பெரும் யுத்தமாக வடிவெடுத்திருப்பதையே தற்போது தெளிவாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

அத்துடன் வடக்கு-கிழக்கின் யுத்தத்தினால் நாடு தழுவிய வகையில் பாரதூரமான இழப்புக்கள் ஏற்பட்டு வருவதும் நாளாந்த நிகழ்வாகிவிட்டது.

ஜனாதிபதி விஜேதுங்க தமது வெற்றியைக் கருத்தில் கொண்டு வடக்கு-கிழக்கில் யுத்த நடவடிக்கைகளுக்கு உரமூட்டுவாரேயானால், அதனால் ஏற்படும் இழப்புக்கள் அவரது தோல்விக்கும் வழிவகுக்கலாம்.

ஏனெனில் நாட்டு மக்கள் இன்று வடக்கு-கிழக்கு யுத்தத்தின் கொடுமையை நன்குணர ஆரம்பித்துவிட்டார்கள்.

பாராளுமன்ற சபாநாயகர் திரு.எம்.எச். மொஹமட் அவர்களும் புலிகளுடன் பேச வேண்டியதன் அவசியத்தை கடந்த வாரம் மீண்டும் வலியுறுத்தியுள்ளதுடன், யுத்தக் கெடுபிடியினால் எதுவித தீர்வும் எட்டப் போவதில்லை. உயிர் இழப்புக்களே பெருகிச் செல்லும் என்று கூறியுள்ளார்.


எனவே இன்று வடக்கு-கிழக்குப் பிரச்னைத்தீர்வுக்கு யுத்தக் கெடுபிடியற்ற ஒரு வித்தியாசமான ஜனநாயக ரீதியிலான அணுகுமுறையையே நாடு எதிர்பார்க்கின்றது.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தமது வெற்றி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமானால் இத்தகைய அணுகுமுறைகளையே அவசியம் நாட வேண்டியவராக காணப்படுகின்றார்.

கைகள் மிகச் சிறிது
நம்பிக்கையோ
தும்பிக்கையளவு

# அங்கத்திலே குறையிருந்தாலும் நெஞ்சத்திலே பலம்!

# தன்னம்பிக்கையின் பிறப்பிடமான பெண்மணி!!



தனது மோட்டார் வண்டியைத் தானே ஓட்டும் தாரா.

ஆணுக்கு பெண் சமம். மன உறுதியிலும் பெண் சளைத்தவள் அல்ல. அதற்கு நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் இது-

பலர் தங்களைத் தாங்களே நொந்து கொள்வார்கள். தங்கள் பணிகளைத் தாங்களே செய்யச் சோம்பித்திரிவார்கள்.

இவர்கள், பல சிக்கலான குறை பாடுகளுடன் கூடியவர்கள், வாழ்க்கையையே ஒரு சவாலாகக் கருதி, முட்டுக்கட்டைகளை மோதித் தள்ளிவிட்டு முன்னேறத்துடிக்கும் வலது குறைந்தவர்களை சற்றுக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

இத்தகையவர்களுக்கு ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்பவர் தாரா ஃபிளட் என்ற 21 வயது மங்கை.

மிகக் குறுகிய கால்களையும் கைகளையும் கொண்ட தாரா, தன்னுடைய பிறவிக்குறைபாடு தனது வாழ்க்கைக்கு ஓர் இடையூறாகாமல் இருக்க வேண்டும் என்ற திட வைராக்கியத்துடன் செயற்படுகிறார்.

சாதாரண- இயல்பான அங்கங்களுடன் கூடியவர்கள் செய்யும் அத்தனை பணிகளையும் அவரே செய்கிறார். எவருடைய உதவியினையும் எதிர்பாராமல் தன் பணிகளைத் தானே செய்கிறார்.

ஒரு வங்கியில் தொழில் பார்க்கும் தாரா தனது மோட்டார் வண்டியைத் தானே ஓட்டுகிறார். நீச்சலடிப்பதும் விமானத்திலிருந்த பாரசூட்டின் உதவியுடன் தரையில் குதிப்பதும் அவருடைய விருப்பமான பொழுது போக்குகள்.

இவரை ஒத்த ஏனைய சாதாரண பெண்கள் பார்த்துப் பொறமைப்படத்தக்க செயல்களை இவர் செய்கிறார்.

தாரா கர்ப்பத்திலிருக்கும் போது அவருடைய தாயாரைப் பரிசோதித்த மருத்துவர்களால், குழந்தை பிறக்கும் போது இத்தகைய குறைபாடுகளுடன் பிறக்கும் என்று கணிக்க முடியாமற் போய் விட்டது. இதனால் குழந்தையை முதன் முதலில் கண்டதும் சகலரும் வியப்படைந்தனர். தாராவுக்கு முன்னர் பிறந்த அவளுடைய சகோதரன் பாற்றிக்குக்கு எந்தக் குறைபாடும் கிடையாது.

தாரா குறைபாடுகளுடன் பிறந்தாள் என்பதற்காக அவளைப் பின் தங்க வைக்க பெற்றார் விரும்பவில்லை. அவளுக்கு உற்சாகமும் துணிவும் ஊட்ட முற்பட்டனர்.

அவளுக்கு 18 மாதங்கள் முடிந்ததும் இங்கிலாந்திலுள்ள சசெக்ஸ் நகரில் இருக்கும் புகழ் பெற்ற செய்லி ஹெரிட்டேஜ் விடுதிப் பள்ளியில் சேர்த்துவிட்டனர். வலது குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலை இது. இங்கு இளமையிலேயே இவள் நீச்சலடிக்கக் கற்றுக் கொண்டாள்.

16வது வயதில் நீச்சல் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டும் அளவுக்கு முன்னேறி விட்டாள் தாரா. கடந்த

**தன்னம்பிக்கை, தளராத மன உறுதி என்பவற்றுக்கு ஆண்களை மட்டுமல்ல பெண்களையும் உதாரணம் சொல்ல முடியும்.**

வருடம் பாரிஸ் நகரில் நடைபெற்ற வலது குறைந்தவர்களுக்கான தடகளப் போட்டிகளில் பங்கு பற்றிய தாரா 5 தங்கப் பதக்கங்களை வென்றெடுத்தாள்.

தென் கொரியாவின் தலை நகர் சியோலில் நடைபெறவிருக்கும் வலது குறைந்தோருக்கான பன்னாட்டு ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளவிருக்கும் பிரிட்டிஷ் விளையாட்டுக் குழுவில் தாராவும் இடம்பிடித்துள்ளாள்.

லண்டனில் ஒரு வங்கியில் பணி புரியும் தாரா வீடு திரும்பியதும் தனது பயிற்சிகளைத் தொடங்குகிறார். வங்கியில் ஏனைய் அலுவலர்கள் செய்யும் அத்தனை பணிகளையும் தானாகவே செய்யும் தாரா, தன்னுடைய குறைபாட்டுக்காக பிரத்தியேக சலுகைகளை எதிர்பார்க்காமல் தனது கடமைகளை எக்குறைபாடுமில்லாமல் செய்து வருவதாக வங்கி மேலாளர் பாராட்டுகிறார்.

தனது குறுகிய கைகளைப் பயன்படுத்தி பேனா பிடித்து எழுதுகிறார். தொலைபேசி அழைப்புகளுக்கு தோளையும் தாடையையும் பயன்படுத்தி பதிலளிக்கிறார்.

தாராவுக்காக- அவர் செலுத்தும் மோட்டார் வண்டியில் சில மாற்றங்கள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. தனது குள்ளமான கைகளால் திருப்பும் சக்கரத்தை சீராக உருட்டவும், பிரேக், கியர் போன்றவற்றை இயக்கவும் சிறப்பு அமைப்புகளை செய்து கொடுத்துள்ளனர்.

இப்பொழுது விமானத்திலிருந்து பாரசூட்டின் உதவியுடன் தரையில் பாயும் பயிற்சியில் தாரா மும்முரமாக இறங்கியிருக்கிறார்.



தனது தோள் மற்றும் தாடை உதவியோடு போனில் பேசும் தாரா. சிறிய கைகளால் எழுதவும் செய்கிறாள்.

---

## லேடீஸ் ஸ்பெசல்

# உங்கள் இல்லம் குதூகலமாக இருக்கட்டும்!

# வீடு சுகமாய் இருந்தால் வாழ்வு இனிக்கும்!!



உங்கள் இல்லம் என்றும் மகிழ்ச்சிப் பூங்காவாக இருக்க வேண்டும். இதுதான் ஒவ்வொருவரின் ஆசையும். ஒரு குடும்பத்திலுள்ள தாய், தகப்பன், பிள்ளைகள் அனைவரும் தங்கள் வீட்டை மகிழ்ச்சியுள்ள இல்லமாக மாற்றி அமைக்க ஒத்துழைக்க வேண்டும். எல்லோரும் ஒற்றுமையாக உழைத்தால் தானாகவே மகிழ்ச்சி பொங்கும்.

இரட்டை மாடுகள் பூட்டிய வண்டிக்கு இல்லத்தை (குடும்பத்தை) ஒப்பிடுவார்கள். முதலில் கணவனும் மனைவியும் தங்கள் குடும்ப மேன்மை பற்றி ஒரே மன ஒட்டமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். ஒருவர் ஒரு புறமும் மற்றவர் வேறுபுறமும் இழுத்தால் குடும்ப வண்டி திசைமாறி- தடம் புரண்டு சின்னா பின்னப்பட்டுப் போய்விடும். ஆகவே குடும்பம் பற்றிய பொதுவிடயங்களில் அபிப்பிராய பேதங்களுக்கு இடம் தராமல் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இல்லத்தை தூய்மையாகவும் அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் மாற்றி அமைக்க குடும்ப உறுப்பினர்கள் (பெற்றார், பிள்ளைகள், அதே குடும்பத்திலுள்ள ஏனையோர்) அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

"குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று பட்டு ஒரே திசையில் சென்றால் நிச்சயமாக அக்குடும்பம் மிக்க மகிழ்ச்சியுள்ள குடும்பமாகவே அமையும்" என்று 'குடும்பப் பிரச்சினைகளும் அவற்றை தீர்ப்பதற்கான வழிகளும்' என்ற நூலை எழுதிய டாக்டர் வாலஸ் டென்ரன் கூறுகிறார்.

தங்களுடைய இல்லத்தை மகிழ்ச்சி நிறைந்த நந்தவனமாக ஆக்கவேண்டும் என்று நாட்டம் கொண்ட பெற்றாருக்கு அவர் சில வழி முறைகளை வகுத்துத் தந்துள்ளார்.

- பிள்ளைகளுக்கு சில வேலைகளை ஒதுக்கும் போது, நீங்கள் எதனை எதிர்பார்க்கின்றீர்கள் என்பதனைத் தெளிவாக அவர்களுக்கு விளக்குங்கள். உங்கள் எதிர்பார்ப்பு எத்தகையது என்பதனை முரண்பாடற்ற நிலையில் அவர்களுக்குத் தெளிவு படுத்துங்கள். எடுத்துக்காட்டாக, உங்கள் பிள்ளைகளே அவரவர்களுடைய படுக்கைகளைச் சுருட்டி சுத்தப்படுத்த வேண்டும் என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தால், அவரவர்களே அந்தப் பணியினை ஒழுங்காகச் செய்தாக வேண்டும் என்ற ஒழுங்கு அவசியம்.

சுசி, சோம்பல் மிகுதியால் தூங்கி எழுந்ததும், படுக்கையைச் சுருட்டி வைக்காமல் குளியலறை சென்று விட்டால், தாயோ அல்லது சகோதரர்களோ அதனைச் சுருட்டி வைக்க முற்படலாகாது.

தனது படுக்கையைச் சுருட்டி வைக்க சுசி மறந்து விட்டால், அதற்காக ஏனையவர்கள் அப்பணியைச் செய்ய முன்வரும்போது, சுசி அடிக்கடி தனது பணியினை 'மறந்து' போய்விடுவதை பழக்கத்தில் கொண்டு வந்து விடுவாள். அவளுக்கு பொறுப்புணர்ச்சியைத் தூண்ட வேண்டிய பொறுப்பு ஏனையோருக்குண்டு என்பதை மறந்துவிடலாகாது.

நோய் வாய்ப்பட நேர்ந்தால் விதி விலக்குண்டு.

- ஒருவருக்குரிய பணியினை அவர் ஒழுங்காகச் செய்யத் தவறினால் அவருக்குச் சிறிய 'தண்டனை' வழங்கப்பட வேண்டும்.

'தண்டனை' என்றால் அதனைப் பெரிதாகக் கருத வேண்டியதில்லை. உதாரணமாக, மூத்த மகன் முத்துக்குமார், விளையாட்டை முடித்துக்கொண்டு மாலை 6.00 மணிக்கு முன்னர் வீடு வந்து, உடல் முகம் சுத்திகரித்துக் கொண்டு தனது படிப்பைத் தொடங்கியாக வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கும்.

முத்துக்குமார் ஒருநாள் இரவு எட்டு மணிவரைக்கும் நண்பர்களுடன் சுற்றித்திரிந்து விட்டு வந்தாரானால், அவர் அடுத்து வரும் ஒரு வாரத்துக்கு பிற்பகல் பாடசாலை விட்டு வந்தால் வீட்டை விட்டுக் கிளம்பாமல் தனது பாடங்களை வீட்டிலிருந்த வண்ணம் படித்தாக வேண்டும்.

இந்த 'ஒரு வாரத்தண்டனை'யினை ஒழுங்காகக் கடைப்பிடித்தால் மட்டுமே மாலை 4.00 முதல் 6.00 மணிவரை விளையாட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்.

இத்தகைய சில 'தண்டனை'களை ஏற்கனவே பட்டியல் போட்டு வைத்துக் கொண்டால் எல்லாப் பிள்ளைகளும் கட்டுப்பாடாகவும் கடமை உணர்வுகளுடனும் நடக்க முற்படுவார்கள்.

திருமண முறிவுகள் தொடர்பான ஆற்றுப்படுத்தல் நிபுணரான டாக்டர் பென் ஓவன் வேறு சில நல்லாலோசனைகளைத் தருகிறார்:

- குடும்பத்துக்கான இலக்குகளை எய்துவதற்கு சகலருடைய ஒன்றுபட்ட நிலைப்பாட்டினை கூடுமானவரை ஒரு முகப் படுத்துங்கள்.

உங்கள் பிள்ளைகளின் செலவுகளுக்காக நீங்கள் தரும் பணம் போதவில்லை என்றும் கூட்டித் தரும்படியும் அவர்கள் கோருகின்றனர் என்றும் வைத்துக் கொள்ளுங்கள். ஏற்கனவே நீங்கள் தயாரித்துள்ள குடும்ப வரவு செலவுத்திட்டத்தின் படி அத்தகைய கூடுதலான பணம் ஒதுக்க முடியாதிருக்கும். அவர்களின் கோரிக்கையில் நியாயம் இருக்கிறது என்றுகண்டால், மின்சாரம், தண்ணீர் போன்றவற்றுக்கு ஆகும் செலவுகளைக் குறைக்க பிள்ளைகளும் ஒத்துழைக்க வேண்டும் என்றுஅவர்களை வற்புறுத்துங்கள். நிச்சயமாகப் பலன் கிடைக்கும்.

இவை போன்று வேறு வழிகளிலும் வீணாகும் விரயத்தையும் கட்டுப்படுத்த வாய்ப்பேற்படும்.

- வீடு, வளவு கூட்டுதல், வீட்டுத் தோட்டத்தினைப் பராமரித்தல், தங்கள் தங்கள் உடைகள், புத்தகங்கள் மற்றும் தளபாடங்களை ஒழுங்காகவும் சுத்தமாகவும் வைத்திருத்தல் தொடர்பாக பிள்ளைகள் மத்தியில் சிறு சிறு போட்டிகள் வைக்கலாம். இதனால் சினேகபூர்வமான போட்டி மனப்பான்மை வளர்ச்சியடைவதுடன் தங்கள் தங்கள் பணிகளையும் கரிசினையுடன் செய்யும் பக்குவமும் வளர்ச்சியடையும்.
- மிகச் சிறிய குழந்தைகளுக்கும் ஏனைய மூத்த சகோதரர்கள் வேலை செய்வதைப் பார்த்து இயல்பாகவே, தாங்களாகவே ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படலாம். ஆனால், அதற்காக 5 வயதுச்சிறுமி கோப்பை பீங்கான்களைக் கழுவ வேண்டும் என்று அடம்பிடிக்க விட்டு விடாதீர்கள். அதன் புலனை வேறு திசையில் திருப்பி, அதற்கேற்ற சிறு பணியினைச் செய்ய அனுமதிக்கலாம். உரிய குறிக்கோளை அடைய குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் அவசியம் என்ற உணர்வு ஒவ்வொருவருக்கும் ஏற்படுமானால் நிச்சயமாக நல்ல ஒத்துழைப்புக் கிடைத்தே தீரும்.
- ஒரு பிள்ளை ஒரு பணியினைச் சிறப்பாக முடித்துவிட்டது என்று கண்டால், அதனை உரிய முறையில் பாராட்டியாக வேண்டும். அதனைத் தட்டிக்கொடுக்கும் அதே வேளை ஏனையோருக்கு பொறாமை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுதல் அவசியம். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் செயல் முறையில் சிறந்து விளங்குவதற்கு பெற்றாருடைய வழிகாட்டல் தான் மிகவும் பிரதானமானது என்பதை மறந்துவிடலாகாது.

---

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

பட்டுச் சேலைப் பரிசுத் திட்டத்துக்கான 15 கேள்விகள் அடுத்த முரசில் தரப்படும். இதுவரை வெளியான கூப்பன்களைப் பத்திரமாய் சேகரித்து வையுங்கள். சரியான விடை எழுதத் தயாராக இருங்கள்.

## சமைப்போம் சுவைப்போம் —தருவது சுகந்தினி

### பட்டர் கேக்

**தேவையானவை:**

மாஜரின்– 500 கிராம்
சீனி– 500 கிராம்
முட்டை– 8
மா– 500 கிராம்
பேக்கிங் பவுடர்– 1 1/2 தே. கரண்டி
அப்பச்சோடா– 1/2 தே.கரண்டி
தேசிக்காய்– ஒன்று
வனிலா– 3 மே.கரண்டி
முந்திரிப் பருப்பு– 10 கிராம்
பிளம்ஸ் – விரும்பிய அளவு

**செய்முறை:**

மாஜரின், சீனி இரண்டையும் சேர்த்து நன்றாக அடிக்கவும். அதன்பிறகு அதனுள் 8 முட்டையையும் சேர்த்து சீனி கரையும் வரை இன்னும் நன்றாக அடிக்கவும். மாவையும் அப்பச்சோடா, பேக்கிங் பவுடரையும் மூன்றையும் சேர்த்து 2 அல்லது 3 தரம் நன்றாக உயர்த்தி அரிக்கவும் அரித்தவுடன் மேற்கூறிய கலவையுடன் மாவினை சிறிது சிறிதாகச் சேர்த்து கலக்கவும். வனிலா, தேசிக்காய், முந்திரிப் பருப்பு மற்றும் கொடி முந்திரி வற்றல் ஆகியவற்றையும் சேர்த்துக் கலக்கவும். அவற்றை ஒரு தட்டில் பரப்பி பேக் பண்ணி எடுக்கவும்.


## நீங்களும் தைக்கலாம்


6 வயது சிறிய ஆண்பிள்ளைக்கான காற்சட்டை

**களுசானின் இடுப்பின் சுற்றளவு- 20"÷4= 5+1=6**
**பூரணமான உயரம்- 8 1/2"**
**கவட்டின் (சீற்லைன்) உயரம்- 7 1/2"**
**காலின் சுற்றளவு- 14"÷2=7"**
**குறுக்களவின் நீளம்- 7"**

படத்தில் உள்ளவாறு 6" அகலமும் 8 1/2" நீளமும் கொண்ட துணியை எடுத்து A.B.C.D என குறித்துக் கொள்க. A.E 7 1/2"ஐ B.F 7 1/2" ஐ குறித்து E.Fயை இணைக்கவும். Aயில் இருந்து G 2 1/2" எடுக்கவும். Bயில் இருந்து H 2 1/2" எடுத்து G.H இணைத்து டாட் வரைந்து கொள்ளவும்.

7 1/2" அகலமும் 8 1/2" நீளமும் அளந்தெடுத்து பின்பக்கம் வரைந்து கொள்ளவும் Cயிலிருந்து E 1/2" எடுத்து B.Eயை இணைக்கவும். களுசானை ஒழுங்குமுறைப்படி வெட்டி முடிந்ததும் 2" நீளமும் 6" அகலமும் கொண்ட துணியை எடுத்து முன் பக்க துணியில்




மேல் பக்கம் வைத்து தைக்கவும். பின் பக்கத்திற்கு இலாஸ்றிக் வைக்க வேண்டும். இதை முறைப்படி தைத்தால் அழகான களுசானை பெறலாம்.

ஏ.பலோசியா
மதவாச்சி.

# பகலினில் பிச்சை இரவினில் ஆட்டம்!

## பிச்சை எடுப்பவன் வாழ்க்கையோ சொர்க்கம்



ஆடம்பர உடை
அழகான கார்
உள்ளே
இளமையான பெண்

எடுப்பது பிச்சை. படுப்பதோ பஞ்சு மெத்தை. வழியில் போவோர் வருவோரிடம் பகலில் கையேந்தினாலும் வாங்கியதைக் கொடுப்பதோ வட்டிக்கு.

என்ன விசித்திரமாக இருக்கிறதா? வினோதமாகப் படுகிறதா?

விசித்திரமும் அல்ல. வினோதமும் அல்ல.

நியூயோர்க் நகரிலே, அதுதான் அமெரிக்காவின் பிரதான நகரிலே நடந்து கொண்டிருக்கிற நிகழ்வுதான் அது.

அவன் ஒரு பிச்சைக்காரன். பெயர் மெய்றலண்ட் ஹாஸ்ட்.

அவன் ஒரு பட்டதாரி மாணவன். அவனுக்கும் கனவுகள் இருந்தன.

நல்ல வேலை, நல்ல குடும்பம், குழந்தைகள் என்று கலர் கலரான கனவுகள்.

கல்லூரியை விட்டு 1983ம் ஆண்டு வெளியேறினான்.

கையிலே வர்த்தகத்துறையில் பெற்ற பட்டத்தைக் கொடுத்து சென்றுவா என்று விடை கொடுத்தது கல்லூரி.

அவன் கனவுகளோடு வேலை தேடினான், தேடினான். தேடிக்கொண்டே இருந்தான்.

தேய்ந்தன செருப்புக்கள். தேடியும் கிடைக்கவில்லை வேலை.

வயிறு காய்ந்தது. பசிக்கு வெட்கமில்லை. பாவமும் இல்லை.

கையேந்தினான். அவனது ஆடைகள் சுத்தமாக இருந்தன. அதுவே ஒரு தடை. யாருமே எதுவும் கொடுக்கவில்லை.

அவனது பரிதாபநிலை கண்ட நிரந்தரப் பிச்சைக்காரன் ஒருவன் உதவிக் கரம் நீட்டினான்.

"பிச்சையெடுப்பதும் ஒரு கலைதான். அதற்கும் பயிற்சி வேண்டும். நாய் வேசம் போட்டால் குலைக்கத் தெரிய வேண்டுமே! அப்படித்தான் இதுவும்." என்று சொன்னான்.

நிரந்தரப் பிச்சைக்காரன் சொன்ன ஆலோசனைகள் இவைதான்:

- நல்ல உடைகளை களைந்துவிடு.
- கிழிந்த ஆடைகளையே பிச்சை யெடுக்கும் போது போட்டுக்கொள்.
- முகத்தை எப்போதும் சோகமாக வைத்துக்கொள். சோகம் சிறப்பாய் தெரியும்.

பயிற்சி கை கொடுத்தது. மெய்றலண்ட் பிரமாதமான பிச்சைக்காரனாக மாறினான்.

குருவே வியக்கும் வகையில் பிச்சையெடுப்பதில் பெரிய கில்லாடியாகிவிட்டான்.

குவிந்தது பணம். நாய் விற்ற பணம் என்றால்கூட குலைக்காது. பிச்சையெடுத்த பணமா குலைக்கும்?

திரண்ட பணத்தில் பெரும் செல்வந்தனாக மாறிவிட்டான்.

ஆனாலும் தொழிலை விடவில்லை.

ஒரு மாளிகை வாங்கியிருக்கிறான். 16 அறைகள் இருக்கின்றன.

பிச்சையெடுக்கும் தொழிலில் அலைச்சல் இருக்கம் அல்லவா?

அதனால் அசதி போக குளிப்பதற்கு வசதியாக ஒரு நீச்சல் தடாகமும் கட்டியிருக்கிறான்.

ஒன்றுக்கு இரண்டு உயர் ரக கார்கள் உண்டு. சாரதிகளும் உண்டு.

42 அடி நீள உல்லாசப் படகொன்றும் வாங்கியிருக்கிறான்.

இரவினில்தான் அத்தனை வசதிகளையும் அனுபவிக்க வேண்டும்.

இரவு நேரக் களியாட்டங்களுக்கும் பஞ்சமில்லை. இளம் மங்கையர்கள் சுற்றியிருக்க வேண்டும். சுகம் வேண்டும்.

அவனது வருட வருமானம் என்னவென்று கேட்டால் மூச்சு முட்டும். சராசரி 275,000 அமெரிக்க டொலர்கள். நம் நாட்டுப் பெறுமதிப்படி ஏறக்குறைய ஒரு கோடியே 37 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.

பிச்சையெடுப்பது இழிவானது என்று அவனுக்கும் தெரியும்.

ஆனாலும் விட மனமில்லை. அவன் விரும்பினாலும் பெரிய தொழில் அதிபராக முடியும். விரும்பவில்லை.

ஏன் என்பதற்கு அவனே விளக்கமும் சொல்கிறான்.

"இந்த இழிவான தொழிலை விட்டுவிட்டு தங்களுடன் சேர்ந்து முதலீடு செய்யும்படி பிரபல தொழிலதிபர்கள் சிலர் கோருகின்றனர். ஒரு 'பிறீஃப்கேசுடன்' வர்த்தகம் தொடர்பான பங்காளிகள் கூட்டங்களிலும் நிர்வாகிகள் கூட்டங்களிலும் நான் கலந்து கொள்ள வேண்டும் என்றே அவர்கள் விரும்புகின்றனர். ஆனால், இழிவானாலும் இத்தொழிலில் கிடைக்கும் வருவாயும் சுதந்திரமும் அத்தொழில்களில் கிடைக்க முடியாதே" என்று மெய்றலண்ட் கூறுகிறான்.

இவனை அடையாளங்கண்டு கொண்ட ஒரு செய்தி நிருபரிடம் "உண்மையாகச் சொல்லுகிறேன். ஒரு நல்ல பிச்சைக்காரன் ஒரே நாளில் ஓராயிரம் டொலரைச் சம்பாதிக்க முடியும்" என்று கூறினான். "சிலர் கண்ணிழந்தவர்கள் என்றும், அங்கயீனமானவர்கள் என்றும் போலி வேடம் புனைந்து பிச்சைக்காரர்கள் போல் நடித்து ஏமாற்றி சம்பாதிக்கின்றனர். நான் என்னுடைய சோகமான கண்களைக் காட்டியே பிச்சை கேட்கிறேன். என் கண்களைக் கண்டதும் அதில் குடிகொண்டுள்ள சோகத்தைப் பார்த்தே எனது தொப்பிக்குள் பண நோட்டுகளை அள்ளி வீசுகின்றனர்." என்று வெட்கமில்லாமல் அந்த மனிதர் நிருபரைத் திணறடித்தார்.



வருட வருமானம்
37 இலட்சம்

பிச்சையெடுத்து திரட்டிய சொத்துக்கள்
- பெரிய பங்களா-அறைகள் 16.
- சொகுசுக் கார்கள் இரண்டு.
- 42 அடி நீளப் படகு.

சோகமான முகத்தோடு
தொப்பி ஏந்தும்
பகல் நேரப்
பிச்சைக்காரன்

# பறந்து செல்லும் பறவையைப் போலே........



## பாய்ந்து செல்லும் மோட்டார் சைக்கிள்!


மோட்டார் சைக்கிள் ஓடுவதில் பல அசகாய சூரர்கள் உள்ளனர்.

அதிவேகமாக ஓடி ஒரு செங்குத்தான மேட்டில் தாவி பின்னர் அந்தரத்தில் நீந்தியவாறு மறுமுனையில் பக்குவமாக தரையிறங்கி ஓடுவது ஒரு தனிச் சிறப்பான-ஆனால் மிக அபாயகரமான விளையாட்டு. சர்க்கஸ் கூடாரங்களில் இத்தகைய விளையாட்டுகள் மக்களை வெகுவாகக் கவர்கின்றன.


நியூயோர்க்கைச் சேர்ந்த றொன் ஸ்டார் என்பவர் வரிசையாக 11 மோட்டார் கார்களை அடுத்தடுத்து நிறுத்தி வைத்துவிட்டு அவற்றின் மேலே நீந்திச் செல்வது போல் தனதுமோட்டார் சைக்கிளில் அந்தரத்தில் தாவிப் பறக்கிறார்.

இவர் 1994ல் உலக சாதனை ஒன்றை இத்தகைய பாய்ச்சலில் நிலை நாட்டப்போவதாகக் கூறுகிறார். 29 வயதான றொண்ணுக்கு, சக்கர மன்னன், (வீலி கிங்) என்று பட்டமளித்து இவருடைய இரசிகர்கள் பாராட்டியுள்ளனர். மோட்டார் சைக்கிளில் இவர் மொத்தம் 30 விளையாட்டுகளை ஆடிக்காட்டுகிறார். வானமே கூரையாக இருக்கிறது என்பார்கள். இந்த சாதனை மன்னனுக்கு வான்வெளியே தரையாக மாறினாலும் ஆச்சரியம் இல்லை.

இத்துறையில் பல்வேறு புது விளையாட்டுக்களைக் கற்று ஹொலிவூட் திரை உலகத்தில் காலடி வைப்பதைத் தனது இலட்சியமாகக் கொண்டுள்ளார்.



# ஏன் இந்தக் கோலம்? வேடிக்கையல்ல விசயம் இருக்கிறது!



"ஹலோ, ஹலோ சுகமா."

"சுகம்தான். நலம்தான்."

"நல்லது. உங்களிடம் தீப்பெட்டி அல்லது லைட்டர் ஏதாவது இரண்டில் எது இருந்தாலும் பரவாயில்லை. தரமுடியுமா? பெரிய உதவியாக இருக்கும்."

வாய் நிறைய சிகரெட்டுகள் மற்றும் சுருட்டுகள். அள்ளித் திணித்தபடி இருக்கும். இருவரும் அப்படித்தானே கேட்பார்கள்.

இல்லை. இல்லவே இல்லை. ஏனென்றால் அவர்கள் இருவரும் புகை பிடிப்பதேயில்லை. ஆனால் அவர்கள் வாயில் இருப்பதோ 135 சிகரெட்டுக்கள். 27 சுருட்டுக்கள் மற்றும் 34 சுங்கான்கள்.

புகைபிடிக்காதவர்கள் எதற்காக இப்படி கவ்விக் கொண்டிருக்கிறார்கள்?

ஒருவேளை உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் பெயர்களைப் பொறிக்கவோ?

அதுவும் கிடையாது.

வேறெதற்கு?

எல்லாம் ஒரு நல்ல காரியத்திற்குதான். "புகைத்தல் தீமையானது அதை அறவே விட்டொழியுங்கள்." என்று பிரச்சாரம் செய்யும் சேவை மனப்பான்மை. அதுதான் இப்படி மேடைகளில் தோன்றி வித்தியாசமான முறையில் பிரச்சாரம் செய்கிறார்கள்.

வேடிக்கை போல தெரிகிறது அல்லவா? ஆனால் அத்தனை சிகரெட்டுக்களையும், சுருட்டுக்களையும் வாயில் வைத்திருந்தமையால் இருவரும் இருமியும், தும்மியும் துன்பப்பட்டனர்.

இருவரும் இசை நிகழ்ச்சியும் நடத்துகிறார்கள்.

அவர்கள் பாடும் முதல் பாடலின் முதல் அடிகள் என்ன தெரியுமோ?

"ஸ்மோக் கெட்ஸ் இன் யுவர் அயிஸ்"

'உங்கள் கண்களுக்குள் புகுந்து கொள்கிறது புகை'

எல்லாம் சரி, அவர்களின் பெயர்களை சொல்லாவிட்டால் எப்படி?

ஒருவர் ஜிம் புறோல், மற்றவர் மைக் பப்பா.

## தேவை உடை? கடையை உடை!

தெபரா அவெரே என்ற 37 வயது பெண்ணுக்கு திருமண நாள் குறிக்கப்பட்டுவிட்டது. திருமண உடைக்கும் தையற் காரிடம் துணி கொடுத்து, அளவினையும் கொடுத்து விட்டார். திருமண நாளுக்கு முதல் நாளன்று குறித்த நேரத்தில் உடையினைத் தருவதாக வாக்களித்த தையற்காரர் அதனைக் கொண்டு வந்து தரவில்லை. தொலைபேசியில் தொடர்பு கொண்டார். பதிலில்லை. அவருடைய வீட்டிலும் யாருமில்லை. இங்கிலாந்தில் லிற்றில்மோர் என்ற இடத்திலுள்ள வானொலி மூலம் வேண்டுகோள் விடுத்தாள். பலனில்லை. பொறுத்துப் பார்த்து பலன் கிட்டாமையினால் திருமணத்தன்று அதிகாலையில் அந்தக் கடைக்கு முன் சென்றாள். கடப்பாறை, கம்பி முதலானவற்றால் கடையை உடைத்தாள். தனக்குரிய உடையினை மட்டும் கண்டெடுத்துக்கொண்டு சென்றாள். திருமணமும் முடிந்தது.

"நான் ஒரு பயங்கரக்குற்றச் செயலில் இறங்கினேன் என்பது உண்மைதான். ஆனால் இதனைத் தவிர எனக்கு வேறு வழி தோன்றவில்லை" என்கிறார். நியாயமாய்ப் படுகிறதோ?

காதோடு சொல்லுகிறோம்

# இதுதாண்டா பதில்
## சரத்குமாருக்கு ஒரு சபாஷ்



சரத் குமார்

வசூலில் தான் கிளப்பி நடிகர் அர்ஜுனை தூக்கி உயரத்தில் வைத்த படம் ஜென்டில் மேன். ஜென்டில்மேனில் முதலில் கதாநாயகனாக நடிக்கவிருந்தவர் சரத்குமார். பின்னர் ஏதோ கருத்து மாறுபாடு நடிக்க முடியாமல் போய்விட்டது.

இப்போது சரத்குமாரிடம் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஜென்டில்மேனில் நடிக்கவில்லையே என்று வருத்தப்பட்டீர்களா?

"இல்லை அந்தப்படம் அதில் பங்கு கொண்ட கலைஞர்களின் உழைப்புக்குக் கிடைத்த பரிசு. ஒரு வேளை நான் நடித்திருந்தால் அந்தப்படம் தோல்வி அடைந்திருக்கலாம்."

அட்டகாசமான பதில். அடக்கமான மனது. யாருக்கு? சரத்குமாருக்குத்தான்.

இன்னும் ஒரு கேள்வி? "நீங்கள் அரசியலுக்கு வருவீர்களா?"

சரத் உடனே சொன்ன பதில் "இப்போது நான் அரசியலில் தான் இருக்கிறேன். நான் மட்டும் அல்ல பதினெட்டு வயதை அடைந்த ஒவ்வொரு இந்தியனும் அரசியலில்தான் இருக்கிறான்."

சரத்குமாரின் பதிலில் மகா புத்திசாலித்தனம் பளிச், பளிச்.

முகப்பில் இணைந்திருப்பது அர்ஜுன்-குஷ்பு



## "கவர்சிக்கு டாட்டா"

இனிமேல் கவர்ச்சியாக நடிக்க மாட்டேன் என்று அறிக்கை விட்டுப் பார்த்தார் மடிப்பு அம்சாவான இன்றைய விசித்ரா. அவ்வளவுதான். யாரும் திரும்பிப் பார்க்கவில்லை. நட்சத்திர இரவு நிகழ்ச்சிகளுக்கு அழைத்தவர்களும் ஆடத்தான் அழைத்தார்கள். இப்போது கவர்ச்சிக்கு ஓ.கே என்று இன்னொரு அறிக்கை விடலாம் என்று விசித்ரா யோசித்துவருகிறார். அறிக்கை விடுவாரோ, அவதிப் படுவாரோ?

## கமலின் பெரிய திட்டம்!

100க்கு மேற்பட்ட படங்களில் நடித்து முடித்துவிட்ட போதும் கமல் அவற்றை ஒரு சாதனையாக நினைக்கவில்லை.

தான் இயக்கப்போகும் மருதநாயகம் படமே தனது சாதனையாக அமையும் என்கிறார்.

மருதநாயகம் படத்திற்காக கடந்த இரண்டு ஆண்டுகள் உழைத்து கதையையும் திரைக்கதையையும் அமைத்துள்ளார்.

60 காட்சிகளுக்கு வசனமும் ரெடி பண்ணி வைத்திருக்கிறார்.

300 ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் பரமக்குடியில் வாழ்ந்த வீரத்தமிழன் மருதநாயகம். வீரபாண்டிய கட்டப் பொம்மனையும் மிஞ்சியவன் என்று விளக்கம் சொல்கிறார் கமல்.

மருதநாயகம் போல மேக்கப் போடுவதற்கு ஏற்றபடி மருதநாயகத்தின் சித்திரங்கள் கிடைக்குமா என்று தேடினார் கமல். கிடைக்கவே இல்லை. அதுதான் வருத்தம் என்கிறார்.

மருதநாயகம் பற்றி கமல் பெரிதாக திட்டம் போட்டிருப்பதால் பட வேலைகளை [illegible]

## சில்க் செய்துள்ள முடிவு!

நடிகை சில்க் தமிழ் நாட்டில் பள்ளியொன்று ஆரம்பிக்கலாம் என்று திட்டமிட்டுள்ளார். கவர்ச்சியாக நடித்து அலுத்து விட்டது. நல்ல பாத்திரம் தேடினால் யாரும் தருவதாகவும் இல்லை. அதுதான் நடனப் பள்ளி தொடங்கும் யோசனைக்கு தாவிவிட்டார்.



இந்த மயில் ஆடினால் எந்த வான்கோழி தடைசெய்ய முடியும்?

## ரேவதி ஒரு குணசித்திரவதி



ரேவதி- படம் புதிய தொடக்கம்

## மினி சினி

* கடல்புறா என்ற படத்தை இயக்கி கதாநாயகனாக நடித்தவர் பாபு கணேஷ் என்னும் புதியவர். இவர் அடுத்து கதைவசனம் எழுதி கதாநாயகனாக நடிக்கும் படத்தினை இயக்கும் பொறுப்பை வேறொருவரிடம் கொடுத்துள்ளார்.
* ஒரு பெண்ணின் வாழ்வில் நடந்த வித்தியாசமான சம்பவங்களை மையமாகக் கொண்டு, சின்னமணிக் கோவிலிலே என்ற பெயரில் படமொன்று உருவாகி வருகிறது. கதாநாயகன், கதாநாயகி வேடத்தில் புதுமுகங்கள் நடிக்கின்றனர். முக்கிய வேடத்தில் சிவகுமார், சீதா நடிக்கிறார்கள்.
* கார்த்திக் நடித்தும் பாதியிலே நின்று போன அக்னி புத்திரன் என்ற படத்தை அதன் இயக்குநரான குலோத்துங்கன் தயாரிப்பாளரிடமிருந்து வாங்கியுள்ளார். இவர் தற்போது கார்த்திக் நடிக்கும் காதலுக்கு நேரமில்லை படத்தை இயக்குகிறார் என்பது தெரிந்ததே.
* வடக்கில் இயக்கிய ஜோடி சேர்ந்தால் படத்தில் கதாநாயகியாக நடித்தவர் சௌமியா. தற்போது இவருக்கு தமிழில் வாய்ப்புக்கள் இல்லையே தவிர மலையாளப்படங்களில் நடித்து வருகிறார்.
* படங்களிலும், கலைநிகழ்ச்சிகளிலும் பாடி வரும் தம்பதிகள் எஸ்.ரமணன், உமாரமணன். இவர்கள் நேரடித் தமிழ்ப்படங்களைக் காட்டிலும் மொழிமாற்றுப் படங்களில் அதிகம் பாடி வருகிறார்கள்.
* தமிழகத்தில் பிரபல பத்திரிகையான தினமணியில் வெளிவரும் ஒன்றில் உதவி ஆசிரியராக இருப்பவர் கவிஞர் புகழேந்தி. இவர் செல்வா கதாநாயகனாக நடிக்கும் மைந்தன் என்னும் படத்தினை இயக்குகிறார்.
* வெளி நிகழ்ச்சிகளில் மிகவும் அரிதாகவே கலந்து கொள்பவர் இசைஞானி இளையராஜா. அண்மைக்காலமாக இவர் முற்றிலும் மாறிவிட்டார். தற்போது படத்தொடக்க விழா, வெற்றிவிழா, திருமண விழா என்று அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு வருகிறார்.
* ஹீரா, வீட்டுத் தோட்டத்தில் நிறைய செடி, கொடிகள், மரங்கள் என்று அழகாக வைத்திருக்கிறார். அதுமட்டுமன்றி கிளிகள், அணில், முயல், பூனை, நாய் போன்ற செல்லப்பிராணிகளையும் வளர்த்து வருகிறார்.



சிவரஞ்

## நட்சத்திர சம்பளம்



மோகன்லால்
படம்- கப்டன் தேவராம்

## பாப்பா முரசு சிறுகதை

# மந்திரி மதியூகி

மந்திரிகள் நிதானம் இழக்காமல் மன்னனுக்கு, நாட்டுக்கெல்லாம் இடர், துன்பம் வரும்போதெல்லாம் தீர்க்க தரிசனத்துடன் ஆலோசனை சொல்பவர்கள். அப்படி ஒரு மதிநுட்பம் வாய்ந்த மந்திரி ஒருவர் ஒரு அரசவையில் இருந்தார். அவர் பெயர் மதியூகி. அவரது மதிநுட்பத்தால் பிற அரசர்களால் நாடு பிடிபடாமலும், நாடு செழிப்பாகவும், மன்னன் நீதி தவறாமலும் நாட்டைப் பரிபாலித்து வந்தான். மந்திரி மதியூகியின் மதிநுட்பம், புகழ் வெளிநாடெங்கும் பரவியது. அப்படிப்பட்ட ஒரு மதியூகி மந்திரி தங்களுக்கு அமைச்சராகக் கிடைக்கவில்லையே என்று பலநாட்டு அரசர்கள் வருந்தினர். தங்களுக்கு மந்திரியாக அவர் கிடைக்கா விட்டாலும் அவரை ஒருமுறையாவது தங்கள் அரசவைக்கு அழைத்து பார்க்க ஆசைப்பட்டனர் பல அரசர்கள்.

அப்போது இந்தியாவில் நிறைய அரசர்கள் இருந்தார்கள். வடநாட்டை மொகலாய மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களில் ஒருவர் தக்பீர், அவர் அரசவையில் எவ்வள்வோ அமைச்சர்கள் இருந்தனர். அவர்கள் திறமைசாலிகளாகவும், அறிவில் சிறந்தவர்களாகவும் இருந்தனர்.

ஆனாலும் தென்னாட்டில் புகழோடு விளங்கும் மந்திரி மதியூகியைக் காண ஆசைப்பட்டார் தக்பீர். நல்லவர்கள், அறிஞர்கள், அறிவாளிகள் என்றால் அவர்களைத் தக்பீர் மிகவும் விரும்புவார். அதுபோலவே மந்திரி மதியூகியைக் காணவேண்டுமென்று உலகெல்லாம் புகழும் அவர் மதிநுட்பத்தைச் சோதிக்க வேண்டுமென்றும் விரும்பினார்.

படித்த பண்டிதர் ஒருவரைத் தன் அரசவையிலிருந்து மந்திரி மதியூகியின் நாட்டிற்கு அனுப்பி சகலவித மரியாதைகளோடு தன் அரசவைக்கு மதியூகியை அழைத்து வரும்படி அனுப்பினார். பண்டிதரும் புறப்பட்டுச் சென்று, மந்திரி மதியூகியின் மன்னரிடம் சொன்னார். தக்பீர் சக்கரவர்த்தி மந்திரி மதியூகியைக் காண விரும்புவதாகவும், சகலவித மரியாதைகளோடு அழைத்து வரப் பணித்து அனுப்பியுள்ளதாகவும், மன்னர் அருள் கூர்ந்து மந்திரி மதியூகியைத் தம்முடன் அனுப்பி வைக்க வேண்டுமென்றும் பணிவோடு வேண்டினார்.

தம் மந்திரிக்கு தக்பீர் சக்கரவர்த்தி அளிக்கும் கௌரவம் தனக்கு அளிக்கப்படும் கௌரவம் என்றெண்ணிய அரசர் மந்திரி மதியூகியைத் தக்பீர் சக்கரவர்த்தி அனுப்பிய பண்டிதருடன் வடநாட்டிற்கு அனுப்பி வைத்தார்.

பண்டிதர் தாம் மந்திரி மதியூகியுடன் புறப்பட்டு வந்துகொண்டிருப்பதை முன்கூட்டியே ஒரு ஊழியன் மூலம் தக்பீர் சக்கரவர்த்திக்குச் செய்தி அனுப்பிவிட்டார்.



மந்திரி மதியூகி தம் அரசவையினுள் பிரவேசம் செய்யும் பொழுதே அவரது மதிநுட்பத்தைச் சோதித்துப் பார்த்துவிட வேண்டுமென்று எண்ணினார் சக்கரவர்த்தி தக்பீர்.

தம் அத்தாணி மண்டபத்துக்கு மந்திரி, பிரதானிகள், சேனாதிபதி, படைத் தளபதிகள், புலவர்கள், அறிஞர்கள் எல்லாரையும் வரவழைத்தார். அவரவர் ஆசனங்களில் அமரச் செய்தார்.

பிறகு மந்திரியின் உடைகளைத்தான் அணிந்து கொண்டார் சக்கரவர்த்தி.

தன் அரச உடைகளை அந்த மந்திரிக்கு அணிவித்தார்.

மந்திரி அமரும் இருக்கையில் தாம் உட்கார்ந்து கொண்டார். தம் அரியாசனத்தில் அரச உடை அணிந்த மந்திரியை அமரச் செய்தார்.

இவைகளை எல்லாம் சக்கரவர்த்தி தக்பீர் செய்து முடித்த பொழுது வெளியே ஆரவாரமும், மங்கல வாத்திய ஒலிகளும் கேட்டன. எல்லாரும் தர்பாரின் வாயிலைப் பார்த்தனர்.

சக்கரவர்த்தி அனுப்பின பண்டிதர் மந்திரி மதியூகியை ராஜாங்க மரியாதையோடு அரசவைக்கு அழைத்து வந்தார்.

மந்திரி மதியூகி புன்னகைத்த வண்ணம் அவை முழுவதையும் ஒரு பார்வை பார்த்தார்.

பிறகு தாம் கொண்டு வந்த காணிக்கைப் பொருட்களை எடுத்துச் சென்று மந்திரி உடையிலிருந்த சக்கரவர்த்தி முன்வைத்து வணங்கி, "மன்னர் பெருமானே! என்னைத் தங்கள் நாட்டிற்கும் அரசவைக்கும் அழைத்துக் கௌரவப்படுத்தியதற்கு நன்றி. அடியேனுடைய காணிக்கையை அங்கீகரிக்க வேண்டும் அரசே," என்றார்.

சக்கரவர்த்தி தக்பீர் ஆச்சரியத்தால் பேசமுடியாமல் வாயடைத்துப் போனார். பிறகு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, "மதியூகி மந்திரியாரே, இதற்கு முன் நீங்கள் என்னைப் பார்த்ததுண்டா," என்று கேட்டார்.

"இல்லை அரசே" என்றார் மதியூகி.

"என் உருவை ஓவியத்திலேனும் பார்த்ததுண்டா மதியூகியாரே?"

"இல்லை அரசே,"

"நான் இப்படி இப்படி இருப்பேனென்று அறிந்ததுண்டா?"

"இல்லை அரசே."

சக்கரவர்த்திக்கு வியப்பு அதிகமாயிற்று

"என்னை நீங்கள் நேரில் பார்த்ததுமில்லை. என் உருவை ஓவியத்திலும் கண்டதில்லை. என் முக, அங்க அடையாளம் அறிந்ததுமில்லை. பின் எவ்வாறு மந்திரி உடையிலிருந்த என்னை மன்னர் என்று கண்டுபிடித்தீர்கள் மதியூகியாரே?" என்று கேட்டார் சக்கரவர்த்தி தக்பீர்.

"மன்னர் பெருமானே, இந்தச் சபைக்குள் நான் நுழையும் பொழுது இங்குள்ள சபையினர் அவ்வளவு பேரும் முதலில் தங்களையும், பிறகு என்னையும் மாறி மாறிப் பார்த்தார்கள். இதனால் இந்தச் சபைக்குப் பிரதான புருஷராக விளங்குகிற நீங்கள்தான் மன்னராக இருக்க வேண்டும் எனத் தெரிந்து கொண்டேன்," என்றார் மதியூகி.

சக்கரவர்த்தியும் அவர் மதிநுட்பத்தை மெச்சி அவருக்கு ஏராளமான வெகுமதிகளை வழங்கி மகிழ்வித்தார்.

## பாப்பா முரசு

## இரகசியப் பேச்சு

யானைகள் தங்களுக்குள் இரகசிய ஒலி அதிர்வுகளை உண்டாக்கிப் பேசிக்கொள்கின்றன. அந்த அதிர்வுகளை மனிதனால் கேட்க முடியாது. இதைக் கார்னெல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி தாத்தரின் பைனி கண்டுபிடித்துள்ளார்.



யானைக் கும்பல்களிடையே ரேப் ரெக்கோடரை இயக்கி அதை அதிக ஒலி வேகத்தில் சுழல விட்டால் யானைகள் ஒரு விதமான ஒலி எழுப்பி தூரத்தில் உள்ள கூட்டத்துடன் பேசிக்கொள்வது தெரிந்துள்ளது. ஆனால் இந்த ஒலிகளை நவீன பதிவுக் கருவிகளின் உதவியின்றிக் கேட்க முடியாது. இவ்வகை ஒலிகள் 19 கிலோ மீற்றர் தூரத்திற்குப் பரவக்கூடியவை என விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.12.1933.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 18**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்**
**கிருலப்பனை,**
**கொழும்பு-05.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 15

பரிசுக்குரியவர்:
செல்வி. க.கேமலா
நாமகள் வித்தியாலயம்-கல்குடா.

பாராட்டுக்குரியவர்கள்:

என்.எம்.தஸ்லீம்
டாக்டர் அகமட் பரீட் மாவத்தை
காத்தான்குடி-06.

எம்.ஐ.எஸ். ஜெமீலா
ஸம்சுல் இல்ம் மத்திய கல்லூரி-மருதமுனை-03.

ஞா. இன்பச்செல்வம்
மட்/ ஆரைப்பற்றை மகாவித்தியாலயம்
ஆரையம்பதி-02.

ஜே. சலாஹுதீன்
மட்/அன்-நூர் மகா வித்தியாலயம்
வாழைச்சேனை.

எஸ்.கவிதா
78, கந்தசாமி கோயில் வீதி
திருகோணமலை.

செல்வன். ரவீந்திரன் பாலக்கிருஷ்ணன்
பாக்கிய மகா வித்தியாலயம்-மாத்தளை.

செல்வன். வேல்முருகு ராமு
புனித மிக்கேல் கல்லூரி
மட்டக்களப்பு.

## விடுகதைகளும் விடைகளும்

1. பாடல் இல்லாத ஆட்டம். பணம் பறிக்கும் ஆட்டம். அது என்ன?
2. அண்ணன் மேளம் அடிக்க, தம்பி விளக்குப்பிடிக்க, தாய் அழுகிறாள். அவை எவை?
3. எத்தனை முறை வெட்டினாலும் வெட்டப்படமாட்டாது. அது என்ன?
4. விரிந்த தட்டில் நிறைந்த பலகாரம். விருந்துக்குத்தான் ஆளில்லை.
5. கறுத்தப் பாறைக்கு வெளுத்த வேர். அது என்ன?
6. வீட்டுக்குள் வீடுகட்டி, வீட்டையே கொள்ளையடிக்கும். அது என்ன?
7. எட்டுக்கால் உன்றி இருகால் படமெடுத்து வட்டக்குடை பிடித்து வாறான் எங்கள் மகாராசன். அவன் யார்?

1. சூதாட்டம் 2. இடி, மின்னல், மழை
3. தண்ணீர் 4. வானத்தில் நட்சத்திரங்கள்
5. யானைத்தந்தம் 6. எலி 7. நண்டு

செல்வன்-கே.சுபாஸ்குமார்
ஹைலண்ட்ஸ் மகாவித்தியாலயம்-ஹட்டன்.

1. அண்ணன் நான்கு பாய் வாங்கி சுத்துறான் சுத்துறான் சுத்தி முடியவில்லை. அது என்ன?
2. வெள்ளை பாம்பு கல்ல தூக்கும் அது என்ன?
3. வட்ட வட்ட குருவி. வண்ண வண்ண குருவி. செல்லாத இடம் எல்லாம் சென்று வரும். அது என்ன?
4. உடம்பு எல்லாம் குத்து வாங்கி வாங்கி ஊர விட்டு ஊர் ஓடுவான். அவன் யார்?
5. அடிச்சால் சிரிப்பான் கடிச்சால் இனிப்பான். அவன் யார்?
6. சின்ன வீட்டுக்குள் சீராய் இருக்குது. அது என்ன?
7. அட மழை பெய்தாலும் நான்கு அரசர்கள் நனைய மாட்டார்கள் அவர்கள் யார்?
8. நெருப்பிலே எரிக்க ஒளி விடும் விறகு அல்ல. அது என்ன?
9. வாலால் தண்ணி குடித்து தலையால் தண்ணி தரும். அது என்ன?
10. ஒரு மாடு படுக்க ஒரு மாடு இழுக்க. அது என்ன?

1. கதிரிப்பாய்; சண்டிலிப்பாய், மானிப்பாய், கோப்பாய்
2. புடலங்காய் 3. பணம்
4. தபால் 5. தேங்காய்
6. தீப்பெட்டி 7. பசுவின் பால்மடி
8. பொன் 9. தென்னை மரம்
10. அம்மியும் குழவியும்.

எஸ்.தவவானி-கொழும்பு-10

## சின்ன பாப்பா!



சின்னச் சின்ன பாப்பா!
சிரிக்கும் நல்ல பாப்பா
அன்னை முகம் கண்டால்
அழுகை நிறுத்தும் பாப்பா!
சுட்டித்தனம் செய்யும்
சொக்க தங்க பாப்பா!
பட்டுச் சட்டை போட்டு
பலூன் ஊதும் பாப்பா!
தட்டா மாலை சூட்டி
தானே விழும் பாப்பா!
பாட்டுப் பாடி என்னை
பார்த்துச் சிரிக்கும் பாப்பா!


ஏ.குசைன்தீன்
மூதூர்-02.

1. ஓராண்டு உயிர்வாழ்வாள். ஒளியில்லாக் காட்சி தருவாள். பன்னிரெண்டு குழந்தைகளைப் படிப்படியாகப் பெறுவாள். அவள் யார்?
2. நித்தம் கொட்டும். சத்தமில்லை. அது என்ன?
3. பூமியில் துள்ளிடுவான். பலர் கையில் அடிபட்டு பதறிடுவான். அவன் யார்?
4. உருவம் இல்லாதவன் உலகம் முழுவதும் சுற்றி வருவான் அவன் யார்?
5. யாவரும் விரும்பும் பால். யாவருமே குடியாத பால். என்ன பால்?

1. கலண்டர் 2. கண்
3. பந்து 4. காற்று
5. தபால்

எம்.எம்.மைமுனிஸா
தி/அல்.தாரிக் மகா வித்தியாலயம்
கந்தளாய்.

## பெரிய விழிகள்



தேவாங்கிற்கு விழிகள் மிகப் பெரிதாக இருக்கும். இரவில் சிறிது ஒளி கூட இல்லாத இருளில்கூட இதற்குக் கண்கள் நன்கு தெரியும். இதன் கழுத்துக்கூட 180 பாகை வரை அப்படியும் இப்படியும் திரும்பக்கூடியது. எளிதில் இரையைப் பிடித்து உண்பதற்கு ஏற்ப இந்த வசதிகள் இயற்கையிலே அதற்கு அமைந்துள்ளது.

## கார்த்திகை விளக்கு

சிவன், விஷ்னு, பிரம்மா என்ற மும்மூர்த்திகளிடையே ஏற்பட்ட போட்டியின்போது சிவபெருமான் ஒரு எரிகிற மலை வடிவத்தைக் கொண்டதாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. இதன் ஞாபகர்த்தமாகக் கார்த்திகை மாதத்தில் திருவண்ணாமலையில் (இந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள ஓர் இடம்) உள்ள மலை முழுவதும் விளக்குகளால் அலங்கரிக்கப்படும். வீடுகளையும் விள்ககுகளால் அலங்கரிப்பர்.

## கார்த்திகையாள் வந்தாள்

கார்த்திகையாள் வந்தாள்- திரு
கார்த்திகையாள் வந்தாள்
காலமெலாம் இன்பம் தர
கார்த்திகையாள் வந்தாள்

பஞ்சமெனும் இருள் நீக்க
கார்த்திகையாள் வந்தாள்
பாரெல்லாம் புகழ்பாட
கார்த்திகையாள் வந்தாள்
வஞ்சனையைப் போக்குதற்கு
கார்த்திகையாள் வந்தாள்-நல்ல
வாழ்வுதனை யளிப்பதற்கு
கார்த்திகையாள் வந்தாள்
செல்வமெனும் ஒளி பெருக்க
கார்த்திகையாள் வந்தாள்- இன்னல்
சென்றோடி மறைந்திடவே
கார்த்திகையாள் வந்தாள்

இனபேதம் மறைந்திடவே
கார்த்திகையாள் வந்தாள்-எங்கும்
இருக்கும் போர் நிலை யகல
கார்த்திகையாள் வந்தாள்
குற்றமெனும் செயல் நீங்க
கார்த்திகையாள் வந்தாள்- புவியில்
ஒற்றுமையை வளர்த்திடவே
கார்த்திகையாள் வந்தாள்
அழிவென்ற வேர் அறுக்க
கார்த்திகையாள் வந்தாள்
அமைதியெனும் மரம் வளர
கார்த்திகையாள் வந்தாள்.

கார்த்திகையாள் வந்தாள்- திரு
கார்த்திகையாள் வந்தாள்
காலமெலாம் இன்பம்தர
கார்த்திகையாள் வந்தாள்.

-தம்பிலுவில் தயா-

## ஆல மர வண்ணாத்தி!

என்-
நிமிஷங்கள்,
நிதானிக்க,
நீ
நகம் கடித்து
விரல் சொடுக்கி
துடித்து நிற்பாய்.

•

தாமதித்து
வந்ததிற்காய்
உன்- முகச்சூரியன்
இருண்டு கிடக்கும்.

•

ஆலமர வேரில்
இதயம் செதுக்கி
நாமம் பொறித்து
நாம் பிரியும்போது,
நிலவு-
நிர்வாணமாய்
ஓடித்திரியும்.

•

நீ-
புள்ளியாய் தேயும் வரை
என் கரங்கள்
கொடியசைக்கும்.

•

நான் உன் கைக்குட்டையால்
பனி துடைத்து
எழுந்து நடக்கையில்
வானில் விழும்,
வைகறைச்சாவி!

ஒட்டமாவடி-அறபாத்.



## கைக்குட்டை!

ஒருவருக்கொருவர்
கைமாற்றிக்கொள்ளும்
அனாதைக் குழந்தை!

புழுதியைச் சுமக்கும்
அழுக்கு மூட்டை!

எடுத்தவர்களுக்கெல்லாம்
ஏவல் புரிகின்ற
அடிமை!

என் காதலி
எனக்குத் தந்த
"தாஜ்மஹால்"

ஷஹிர்ஷா தாஸிம்
தர்காநகர்.

# தேன் கிண்ணம்



## விண்ணப்பம்

விடைகளை நீ-
விழிகளிலேயே
வைத்திருந்தால்
எப்படி?
இங்கே பார்- ஒரு
வினாக்குறியைப் போல்
நான்
வளைந்து கிடப்பதை

•

என்
கரங்களுக்கு
வலிமையில்லாமல்
இருக்கலாம்
உனக்கொரு
காதல் கடிதமெழுத......
நெஞ்சிற்கு
வலிமையுண்டு
உன்னை
நினைத்துக்கொண்டே
இருப்பதற்கு

•

ஊரே
மகிழ்கிறது- பெண்ணே
திருவிழா
வந்துவிட்டதென்று
என்
மகிழ்வோ
திருவிழாவுக்கு- நீவரும்
பாதையிலேயே
படுத்திருக்கிறது

•

தினமும் நான்
காதல் யாகம்
நடத்துவது- அன்பே
உன்- நினைவுகளை
நினைத்துக்கொண்டுதான்

•

செவிகளை
செவிடுபடுத்தும்
கரவொலிகள்- என்
கவிதைகளுக்கு
கிடைத்தாலும்
கண்ணே- உன்
கண்கள்
கரிசனையுடன்
என்(னை)
கவிதைகளை
கௌரவிப்பது போலாகுமா?

•

வேலைவெட்டி
இல்லாதவன்
என்று சொல்லும்
விமர்சகியாக
இல்லாமல்- என்
கவிதைகளுக்காவது- நீ
ரசிகையாக இரு
என்பதே- என்
இறுதி விண்ணப்பம்.

•

அக்கரைப்பற்று-ஏ.ஜீ.சேகர்.

## விடிவின் தடயங்கள்

இருள் முளைத்த கொடூரம்
சீவிய மண்ணிலும்
சிவப்பு உணர்விலும்
விழிப்பின்-
அவசியத் தேவைகளது
வேகத்தில் பெருக்கமும்
அப்போதுதான்
அதில்-
பொறுத்தலின் முழுப் பயனையும்
மனது-
பொய்யென நிறுவும்!

•

வதைகளின்
உச்ச வலியில்
பதறிப் போன
வாழ்வின் துயரிலும்
சீவியத்தையல்லவா
சிதைக்கின்றன
அடக்குமுறைகள்!

•

மௌனம் இனியில்லை...
கொடுமையின்
கந்தக இடிகள்
கரங்களால் தடுக்கும் வீரத்தில்
இதயங்கள்
எழுச்சி தாங்கும்;
தகர்க்கவும் தான்!

•

மக்களின் கடைசித் தூதான
குரல்- குருதி கூட
ஆயுத வட்டம் கீறப்பட்டே.....
அடக்குதலின் வெறிதான்
ஜனநாயகமா?
நீங்களே எழுதிக் கொண்ட
யாப்புகளில்...?


•

மறங்கள்!
இந்தச் சிவப்பு மக்கள்
எலும்பால்-
சதையால் ஆனதை.
மறந்தே போய்விடுங்கள்.
இவர்கள்-
எழுச்சிகளால் ஆனவர்கள்.
புதிதாய் இவர்கள்
பண்ணிக்கொண்ட நிமிடமெல்லாம்
தட்டிக் கேட்பதற்கென்றே
தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

•

இவர்களின்
பிரளய எழுதலில்
விலங்குகள் எல்லாம்
நொறுங்கும்;
தூசு தூசாகும்
இருள் முட்கள்
பிய்த்து எறிந்து
சொந்த மண்ணில்
சுதந்திர விடியலின்
தடயங்கள் பதிக்கின்ற
புதிய உற்சாகத்தில்
புரட்சியும் வெடிக்கும்!

-காத்தான்குடி அனு-



## இறுதியான நினைவுகளுடன்...

எங்கள்
தெருவோரத்துப்
பாதுகாப்பு
அலரன்கள்
குரைக்கும்
சத்தம்
எங்கோ
கேட்கிறது....!

• •

நாலாபுறமும்
மயான அமைதி
நிசப்தம்
தரும்
நிம்மதியில்
நினைவுகளின்
உறக்கம்!

• •

"டுமீர்-டுமீர்"
துப்பாக்கி
அரக்கனின்
போர்வைக்குள்
மீண்டும்
எங்கள்
வழக்கமான
இரவுகள்!

• •

கலைந்த
கனவுகள்
கண்
விழிக்கும் போது
வழமை போன்ற
மரண
விசாரணைகள்!

• •

இன்றைய
அரக்கர்
மன்றின்
தீர்ப்பு
நடுவோடை
நண்பனுக்கு
நாளைய
தீர்ப்பு
என்பக்கம்....!

• •

மீண்டும்
மறுபிறப்பில்
இங்கு
'அப்பொய்ன்மண்ட்'
கிடைத்தால
'சம்திங்'
கொடுத்தாவது
'ரான்ஸ்பேர்'
பெற வேண்டும்
இறுதியான
நினைவுகளுடன்
ஆத்மாவின்
இறுதி
உறக்கம்...!


- ஆரையம்பதி மனோ-


# அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:**

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



**இலக்கம்-19**
**சுப்பர் ஸ்டார் சந்திப்பு**

காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-..............................
படத்தின் இயக்குநர் பெயர்:-..............................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-..............................
இப்படம் வெளியான ஆண்டு:-..............................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.


## எப்போது?

கத்துங் குயிலே நீ கணநேரம் என்னோடு
சித்தங் கலந்தேகிச் சில கதைகள் கேளாயோ
பித்தாகித் துயர் தேங்கி நிற்கின்ற என்னிலை தன்னை
வித்தைகள் காட்டாது சொல்வாயோ என்துணைவரிடம்...?

மழலையின் ஏக்கத்திலே மணியிழந்த மகுடம் போல்
மாதரசி நானும் மனமேங்கி நிற்கின்றேன்
தனம் தேடச் சென்றுள்ள காதலனைப் பிரிந்திங்கு
வனவாசம் செய்வதனால் விம்முகிறேன் எந்நாளும்....

விடிகாலைப் பொழுதோடே வருகின்ற காக்கிச்சட்டை

கடிந்தேகிப் பணம் பறிக்கச் செய்கின்ற லீலைகள்
புரியாத கணவர்மார் பணமீட்டும் நிலையொன்றில்
பிரிந்தேகி வெளிநாட்டில் வாழ்கின்ற நிலை சோகம்.......

'அப்பா வருவாரோ' சிறுபிஞ்சின் அரற்றலிலே
நப்பாசை என்னுள்ளும் எதிர்காலம் ஒளிவெள்ளம்
வந்த பணம் போதுமினி வாழ்வோமே குடும்பமுடன்
சிந்தித்துச் சிறகடித்து வருவாரோ என் துணைவர்....?

நம்புவது நடக்காது எதிர்பார்ப்பும் ஏகாது
வம்பினை எதிர்நோக்கும் மனித நேயமும் மாறாது
அவரங்கே நாமிங்கே இதுவொன்றே காலஞாயம்
அவலங்கள் தீர்வதெப்போ? ஆசைக்கனவுகள் மறப்பதெப்போது......?

ஜெயந்தி- பம்பலப்பிட்டி.



# இந்த வாரம் உங்கள் பலன்

**(05.12.93 முதல் 11.12.93 வரை)**

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

விருட்சிகம் - சூரியன், செவ்வாய், இராகு, வெள்ளி
மகரம் - சனி
இடபம் - கேது
துலாம் - வியாழன், புதன்

தனு இராசியில் செவ்வாய் 11.12.93ல் சஞ்சாரம்.
சிம்மம், கன்னி மற்றும் துலாம் இராசிகளில் சந்திரன் சஞ்சரிக்கிறார்.

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் பயணம், கடன் சுமை. | பி.ப 1 மணி |
| திங்கள்- | தனலாபம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், புதிய முயற்சி. | பி.ப 1 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, கௌரவம். | காலை 10 மணி |
| வியாழன்- | அந்நியர் சகவாசம், உறவினர் பகை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | செய்தொழில் விருத்தி, பணவரவு; | காலை 9 மணி |
| சனி- | செலவு மிகுதி, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்தோர் நட்பு, மனத்தெளிவு. | பி.ப 4 மணி |
| திங்கள்- | தனலாபம், பெரியோர் அனுகூலம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | துன்பம் விலகும், மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | காலை 10 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், துயர் நீங்கும். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, கடன் தொல்லை. | காலை 7 மணி |
| சனி- | புகழ், கீர்த்தி, கருமங்களில் வெற்றி. | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, பயனுள்ள செயல். | பி.ப 2 மணி |
| திங்கள்- | மங்கள காரியம், பணவரவு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, துயர் அதிகம். | பி.ப 3 மணி |
| புதன்- | வீண் பயம், கடன் சுமை. | காலை 7 மணி |
| வியாழன்- | காரிய சித்தி, எதிர்பாரா நட்பு. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | நம்பிக்கை அதிகம், தேகசுகம். | பி.ப 2 மணி |
| சனி- | கருமங்களில் வெற்றி, சுபகரும நன்மை. | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, இனசனக் கொண்டாட்டம். | பகல் 12 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், பிரயாண மிகுதி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | மறைமுக எதிர்ப்பு, வீண் கவலை. | பி.ப 2 மணி |
| புதன்- | அந்நியரால் நன்மை, பணத்தட்டுப்பாடு. | பி.ப 3 மணி |
| வியாழன்- | தனலாபம், பொருள் சேர்க்கை. | காலை 10 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, கடன் தொல்லை. | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தீயோர் சகவாசம், மனக்கலக்கம். | காலை 9 மணி |
| திங்கள்- | பணவரவு, காரியசித்தி. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | நடைக்கஷ்டம், மறைமுக எதிர்ப்பு. | பி.ப 4 மணி |
| புதன்- | பணத்தட்டுப்பாடு, பெரியோர் உதவி. | காலை 9 மணி |
| வியாழன்- | வீண் அலைச்சல், சந்தேகம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணக்கஷ்டம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் வாக்குவாதம், இன்சன விரோதம். | பி.ப 3 மணி |
| திங்கள- | பண நெருக்கடி, கடன்படல். | காலை 10 மணி |
| செவ்வாய்- | அறிஞர் நட்பு, அரச சன்மானம். | பி.ப 4 மணி |
| புதன்- | துயர் நீங்கும், தூர இடப்பயணம். | பி.ப் 1 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, வெளியிடப் பிரயாணம். | காலை 7 மணி |
| வெள்ளி- | பணவரவு, காரியானுகூலம். | பி.ப 2 மணி |
| சனி- | கௌரவம், கருமங்களில் வெற்றி. . | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரியானுகூலம், பணவரவு. | பி.ப 4 மணி |
| திங்கள்- | புதிய முயற்ச்சி, பொருள் மேன்மை. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | நடைக்கஷ்டம், பிராயண மிகுதி. | பகல் 11 மணி |
| புதன்- | தனலாபம், வெளியார் உதவி. | பி.ப 3 மணி |
| வியாழன்- | நீடித்த நோய், மனக்குழப்பம். | காலை 10 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, பயணம் வெற்றி. | காலை 9 மணி |
| சனி- | செலவு மிகுதி, வீண் சந்தேகம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மறைமுக எதிர்ப்பு, கௌரவம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | துன்பம் மிகுதி, பணக்கஷ்டம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | காரிய சித்தி, வெளியிடப் பயணம். | பி.ப 3 மணி |
| புதன்- | தனலாபம், பெரியோர் நட்பு. | பி.ப் 1 மணி |
| வியாழன்- | காரிய நன்மை, கடன் தொல்லை. | காலை 10 மணி |
| வெள்ளி- | வெளியிட வாசம், தருமச் செய்கை. | பி.ப 3 மணி |
| சனி- | அந்நியர் சகவாசம், துயர் நீங்கும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள்,அதிஷ்ட இலக்கம்- 6

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் உதவி, மனஆறுதல். | பி.ப 2 மணி |
| திங்கள்- | செலவு மிகுதி, பணக்கஷ்டம். | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | வீண் கோபம், இனசன விரோதம். | காலை 8 மணி |
| புதன்- | கௌவரவம், அரச சன்மானம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | துயர் அதிகம், பணக்கஷ்டம். | பகல் 11 மணி |
| வெள்ளி- | கருமங்களில் வெற்றி, மனச்சந்தோஷம். | பகல் 12 மணி |
| சனி- | தனலாபம், துயர் நீங்கும். | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் - 1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | அதிகார சித்தி, ஆடம்பர வாழ்வு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | பணச் செலவு, காரியத்தடை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | மறைமுக எதிர்ப்பு, காரியங்களில் வெற்றி. | பி.ப 3 மணி |
| புதன்- | உயர்ந்தோர் நட்பு, அரச சன்மானம். | பகல் 12 மணி |
| வியாழன்- | பகை நீங்கும், திடீர் பயணம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வீண் அலைச்சல், திட்டங்கள் வெற்றி. | காலை 10 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, வீண் செலவு. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் நட்பு, பணவிரயம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, கௌரவத்தன்மை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாசம், உறவினர் பகை. | பி.ப 3 மணி |
| புதன்- | குடும்பப் பிணக்கு, கருமங்களில் தடை. | காலை 10 மணி |
| வியாழன்- | நடைக்கஷ்டம், மனக்குறை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பிரயாணம், பணச்செலவு. | காலை 9 மணி |
| சனி- | வீண் கலகம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, செலவு மிகுதி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | பூமியால் லாபம்; காரியசித்தி. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பிரயாணம், மேன்மை. | காலை 9 மணி |
| புதன்- | கௌரவம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, புதிய முயற்சி. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | எதிர்பார்த்த கருமம் வெற்றி, உயர்வு. | பி.ப 2 மணி |
| சனி- | தனலாபம், துயர் நீங்கும். | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 9

# மருத்துவ விந்தைகள்

## உடல் தரும் எச்சரிக்கைகளை உணருங்கள்!

### இதோ ஒரு பட்டியல்! பத்திரப்படுத்திப் பயன்படுத்துங்கள்!

விட்டமின் அல்லது கனிப் பொருள் போதாமையினால் ஏற்படும் தாக்கத்தை உங்கள் உடம்பு உணர்த்துகின்றது. இதனை ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கொண்டால் பல நோய்களிலிருந்தும் விடுபட முடியும் என்று மருத்துவ நிபுணர்களும் உணவியல் வல்லுநர்களும் கூறுகின்றனர்.

"உங்கள் உடம்புக்குத் தேவையான ஊட்டச்சத்தினைத் தரும் விட்டமின்கள் மற்றும் கனிப் பொருட் பதார்த்தங்களை தேவையான அளவு பலன் தரவில்லையானால் பலதரப்பட்ட நோய் பிணிகள் உங்கள் உடலை விரைவில் நாடி வரும்" என்று பிரபல சத்துணவு நிபுணரான டாக்டர் அலன் கொட் கூறுகிறார். "உங்கள் உடம்பில் எத்தகைய விட்டமின்கள் அல்லது கனிப்பொருள் குறைபாடடைகிறது என்பதை உணர்த்த அவ்வப்போது உங்கள் உடம்பு எச்சரிக்கை விடுக்கிறது. இதனை உணர்ந்து நடவடிக்கை எடுத்தால் பெரும் பாதிப்புகளிலிருந்து விடுபட முடியும்" என்று சத்துணவுத் துறையில் வல்லுநர்களாக விளங்கும் மற்றும் இருவர்- டாக்டர் மைக்கேல் லெஸ்ஸர் மற்றும் டாக்டர் நிச்சாட் பிரென்னன் ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

எந்தெந்த விட்டமின் அல்லது கனிப்பொருள் குறைந்தால் எத்தகைய தாக்கம் உடலுக்கு ஏற்படும் என்றும், எத்தகைய உள்ளீடுகளினால் அத்தகைய தாக்கம் நீங்கும் என்றும் பட்டியல் தரப்பட்டுள்ளது.

**விட்டமின் A குறைபாட்டினால்-**

விரல்களின் நகங்களில் வெடிப்புகளும் கீறல்களும் ஆழமான கோடுகளும் காணப்படும். சருமம் தடிப்பதுடன் காய்ந்த தன்மையுடனும் காணப்படும்.

நினைவாற்றலின்மை, தூக்கமின்மை, எதற்கெடுத்தாலும் சினங் கொள்ளும் தன்மை, எதிலும் தெளிவில்லாத குழப்பமான நிலை ஆகியவை ஏற்படும்.

இதன் விளைவாகத் தொற்று நோய்கள் எளிதில் பீடிக்கும் தன்மை, மாலைக்கண் மற்றும் முழுமையான கண்பார்வை இழப்புகளும் ஏற்படலாம்.

இவற்றைத் தவிர்க்க என்ன செய்யலாம்?- மீன் எண்ணை, மாட்டு ஈரல் மற்றும் காரட் கிழங்கு போன்றவற்றை அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவை தவிர விட்டமின் ஏ சத்தினை ஒரு மாதத்தில் மொத்தம் 10,000 யூனிட்டுகள் பெறத்தக்கதாக உட்கொள்ளல் வேண்டும்.

**விட்டமின் B I (தியாமைன்)**

சாதாரண ஒலியும் பேரிசைச்சல் போல் தோன்றி நல்ல இசையும் கசக்கும் நிலை ஏற்படும். பின்னங்கால் பகுதியில் அடிக்கடி கடும் வலி எற்படல், சோர்வு, தளர்ச்சி போன்ற பாதிப்புக்கள் தோன்றும், நரம்புகளில் சீரற்ற நிலைப்பாடுகளும் மாரடைப்பு போன்ற வியாதிகளும் ஏற்படக்கூடும்.

இத்தாக்கங்களிலிருந்து விடுதலை பெற தினசரி 50 மில்லிகிராம் எடை தியாமைன் சேர்ந்த விட்டமின் B (பல்கூட்டு) மாத்திரை உட்கொள்ள வேண்டும். தாவர உணவுடன் ஈரல் வகையும் உட்கொள்ள வேண்டும். வடியாளரிடம் பெறும் காடிச்சத்தும் உட்கொள்ளலாம். (உ+ம்- பொவ்றில், மாமைட், புரோவைட் போன்றவை தினசரி 3 தேக்கரண்டி உட்கொள்ளலாம்.)

**விட்டமின் B2-**

குறைபாடிருக்குமானால்-

வாய் உதடுகளில் வெடிப்புத் தோன்றும். சரும வியாதிகள் ஏற்படுவதுடன் உள்ளங்கால் மற்றும் கைகளில் எரிச்சல் உண்டாகும். ஒளிபடும் போது உடல் கூச்சம் ஏற்படும். செங்குருதிக் கலன்கள் சிதைவதனால் உடல் வெளுப்படையும். கண் பார்வைக் கோளாறும் ஏற்படலாம்.

இக்குறைபாட்டினைச் சீராக்குவதற்கும் காடிச்சத்தில் தினசரி 3 தேக்கரண்டி உட்கொள்ள வேண்டும். அல்லது விட்டமின் B (பல் கூட்டு) மாத்திரை ஒவ்வொரு நாளும் உட்கொள்வதுடன் ஈரல் மற்றும் தானிய உணவுகள் போதுமான அளவு உட்கொள்ளுதல் வேண்டும்.

**விட்டமின் B3 (நியாசின்)**

குறைந்தால் உண்டாகும் கோளாறுகள்- நாக்கு சிவந்து புண் ஏற்படக்கூடும். சுவாசம் கெட்ட வாடை தரும். வாய்ப்புண் ஏற்படும். சோர்வுடன் தளர்ச்சி உண்டாகும். மேலும் குறைபாடு அதிகரித்தால் மூளைக் கோளாறும் தோன்ற வாய்ப்புண்டு.




**விட்டமின் C**

இச்சத்துக் குறையுமானால் புண்கள் ஆறுவதில் தாமதம் ஏற்படும். உடல் பலவீனம், பற்களின் ஈறுகளிலிருந்து இரத்தம் வடிதல், நாக்கில் வெடிப்புகள் தோன்றுதல் முதலியன ஏற்படும். இது தொடருமானால் தொற்று நோய்களைத் தடுக்கும் இயல்பு குன்றிவிடலாம்.

புளிப்பான உருசியுடன் கூடிய (சிற்றஸ்) பழவகைகள் (தோடை, நாரத்தை, எலுமிச்சை) அன்றாட உணவில் சேர்ப்பதனால் இத்தகைய குறைபாடுகளை நீக்கலாம். தினசரி விட்டமின் C மாத்திரைகள் போதுமான அளவு உட்கொள்ள வேண்டும்.

**சுண்ணச் சத்து**

சுண்ணச் சத்து குறையுமானால் மூட்டு வலி தோன்றும். தசைநார்களில் பிடிப்பு ஏற்படும். கால்கைகளில் விறைப்பு ஏற்படுவதுடன் உணர்வுகளும் இல்லாமல் போகலாம். இருதயக் கோளாறுகளும் தோன்றலாம். எலும்புகள் மென்மையடைய நேரிடும்.

இதற்கு கூடுமானவரை பாலுணவுகள் (பால், தயிர், வெண்ணை, நெய், வெண்ணைய்க்கட்டி) அவசியம் தினசரி உணவில் சேர்க்கப்பட வேண்டும். அத்துடன் தொலோமைற் மாத்திரைகளும் உட்கொள்ளலாம்.

**மக்னீசியம் (வெளிமம்)**

இதன் குறைபாட்டினால் குழப்பமான நிலை, மறதி ஆகிய கோளாறுகள் தோன்றும். நீடித்தால் மூளைக் கோளாறு மற்றும் இருதய சம்பந்தமான நோய்கள் தோன்றும்.

இதற்கு முழு அளவிலான தானிய உணவு போதுமான அளவு உட்கொள்ளுவதுடன் மக்னீசியம் செறிந்த பண்டங்களை உணவுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**ஸிங்க் (துத்த நாகம்)**

ஸிங்க் குறையுமானால் புண் இலகுவில் ஆறாது. நுகர்ச்சி மற்றும் சுவை போன்ற உணர்வுகள் குறைந்துவிடும். முடி உதிரும். பிள்ளைகளில் இக் குறைபாடு வளர்ச்சியைப் பாதிக்கும். மூட்டுவாதம் ஏற்படக் கூடும்.

கடல்வாழ் சிப்பிகளில் காணப்படும் உயிரினங்கள், மட்டி, இறால் நண்டு போன்ற உணவுகளை உண்பதன் மூலம் இக்குறைபாடுகளிலிருந்து விடுதலை பெறலாம். அத்துடன் இறைச்சி வகைகளும் உண்பதால் பலன் கிடைக்கும்.

**இரும்புச் சத்து**

இது குறையுமானால், உடல் சோர் வடைந்து பலம் குன்றும். நகங்கள் சுலபமாக உடைந்துவிடும். உடலில் சொறி சிரங்கு ஏற்படும். உடல் வெளுப்படைய நேரிடும்.

இக்குறைபாடுகள் நீங்க இரும்புச்சத்துச் செறிவுடைய பல்கூட்டு விட்டமின் மாத்திரைகள் பாவிப்பது அவசியம்.

இக் கோளாறுகளிலிருந்து விடுபட மாமிச உணவு உட்கொள்ள வேண்டும். கன்றுக்குட்டியின் ஈரல் உணவுடன் சேர்ப்பது நல்லது. அத்துடன் விட்டமின் B (பல் கூட்டு) மாத்திரை எடுப்பது சிறந்த பலனைத்தரும்.

**விட்டமின் B6**

குறைபாடு ஏற்படுமானால்- நாக்கு மற்றும் உதடுகளில் புண் ஏற்படும். சளி கட்டியாதல் ஆகிய சிக்கல்கள் தோன்றும். மூட்டுவாதம் ஏற்படவும் கூடும். பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறுகள் தோன்றலாம்.

இவற்றை நிவர்த்தி செய்ய ஈரலை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். தினசரி 3 தேக்கரண்டி காடிச்சத்து உண்ணலாம். இதற்கும் விட்டமின் B (பல் கூட்டு) மாத்திரை பாவிக்கலாம்.

**விட்டமின் B12**

இது குறைவடையும்போது கைகால் விரல்களில் உறுத்துதல் ஏற்படக்கூடும். நிதானம் இழக்க வேண்டியேற்படும். அத்துடன் உடல் வெளுப்படையக் கூடும். பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறுகள் ஏற்படலாம்.

இத்தகைய சிக்கல்களிலிருந்து விடுபட விட்டமின் B6 குறைபாட்டை நிவர்த்தி செய்ய பயன்படுத்தும் முறைகளையே கைக்கொள்ளலாம்.

இறைச்சி மற்றும் ஈரல் உணவுடன் சேர்க்கப்பட வேண்டும்.

"விட்டமின் மற்றும் கனிப்பொருள் குறைபாடுகளினால் மேற்குறிப்பிட்ட அடையாளங்கள் எச்சரிக்கையாக விடப்படுகின்றன என்பதனை அவதானித்து அதற்கேற்ப மாற்று நடவடிக்கைகளை எடுக்கத் தவறக்கூடாது. இக்குறை பாடுகள் உங்கள் அன்றாட சாதாரண வாழ்க்கையினைப் பாதிக்க இடம் தரலாகாது." இவ்வாறு டாக்டர் அலன் கொட் கூறுகிறார்.

"உங்களுடைய உடல்தரும் எச்சரிக்கை சைகைகளைப் புரிந்து கொள்வீர்களானால், அதற்கான குறைபாடுகளை அறிந்து அவற்றுக் கேற்ற சத்துணவை உண்டு தாக்கங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்" என டாக்டர் மைக்கல் லெஸ்ஸர் தெரிவிக்கிறார்.




## பெண்ணுக்கு உதவும் கல்சியம் உணவு!



பெண்களுக்கு வயதேற ஏற அவர்களுடைய எலும்புகள் வலுவிழந்து விடுகின்றன. இதனால் விரைவில் அவர்களுக்கு கூன் விழுந்து விடுகிறது. இதற்குக் காரணம் பெண்கள் இளமையில் போதுமான அளவு சுண்ணச் சத்துள்ள பண்டங் ளை உண்ணாமையேயாகும். சிறுமிகளாக இருக்கும் போதே கல்சியம் உள்ள உணவுப் பொருட்களை அவர்களுக்கு உண்ணக் கொடுக்க வேண்டும்.

பெண்கள் சிறு வயதிலிருக்கும் போது அவர்களுடைய எலும்புகள் இறுக்கமாக இருக்கும். காலம் செல்லச் செல்ல- 20 வயதின் பின்னர் அவர்களுடைய எலும்புகள் தளர ஆரம்பித்து விடுகின்றன. கல்சியம் சத்துள்ள பழவகைகள் மற்றும் ஏனைய உணவுப் பொருட்கள் மூலம் தினசரி 500 மில்லிகிராம் சுண்ணச் சத்துப் பெறக்கூடிய வாய்ப்புக்கிடைக்குமானால், முதுகுப் பின்புறம், இடை மற்றும் மணிக்கட்டு ஆகிய உடலின் பகுதிகளிலுள்ள எலும்புகளில் தளர்ச்சி ஏற்படுவதைத் தடுக்க முடியும். இத்தகவல்களை அமெரிக்க மருத்துவக் கழக சஞ்சிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

புதுமைத் தொடர்



அத்தியாயம்—23

ரம்யா சுட்டுவிடுவதாய் பிஸ்டலை நீட்டினாள்.

"என்னைக் கொல்லப் போகிறாயா?"

என்று குலாம்ஷா கேட்க,

"ஏன் கூடாதா?" என்று பதில் கேள்வி வீசினாள்.

"எனக்கும் தலைவியாகும் ஆசை வந்துவிட்டது. இது நியாயமான ஆசை என்று நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

என்று கேட்டு, பிஸ்டல் நீட்டியபடி குலாம்ஷாவின் முகம் பார்த்தாள்.

பதில் சொல்லாமல் அவள் விழிகளுக்குள் தன் விழிகள் அனுப்பி அலசினார் குலாம்ஷா.

மறுநொடியே குலாம்ஷாவின் கரம் கண்ணிமைக்கும் நேரத்தில் வித்தை காட்டியது.

ரம்யாவின் கரத்தில் இருந்த பிஸ்டல் குலாம்ஷாவின் கரத்தில் வந்து இருந்தது.

பிஸ்டல் மீது பார்வை பதித்து பின் ரம்யாவைப் பார்த்து சத்தமில்லாமல் சிரித்தார் ஷா.

ரம்யாவின் முகத்தில் திகைப்பு துளியளவும் இல்லை.

பிஸ்டலை மீண்டும் ரம்யாவிடம் நீட்டினார் குலாம்ஷா.

ரம்யா வினாக்குறியாய் புருவம் உயர்த்தினாள். பிஸ்டலை வாங்கத் தயக்கம் காட்டினாள்.

"என்ன தயக்கம் ரம்யா? ஷா விபரம் தெரியாதவனல்ல. வித்தை அறியாதவனுமல்ல. அதை செயலில் காட்டவே பிஸ்டல் பிடுங்கப்பட்டது. இந்தா.... இனி இது உனக்கு. சுடப் போகிறாயா? சுடு!"

சொல்லியபடி முன்னால் நகர்ந்து ரம்யாவின் கரத்தில் பிஸ்டல் திணித்தார்.

ரம்யாவின் முகத்தில் வியப்பு பாதி. வினாக்குறி மீதி.

"சாக வேண்டும் என்று ஆசையா ஷா?"

"வாழத் தெரியாதவன் வகுத்த சூத்திரம் தான் வாழ்வே மாயம் என்பது. எனக்கு வாழத் தெரியும். சோ...... வாழ்க்கையை வெறுக்கத் தெரியாது. அதற்காக சாவைக் கண்டு பயப்படவும் தெரியாது."

"புரியவில்லை."

"என்ன புரியவில்லை ரம்யா?"

"வலிய வந்து சாவின் வாயில் தலையையும் தருகிறீர்கள். வாழவும் பிரியம் என்கிறீர்கள்?"

"காரணம் நட்பு. உன்மீது கொண்ட நேசம்.

என்றோ போகும் உயிர்தானே. அது உன் பொருட்டு- எனக்காக உன் உயிரை பணயம் வைத்து பல சந்தர்ப்பங்களில் என் உயிரைக் காத்தாய் பார், அந்த உனக்காகப் போவதில் சத்தியமாய் கவலை கிடையாது."

ரம்யாவின் கண்கள் கலங்கிப் போயின. வார்த்தைகள் வெளிவந்த போது நெகிழ்ச்சியின் ஈரம் தெரிந்தது.

"உங்களை சுட்டுவிடுவேன் என்று நினைக் கிறீர்களா ஷா?"

"ஷா யாரோடும் சுலபமாக நட்புக் கொள்வதும் இல்லை. யாரையும் சுலபமாய் நம்புவதும் இல்லை"

"என்னை நம்புகிறீர்களா?"

"என்ற கேள்விக்கே இடமில்லை ரம்யா. எனினும் கூட வரமுடியாத பாதையில் நீ போனால் நட்போடு தடுத்துப் பார்க்கலாம். போயே தீர்வது என்று நீ முடிவு செய்தால் நான் குறுக்கே நிற்காமல் விலகிக் கொள்ளலாம். உன் வெற்றிக்கு என் உயிர் அவசியம் என்றால் அதை நீயே எடுத்துக்கொள்ளலாம்."

"இது நன்றிக் கடனா ஷா? உங்கள் உயிர் என்னால் காப்பாற்றப்பட்டதற்கான நன்றிக் கடனா ஷா?"

"இல்லை ரம்யா, இது நட்பின் கடன். நல்ல நட்புக்குள் நன்றிகள் எதிர்பார்க்கப்படுவதும் இல்லை. பரிமாறும் தேவையும் இல்லை."

ரம்யா குலுங்கி அழுதாள். உள்ளத்தின் ஆழத்தில் ஷாவின் தூய நட்பு ஆனந்தமாய் மலர்ந்து மணம் வீச, மகிழ்ச்சி தாளாமல் அழுதாள். இத்தனை நே ம் பெறுவது எத்தனை பாக்கியம் என்று நினைத்து நெகிழ்ந்து அழுதாள். ஷா முன்னே சரிந்து ரம்யாவின் தலையை ஆதரவாய் தடவினார்.

"ரம்யா உன்னை நான் அறிவேன். என்னை நீ பரிசோதிக்க முயன்றாய். சுட்டுவிடுவதாய் சொல்லிப் பார்த்தாய்."

"அதற்காக?"

"நானும் விளையாடிப் பார்த்தேன். பதிலுக்கு பதில்தான் உனக்கும் பிடிக்குமே. எனினும் ரம்யா, நம் நட்பு சுத்தமானது. எந்த சோதனைகளும் தேவையில்லை. இனி இப்படி வேண்டாம். என்ன?"

சொல்லி, ரம்யாவின் தலையில் உதடுபொருத்தி தன் அன்பு சொன்னார்.

ரம்யா நிமிர்ந்து பிஸ்டலைக் கார் சீற்றில் போட்டாள். கரங்கள் இரண்டும் உயர்த்தி குலாம்ஷாவின் முகத்தை தன் முகம் நோக்கி இழுத்தாள். ஷாவின் உதடுகளை ஈர இதழ்களால் நனைத்தாள். பின் விலகி,

"போகலாமா ஷா?" என்றாள்.

"பின்னே, சந்தோஷையும் சுட்டுவிட்டாய் நீ. சத்தம் கேட்டு அவர்கள் விழித்துக் கொண்டிருப்பார்கள். வேட்டையாட விரைந்து வருவார்கள்."

ஷா சொல்லி முடிப்பதற்கும் தூரத்தில் அடர்ந்த மரங்கள் மத்தியில் தெரிந்த பாதையில் வாகனம் ஒன்று வருவது தெரிவதற்கும் சரியாக இருந்தது.

"ரம்யா குயிக்" சொல்லியபடி மடியில் இருந்த ஏ.கே 47ஐ கையில் எடுத்தார்.

ரம்யா காரை ஸ்டாட் செய்தாள்.

கார் உறுமியது. உடனே ஓய்ந்தது.

"என்ன ரம்யா,"

"ஒத்துழைக்க மறுக்கிறது ஷா."

ரம்யா பதட்டமாய் சொல்லி மீண்டும் முயன்றாள்.

வந்த வாகனம் நெருங்கிக் கொண்டிருந்தது. ரம்யா மூன்றாவது முறையாக முயன்றாள். முடியாது என்று கார் அடம்பிடித்தது.

வேகமாய் வந்த வாகனம் ஒரு பிக்கப். பின்னால் கூரைகிடையாது. ஆயுதங்களோடு பலர் நிற்பது தெரிந்தது.

மரணம் வேகமாய் நெருங்கி வருவதாய் குலாம்ஷா நினைத்தார்.

அதற்கு முன் எதிரிகளுக்கு முடியுமானவரை மரணத்தை வழங்கி விடுவது என்று தீர்மானித்தார்.

வேகமாய் வந்த பிக்கப்பில் இருந்தவர்கள் சந்தோஷின் பிணம் குறுக்கே கிடப்பதை தூரத்திலிருந்தே கவனித்திருக்க வேண்டும். பதட்டமானார்கள். கோபமானார்கள். காரை நெருங்கும் வரை காத்திருக்காமல் துப்பாக்கிகளுக்கு வேலை கொடுக்கத் தொடங்கினார்கள்.

தோட்டாக்கள் உயிரின் சுவை அறிய விரைந்து பறந்து வரத் தொடங்கின.

குலாம்ஷா காரின் பின் கதவுக் கண்ணாடி கீழே இறக்கினார். அதன் வழியே ஏ.கேயை நீட்டி பிக்கப் சாரதியை குறி பார்த்தார்.

துப்பாக்கியின் விசையில் ஷா கரம் பதிக்க முயன்ற நொடியில்,

முன்னால் இருந்த ரம்யா,

"அ....ம்..மா"

என்று எழுப்பிய குரல் கேட்டு ஷாவின் கவனம் திரும்பியது.

பிக்கப் வந்து சந்தோஷின் பிணம் அருகே நின்றது. சந்தோஷ் குறுக்கே விழுந்து செத்திருந்தான். அதனால் தாண்டிவர முடியவில்லை.

பிக்கப்பில் இருந்தவர்கள் மூர்க்கமாய் கீழே குதித்தனர்.

■

சினத்தோடு டி.ஐ.ஜி. டென்சில் பார்த்தபோதும் மதுமிதா பயமின்றிச் சிரித்தாள்.

அறைக்கதவை உடல் பலத்தால் மோதி உடைத்து உள்ளே பாய்ந்த இன்ஸ்பெக்டர் அரவிந்த் திகைத்தார். அறையை சுற்றி நாற்புறமும் பார்வை செலுத்தினார்.

ஜன்னல்கள் சாத்தப்பட்டிருந்தன. உட்புறமாய் கொக்கிகள் மாட்டப்பட்டிருந்தன. பாத்ரூம் கதவு திறந்து உள்ளே தலையை நீட்டிப் பார்த்தார். மேலே வென்டிலேட்டர் கூட உட்புறமாய் மூடப்பட்டிருந்தது.

"எப்படித் தப்பியிருப்பார்கள்? எவ்வழியே சென்றிருக்க முடியும்?" வினாக்கள் விரிந்தன.

விடைகள் தட்டுப்படவில்லை.

வெளியே டி.ஐ.ஜி டென்சிலைப் பார்த்து மதுமிதா சொன்னாள்,

"ஏமாந்து போனீர்கள் டி.ஐ.ஜி. ஒரு டி.ஐ.ஜி, இரண்டு இன்ஸ்பெக்டர்கள். வெளியே ஒரு பொலிஸ் படை எல்லோருக்கும் குட் பை சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள் குற்றவாளிகள். நீங்கள் ஒன்று செய்யலாம்."

சினத்தை அடக்கியபடி டி.ஐ.ஜி கேட்டார்,

"என்ன?"

இதழ்களில் மாறாத புன்னகையோடு மதுமிதா சொன்னாள்.

"பேசாமல் இந்த யூனிபோமைக் கழட்டிப் போட்டுவிட்டு..... இப்போது முறைத்து என்ன செய்வதாம். அதுதான் கண்ணுக்குள் விரலை வைத்து ஆட்டிவிட்டுப் போய்விட்டார்களே."

"நீயார்?"

"என்ன கேள்வி இது? நான்தான் மதுமிதா."

"ஆதாரம்"

"அதை என் அம்மாதான் வந்து சொல்ல வேண்டும். பெற்றவளும் அவளே. பெயர் வைத்தவளும் அவளே. ஆனால் அம்மா வரமாட்டாள். ஏனென்றால் மிஸ்டர் டி.ஐ.ஜி! அம்மா சொர்க்கத்தில் இருக்கிறாள்."

இன்ஸ்பெக்டர் அரவிந்த் வெளியே வந்து பதட்டமாய் சொன்னார்.

"டி.ஐ.ஜி! அவர்கள் இருவரும் தப்பிவிட்டார்கள்."

அரவிந்த் சொல்லிக்கொண்டிருக்கும் போதே அறையின் உள்ளே விரைந்த டி.ஐ.ஜி அறையை பார்வையால் தடவியபடியே இன்ஸ்பெக்டர் அரவிந்த்தைப் பார்த்தார். அந்தப் பார்வையின் அர்த்தம் புரிந்து,

"தப்பிச் சென்ற வழிதான் புதிராக இருக்கிறது டி.ஐ.ஜி."

"அறைக்கதவை தாழிட அனுமதித்தது தவறு."

பொதுவாகச் சொன்னார். யார்மீதும் குற்றம் சொல்ல முடியாது. தனித்துப் பேச அனுமதி கொடுத்தவர் அவர். எரிச்சலாக இருந்தது. வைத்தியைப் பிடித்து உதைத்து எலும்புகளை எண்ணவேண்டும் போல உள்ளே கோபம் கொதித்துக் கொண்டிருந்தது.

மதுமிதா அறைக்குள் வந்தாள். கோபம் அங்கே பாய்ந்தது.

"முதலில் இவளை பிடித்துக் கொண்டு போய் உள்ளே வைத்து உதைக்க வேண்டும்."

"டி.ஐ.ஜி. சொல்ல மதுமிதா தன் உதடுபிரித்து, நாவு நீட்டி மேல் உதட்டை நாவால் ஈரப்படுத்திக் காட்டி கண் சிமிட்டினாள்.

டி.ஐ.ஜி அவள் செய்கை பார்த்து அதிர்ந்து போனார்.

"இவளை ஏன் அறைக்குள் அனுமதித்தீர்கள்?"

"என்ன டி.ஐ.ஜி ரொம்ப சூடாக இருக்கிறீர்களா? வேண்டுமானால் இவர்கள் இருவரையும் வெளியே போய் இருக்கச் சொல்லுங்கள். உங்கள் சூட்டைத் தணிக்க என்னால் உதவமுடியும்."

மீண்டும் கண்சிமிட்டி இதழ்களில் புன்னகை அணிந்து காட்டினாள்.

'இவளுக்கு பைத்தியம் பிடித்துவிட்டதோ?'

என்று டி.ஐ.ஜியின் மனதில் சின்னதாய் ஒரு கேள்வி எழுந்தது.

இன்ஸ்பெக்டர் ரஞ்சித் மதுமிதாவின் அருகில் வந்து,

"மேடம் கொஞ்சம் வெளியே வருகிறீர்களா?"

"டி.ஐ.ஜி என் என்றால் நீர் எண்ணெயாகவே கொடுப்பீர் போல் இருக்கிறது. நான் வெளியே போனால், வைத்தியும், டுப்ளிகேட் மதுமிதாவும் வெளியே தப்பிப் போன இரகசியம் உங்களுக்கு தெரியாமலே போய்விடும்."

மதுமிதா சொல்ல டி.ஐ.ஜி டென்சில் இன்ஸ்பெக்டர் ரஞ்சித்தை பார்வையால் தடுத்தபடி கேட்டார்,

"உனக்குத் தெரியுமா? தெரிந்தால் உடனே சொல்வது நல்லது."

"மிரட்டுகிறீர்களா, டி.ஐ.ஜி?"

"மதுமிதா! என் பொறுமைக்கு ஒரு எல்லை உண்டு. உன்னோடு விளையாடிக் கொண்டிருக்க இது நேரமல்ல."

"அப்படியானால் விளையாட என்று தனியாக ஒரு நேரம் ஒதுக்கித் தருவீர்களா டி.ஐ.ஜி?"

ஓங்கி அறையலாம் போல் இருந்தது. அடக்கிக் கொண்டார். இவளிடம் விசயம் இருக்கிறது. வெளியே கொண்டுவர வேண்டுமானால் விட்டுக் கொடுப்பதே முறை. கோபத்தை மறைத்தார். சினத்தின் உச்சியில் இருந்து கீழே குதித்தார்.

"பொலிசுக்கு உதவ வேண்டியது பிரஜைகளின் கடமை."

"ரைட். 'பிரஜைகளோடு பண்பாக நடந்து கொள்வதும்..., என்ற வசனத்தையும் அதனோடு சேர்த்துக் கொள்ளுங்கள் டி.ஐ.ஜி"

"சரி, நேரமாவது எதிரிகளுக்கு சாதகம். தெரிந்ததை விரைவாகச் சொல்லவு....."

இடையில் புகுந்தாள்.

"உங்களுக்குச் சாதகம். இதனால் எனக்கு என்ன ஆதாயம்?"

"இந்த நேரத்திலே போய்...."

"பேரம் பேசுகிறாயே என்று கேட்கப் போகிறீர்கள். தேவைகள் இரு தரப்பிலும் உள்ளபோதுதான் பேரங்கள் பெரு மதிப்புப் பெறுகின்றன மிஸ்டர் டி.ஐ.ஜி."

"ஓ.கே உனக்கு என்ன தேவை? என்ன ஆதாயம் தேவை?"

அவசரமாய்க் கேட்டார்.

மதுமிதா நிதானமாய், தன் தேன் சிந்தும் இதழ்கள் விரித்து தன் தேவை சொன்னாள்.

டி.ஐ.ஜி மட்டுமல்ல, இன்ஸ்பெக்டர்களும் அதிர்ந்து போய் மதுமிதாவைப் பார்வைகளால் அழுத்தினர்.

■

வைத்திலிங்கம் புயலில் ஆடிய கூரைபோல, குளிரில் நடுங்கிய கோழிபோல உடலில் நடுக்கம் காட்டினார்.

மறுமுனை சத்தமாய் சிரித்தது.

"என்ன வைத்தி சொன்னது புரியவில்லையா? நீயார் என்பது எனக்குத் தெரியும். வைத்திலிங்கம் என்று பெயரை வைத்துக்கொண்டால் மட்டும் போதாது மிஸ்டர், அடச்சீ உனக்கேன் மிஸ்டர், மட்டும் போதாதடா முட்டாள்."

"நீ..... நீ.... என்ன சொல்லுகிறாய்....?"

"நீ...... நீ..... ஏன்.... நடுங்குகிறாய்....?"

கேலி செய்து தொடர்ந்தது மறுமுனை.

"மிஸ்டர் வைத்திலிங்கத்தின் எடு பிடியாய் இருந்து, வைத்திலிங்கத்தின் கார்கதவைத் திறந்து விட்டு, அந்த வைத்திலிங்கம் சொல்லும் ஆட்களை அடித்துப் போட்டு, அதனால் சந்தோசமடையும் அந்த எஜமான் வீசும் எலும்புத்துண்டுகளுக்காக நாக்கை நீட்டிக் கொண்டிருந்த தனபாலன், வைத்திலிங்கம் ஆன கதை எத்தனை சுவாரசியமானது! அத்தியாயம் பிரித்து, அழகாகச் சொல்லத் தொடங்கினால் பாகம் பாகமாய் சொல்லலாம். சொல்லவா? அல்லது உன்னைக் கொல்லவா? சொல்லு வைத்தி, சொறி... தனபால்.."

வைத்திலிங்கத்திற்கு ஆகாயம் இடிந்து வந்து உச்சியிலே விழுந்தது போல இருந்தது.

வைத்தியின்நடுக்கம் பார்த்து அருகில் வந்த மதுமிதா அவர் தோளிலே கைவைத்தாள்.

வைத்திக்குள் எழுந்த இயலாமை தோளில் தொட்டவளை மார்பிலே கைவைத்து தள்ளிவிட வைத்தது.

மதுமிதா அதிர்ச்சியாய் பின்னால் நகர்ந்து வைத்திலிங்கம் என்று இதுவரை நம்பப்பட்ட தனபாலை வெறித்துப் பார்த்தாள்.

"என்ன வைத்தி.... அடச்சீ.... தனபால்! உன் அருகில் இருக்கும் சித்திரம், அதுதான் போலி மது என்ன செய்கிறாள்?"

மறுமுனை கேட்டது. தனபாலுக்கு நா எழ மறுத்தது. மாபெரும் முயற்சியாய் முயன்றதில் வார்த்தைகள் நடுக்கத்தில் வந்து விழுந்தன.

"யா....ர்...நீ...?"

"உன்னை அறிந்தவன். உனக்கும் தெரிந்தவன். என்ன குழப்பமாக இருக்கிறதா கண்ணா? இருக்கும். இருக்கும். இப்போது ஒன்று செய்."

"எ...ன்...ன?"

"போலி மதுமிதாவை ஒரு முறை பார். உன்னை அள்ளி அணைப்பாள் பார், அந்தக் கரங்களின் இறுக்கத்தில் உலகை மறப்பாய் பார், அந்தக் கரங்களில் ஒன்றில் ஒரு கையடக்கமான 'திறி நோட் திறி', அதுதான் அப்பா, கைத்துப்பாக்கி. அது இருக்கும் பார்."

தனபால் திரும்பிப் பார்த்தான். போலி மதுமிதாவின் கரத்தில் இருந்த கைத்துப்பாக்கி தனபாலை முறைத்துக் கொண்டிருந்தது. தனபாலுக்கு மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது.

"என்ன ஓ.கேயா? ரைட். இப்போது போனை பக்குவமாய் அவளிடம் கொடு. என்ன தயக்கம்? கொடு... கொடடா!"

கொடுத்தார்.

"ஹலோ என்றாள்."

"மறுமுனை ஏதோ சொல்ல, ஓ.கே பொஸ், ரைட், முடித்து விடுகிறேன்..... சீ.....உங்களுக்கு எப்போதும்..." என்று கிலு கிலுப்பாய் சிணுங்கி போனை வைத்தாள்.

தனபாலுக்கு நடுக்கத்திலும் கோபம் கோபம் கிளர்ந்து வந்தது.

"அடி...துரோகி. உன்னை நம்பி..."

இடைமறித்து பேசினாள்.

"துரோகிதான். யெஸ். இந்தத் துரோகி இப்போது என்ன செய்யப் போகிறாள் என்று பார்."

சொல்லியபடியே தனபாலை நோக்கி கைத்துப்பாக்கியோடு நெருங்கினாள்.

■

அவன் போனை வைத்துவிட்டுச் சிரித்தான். சிரித்தாள்.

"நன்றாக குரலை மாற்றிப் பேசினீர்கள் டியர். நீங்கள்தான் என்று தனபால் சந்தேகப்பட்டிருக்கவே மாட்டான்."

என்றாள். என்றவள் அழகுச் சிலைபோல இருந்தாள்.

"அடுத்தது என்ன?" கேட்டாள். என்னை எடுத்துக் கொள் என்று துடிக்கும் சிவந்த இதழ்கள் திறந்து கேட்டாள்.

"அடுத்தது எடுப்பது" என்றான்.

"என்ன எடுப்பது?" கேட்டாள்.

"தேன் உண்ணும் வண்டு தேன் மலரைக் கண்டு" பாடிவிட்டு சின்னதாய் விசில் அடித்தான்.

"ஆளைப்பார். ஆசைதான்." எழுந்து விலக முயன்றவளை கரம் நீட்டி தடுத்து தன் உடல் நோக்கிச் சரித்தான்.

மலர் பணிந்தது. தேன் சொரிந்தது.

(இன்னும் வரும்)

# கண்ணே




# மதுமிதா


## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எம். விஜயகுமார்
வயது: 19
முகவரி: AMWASSER 138,
8049. ZURICH,
SWITZERLAND.
பொழுதுபோக்கு: ரீ.வி.பார்த்தல், படமெடுத்தல், விளையாடுதல்.



பெயர்: எஸ்.எஸ். குமாரி
வயது: 16
முகவரி: இக்பால் வீதி,
மூதூர்-07
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



பெயர்: யூ. அஸ்மின்
முகவரி: 62/16, சிறீமகா விகாரை வீதி, களுபோவிலை, தெகிவளை.
பொழுதுபோக்கு: புத்தகம், பத்திரிகை வாசித்தல், ஆக்கங்கள் எழுதுதல்.



பெயர்: நூருல் அமீன் எச்.எம்.
முகவரி: PCA PROJECT
SAUDI OGER LTD.
P.O.BOX 17061-JEDDAH. 21484
SAUDI ARABIA.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், நண்பர்களுடன் அரட்டை.



பெயர்: எம்.ஏ.எம். பரீனா
வயது: 18
முகவரி: 250, கம்லாவெல,
கம்பொல.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம் படித்தல்.

பெயர்: கா. அலெக்சாண்டர்
வயது: 15
முகவரி: இல. 60, பிரதான வீதி,
மாத்தளை.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ம. மாலினி
வயது: 24
முகவரி: 61, கிறகரிஸ் வீதி,
கொழும்பு-07.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஸமீலா ஜவ்பர்
வயது: 20
முகவரி: 240, பிரதான வீதி,
கல்ஹின்னை, கண்டி.
பொழுதுபோக்கு: புத்தகம், பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், ரீ.வி. பார்த்தல், பூங்கன்றுகள் வளர்த்தல்.

சிறுகதை

# சொன்னால் புரியுமா?

-முகில் வண்ணன்-

'போஸ்ட்மேன்' வந்ததும் ஓடிச் சென்று கடிதத்தை வாங்கினாள் அகல்யா. வீட்டில் இருந்து வந்திருந்தது. ஆசையுடன் கடிதத்தைப் பிரித்தாள்.

அம்மா, அப்பா, தங்கச்சி எழுதியிருப்பார்கள் என்று மலர்ச்சியுடன் பிரித்தாள். வெளிநாட்டில் இருப்பவர்களுக்கு கடிதம் ஒன்றுதானே ஆறுதல். ஆனால் உற்றார் உறவினரோ கைமாறு கருதாமல் கடிதங்களை எழுதுவதில்லை. ஒவ்வொரு கடிதத்திற்கும் பதில் வந்தால்தான் மறு பதில் எழுதுவது என்று அடம்பிடிப்பார்கள். அப்படி இல்லை. அவர்கள் கஷ்டம் கவலை தீரட்டும் என்று ஒவ்வொரு கிழமையும் ஒரு கடிதம் எழுதினால் என்ன குறைந்து போகும்?

பெற்றதுகளுக்குக் கடிதம் எழுதவும் பெற்றோர் கௌரவப் பிரச்சனையைப் பார்க்கலாமா? என்னதான் சொன்னாலும் பாழாய்ப்போன மனம் கேட்குதில்லையே!

அன்புள்ள மகளுக்கு,

இரண்டு மாதமாக உன்னிடம் இருந்து கடிதம் இல்லை. ஏன் என்ன நடந்தது என்றும் அறிய முடியவில்லை. புருஷனுடன் போய்ச் சேர்ந்து விட்டதும் எங்களை மறந்து விட்டாயா? தாலி கட்டுவதை அறிவித்த பின்னர், திருமணம் முடிந்ததும் உனக்குக் கடிதம் எழுத நேரம் கிடைக்கவில்லையோ? நேரம் இல்லை என்ற சாட்டை மட்டும் சொல்லாதே. இதைக் கடிதம் எழுதாத எவர் சொன்னாலும் நான் நம்பத் தயாரில்லை. மனமில்லை. இல்லை மறந்து விட்டாய் என்று சொல். கடிதம் எழுதத்தான் வேண்டும் என்றால் சொந்த வேலை செய்யும் ஏதாவது ஒரு நேரத்தில் 10-15 நிமிடம் செலவிட்டால் 4-5 வரிகளாவது எழுதிப் போடலாம்.

பெற்ற மனம் பித்து என்பதால் பிள்ளைகள் கடிதம் போடவில்லை என்றதும் என்னவோ ஏதோ என்று பதறிப்போகிறோம். ஆனால் நீங்களோ அப்பா-அம்மாவுக்குத்தானே, ஆறுதலாக எழுதலாம் என்று நாட்களைக் கடத்துவீர்கள். இங்கே நாங்கள் துடிப்பது உங்களுக்கு எங்கே தெரியப் போகின்றது.

சென்ற முறை மருமகன் பக்கத்து வீட்டுக்கு கோல் எடுத்த போது நீ கடிதம் எழுதாத கோபத்தில் தான் நான் பேச வரவில்லை. வந்தால் உனக்கு ஏசிவிடுவேன் என்றுதான் அதுவும் வரவில்லை.

ஆனால் ரெலிபோனில் பேசவும் நீ வரவில்லை என்று அறிந்ததும், எனக்கு ஆத்திரம் தான் வந்தது. அப்படிக்கு அங்கு என்ன செய்கிறாய் என்றுதான் எனக்கு விளங்கவில்லை?

நாங்கள் இன்னும் உயிருடன்தான் இருக்கிறோம். உங்கள் சுகதுக்கங்களை அறிய ஆவலாய் இருப்போம் என்பதை மட்டுமாவது ஞாபகம் வைத்துக்கொள்.

இனி நீ கடிதம் போட்டால் மட்டுமே இங்கிருந்து யார் என்றாலும் எழுதுவோம்.

இப்படிக்கு
அன்புள்ள அம்மா.

என்று கண்டிருந்தது. கடிதத்தைப் படித்த அகல்யா குலுங்கிக் குலுங்கி அழுதவாறு அப்படியே தூங்கிவிட்டாள்.

எவ்வளவு நேரம் தூங்கியிருப்பாளோ தெரியவில்லை. வயிற்றைக் குமட்டிக் கொண்டு வாந்தி வந்த போதுதான், துடித்துப் பதைத்து எழுந்து 'வாஷ்பேசின்'னுக்கு ஓடினாள். சத்தியெடுத்ததும் வாயைக் கழுவிக் கொண்டு சோபாவில் வந்தமர்ந்தாள்.

அப்போதுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது. அத்தான் அதிகாலையில் எழுந்து வேலைக்குச் செல்ல முன்னர் மதியச் சாப்பாடு தயார் செய்து வைத்து விட்டுச் சென்றதும் அதைத் தான் சாப்பிடாது இருப்பதும். நேரத்தைப் பார்த்தாள். மாலை மூன்று மணி. பசிக்கவில்லை. ஒரு பெப்ஸியை எடுத்து உறிஞ்சியவாறு மீண்டும் சோபாவில் அமர்ந்தாள்.

அம்மா...!?

அம்மாவா இப்படி எழுதி இருக்கின்றா? அவளால் நம்ப முடியவில்லை.

தனக்கு முன்பின் அறிமுகம் இல்லாத ஒரு வெளிநாட்டு மாப்பிள்ளையைப் பேசியதும், சாதகம் ஒத்துப் போனதும் இருபக்கப் பேச்சுவார்த்தை சம்மதத்தில் முடிந்தது. அடுத்து வந்த விடுமுறையில் அவர் இலங்கை வந்தபோது எழுத்தை முடித்து விட்டார்கள்.

எழுத்து முடிந்ததும் விடுமுறை முடிந்து போகும்வரை அவர் வீட்டுக்கு



வந்து சென்றதும், உணர்சிகளுடன் விளையாடியதும் தான் மலர்ந்தும் மலராது இருந்ததும், விரைவில் உன்னை 'ஸ்பொன்சர்' பண்ணி எடுக்கிறேன் என்று கூறிவிட்டு அவர் சென்றதும் நேற்றுப் போல் இருக்கின்றது.

மாதம் ஒன்றிரண்டு என்று ஆறைக் கடந்த போதுதான் ஒவ்வொருவரதும் பேச்சுக்கள் அவளைத்தாக்கின.

'அவர் அங்கே யாரையும் பார்த்து இருக்கிறாராக்கும்டி. இல்லாவிட்டால் இன்னும் உன்னை எடுக்காமல் இருப்பாரா?' என்று சந்தேகத்தைக் கிளப்பி விட்டனர். ஆனால் அவள் கலங்கவில்லை. அத்தான் அன்பைக் கொட்டி எழுதும் கடிதங்கள் அவற்றை முளையிலே கிள்ளிவிட்டன.

'அவர் அப்படி எல்லாம் இருக்க மாட்டார். அங்கு எடுத்த நடவடிக்கை எல்லாம் அறிவித்தவர்தானே! இனி 'எம்பசி'யில இருந்து எனக்குக் கடிதம் வரும் என்று எழுதியவர். இன்றோ நாளையோ வரலாம். அவரைப்பற்றி இவர்கள் என்ன சொன்னாலும் நான் நம்பவா போகிறேன்' என்று குடும்ப வாழ்வுக்குரிய நம்பிக்கையை வளர்த்துக் கொண்டாள்.

"என்னடி கடிதம் எழுதுகிறாய்? நீ மாப்பிள்ளைக்கு எழுதும் கடிதத்தில் தான் உன்னை எடுக்கிறதுக்கு அவர் அவசரப் படவேண்டும். இல்லாவிட்டால் நீயும் அவரும் இப்படியே எழுதிக்கொண்டிருக்க வேண்டியதுதான். விரைவாக நீ போய் அவரிட்டச் சேர்ந்தாத்தானே எனக்கு நிம்மதி. கல்யாணம் முடிச்சுக் கொடுத்த பிறகும் உன்னை இப்படியே வைச்சுக் கொண்டிருந்தால் எப்படி மனம் பொறுக்கும்?" இது அம்மா.

"நம்ம நாட்டைப் போலல்லம்மா. அங்க காசு கொடுத்து எதுவும் செய்ய முடியாதாம். இப்ப அவர் அங்கு எல்லாம் செய்து முடித்து விட்டாராம். இனி 'எம்பசி'யில் இருந்து 'இன்ரவியு'வுக்கு கூப்பிடுவாங்களாம். பொறுத்த நாம இன்னும் கொஞ்சம் பொறுக்கத்தானே வேண்டும்" அன்னைக்கு அவள் கூறிய ஆறுதல்.

இப்படியும் அப்படியுமாக, வீட்டுக்கும் எம்பசிக்கும் நடந்து, கடிதம் எழுதி, ரெலிபோனில் பேசி, ஒரு வருடம் கழிந்த பின்னர்தான் விசா வந்து சேர்ந்தது.

'எல்லோரும் எவ்வளவு பாசத்துடன் அழுதழுது என்னை வழியனுப்பி வைத்தார்கள்' என்று எண்ணும்போதே அவள் உள்ளம் குளிர்ந்து போகிறது.

வந்ததும், எம்பசியும் அதன் நடைமுறையும் என்று இரண்டு கிழமையும், அதையடுத்து சட்டப்படி நடந்த திருமணத்தைச் சம்பிரதாயப்படி தாலி கட்டி முடிக்க இரண்டு கிழமைகள். அது முடிய நண்பர்களின் வீடுகளுக்கு விருந்துக்கென்றும், வீடுமாறவுமாக ஒருமாதம். இப்படியாக இரண்டு மாதம் சென்று விட்டது.

இலங்கையில் இருக்கும் அம்மா, அப்பா தங்கை, மாமா மாமி, சுவிஸில் இருக்கும் அண்ணா, ஜெர்மனியில் இருக்கும் தம்பி என்று இவர்களுக்கெல்லாம் கடிதங்கள் அடுத்தடுத்துப் போட்டவள்தான்.

ஆனால் இரண்டு மாதம் முடிந்த பின்னர் அவளைப் படுக்கையில் கிடத்திய 'வாந்தி' வந்து அவளது நிலையை அம்பலப்படுத்தியது. அவள் 'முழுகாமல்' இருக்கிறாள் என்றதும் ஆனந்தித்தான் கணவன். ஆனால் அவளால் படுக்கையில் இருந்து தலைதூக்கி எழ முடியவில்லை. அத்தனை சத்தி.

அவள் என்ன சொல்லியும் கணவன் கேட்கவில்லை. அவன் காலையில் வேலைக்குச் சென்றால் வருவது மலைதான். மதியம் அங்கேதான் சாப்பாடு. ஆகவே 'நீங்கள் காலையில் ஏதும் சாப்பிட்டு விட்டுப் போங்கள். நான் ஏதும் செய்து சாப்பிடுகிறேன்' என்பாள்.

"நீ எழும்பி சமைத்துச் சாப்பிட... நல்ல கதை இது? நான் சமைத்து வைத்துவிட்டுப் போகிறேன். நீ சாப்பிட்டால் போதும்" என்று சமைத்து வைத்து விட்டுப் போகிறான்.

தலை நிமிர்த்தினால் அவளுக்கு வாந்திதான். படுத்த படுக்கையில் இருக்கும் போதே ஒரு மணித்தியாலத்துக்கு ஒருமுறையாவது சத்தி எடுக்க வேண்டும். இப்படி இருக்கும் போது அவளால் என்ன செய்ய முடியும். படுத்துக்கொண்டு கற்பனையில் மிதப்பதைவிட

கண்ணை மூடிக்கொள்கிறாள் அகல்யா.

'என்னை அன்போடும் பாசத்தோடும் கவனிக்கும் அத்தான். அவரில்லாவிட்டால் என் கதி? அவரல்லவோ என் உள்ளம் எல்லாம் நிறைந்து இருக்கிறார். வீட்டு நினைவில் வெந்துபோயிருப்பேனே! கல்லாக இருந்த என்னை மலர வைத்தவர் அவரல்லவா? இரவில் அவர் செய்யும் குறும்புகள் சேட்டைகள் பகலில் என் நினைவெல்லாம் ஆட்கொண்டு மனதைக் கிளர்ந்தெழச் செய்யும் விந்தை. மாலை எப்போதும் வரும் என்ற ஆவலை ஊட்டும் ஆசை. சங்ககாலப் பெண்கள், நகக்குறி பற்குறிகண்டு மகிழ்வார்கள் என்று படித்தது என்னவென்று இப்போது அல்லவா புரிகின்றது. இந்த இன்ப நினைவுகள் ஒரு மாதம்தான் என்னை ஆட்கொண்டிருந்தன. அவரை மகிழ்விக்க வேண்டும் என்ற ஆவலில் மற்றவர்களை மறந்திருந்தேனே- மறக்கவில்லை. கடிதம் எழுதாமல் இருந்தேனே, தவறா?

இந்த ஒரு மாதம் தானே அவருக்கு நான் கொடுத்த இன்பமான நாட்கள். இதையும் தவிர்த்து இருந்தால் இப்போது அத்தான் படும்பாடு என்னையல்லவா சுட்டுப் பொசுக்கி இருக்கும். இப்போது நான் படுக்கையில் கிடக்கும் போதும் எல்லாச் சேவையும் அவருடையதுதானே.

இதை எப்படிச் சொல்லி அவர்களைப் புரிய வைப்பேன். எனக்கு ரெலிபோன் எடுக்க வெளியே செல்ல முடியாது என்பதால் அத்தான் சென்று போன் எடுக்க அம்மாவோ தங்கையோ- போகவில்லை. அப்பாதான் எடுத்தவராம். அதனால் வெக்கத்தில் அவர் அப்பாவிடம் சொல்லவில்லை. எனக்குச் சுகமில்லை. என்றால் கலங்கிப் போவார்கள் என்று அவர் அதையும் கூடச் சொல்லவில்லை.

'நீ விஷயத்தை ஆரம்பித்து நாலுவரி எழுதித்தா மிகுதியை நான் எழுதி மாமா மாமிக்கு அனுப்பி விடுகிறேன். என அவர் எத்தனை முறை என்னிடம் சொல்லி இருப்பார். என்னால் தான் முடியவில்லை. இதற்கு அம்மா போய் இப்படி எழுதி விட்டாவே. அம்மாதானா இப்படி எழுதினவ?' அவளுக்கு மிண்டும் கண்கள் கலங்கின.

வாந்தி வந்தது. எழுந்து வாந்தி எடுத்துக்கொண்டு இருக்கும் போதே அவள் கணவனும் வந்து சேர்ந்தான்.

"என்ன அகல்யா?" என்று கிட்டே வந்தவன் அவள் கண் கலங்கியிருப்பதைக் கண்டு துடைத்து விட்டான். மேசையைப் பார்த்ததும் சாப்பிடாமல் இருப்பது தெரிந்தது.

"என்னடா குஞ்சு ஏன் சாப்பிடல்ல?" என்று கேட்டான்.

"அம்மாட்ட இருந்து கடிதம் வந்தது..."

"கடிதம் இருக்கட்டும் நீ சாப்பிடவா"

"எனக்கு வேணாம்..." என்று கடிதத்தைக் கொடுத்தாள். படித்தவன் சொன்னான். நியாயமான கோபம். பெற்ற வயிறு துடிக்கும் தானே. நேரத்தோடே எழுதச் சொன்னேன்- நீ கேட்கவில்லை. ஓ.கே. இப்ப என்றாலும் 'விஷயத்தை' நீ எழுது. மிகுதியை உனது நிலையை நான் எழுதி அனுப்புகிறேன்." என்று பேனை பேட் எல்லாம் சோபாவுக்கே கொண்டு வந்து கொடுத்தான்.

எழுதத் தொடங்கினாள்.

அன்புள்ள அம்மாவுக்கு,

உங்கள் கடிதம் கிடைத்தது. நான் இரண்டு மாதமாக முழுகாமல் இருக்கிறேன். ஒருமாதமாகச் சத்தி. சாப்பிட முடியவில்லை. சாப்பிடுவது எல்லாம் சத்திதான். படுத்த படுக்கையாக இருக்கிறேன். வீட்டு வேலை எல்லாம் அத்தான் தான். இப்போது நான் அவருக்குப் பாரமாக இருக்கிறேன். உங்களுக்குக் கடிதம் எழுதவில்லை என்று கோபப்பட வேணாம். தலை நிமிர்ந்து எழுந்ததும் எழுதுகின்றேன்.

அண்ணன் தம்பி எல்லாருக்கும் அறிவிக்கவும். அவர்களுக்கும் கடிதம் எழுதவில்லை. அவர்களும் கோபமாக இருப்பார்கள். எல்லாருக்கும் ஆறுதலாக எழுதுகின்றேன்.

இப்படிக்கு
அன்பு மகள் அகல்யா.

பி.கு
மாமாவுக்கும் அறிவிக்கவும்.

என்று முடித்தாள். மாமா ஒருவர்தானே 'எனக்குக் கடிதம் எழுதவில்லை என்று கவலைப்படவேண்டாம். கணவனுடன் சந்தோசமாக இருந்தால் சரி'-என்று எழுதி இருந்தவர்.

(யாவும் கற்பனை)

---

## வித்தியாசம் வேண்டுமா...? தொடர்ந்து படியுங்கள்!

# கொல்லத்தான் நினைக்கிறேன்



-எம். சுரேஷ்-

அது ஒரு பிரபல கோயில் திருவிழா. எங்குமே ஜனக்கூட்டம், மகிழ்ச்சி, கலகலப்பு.... அந்த திருவிழாவுக்கு நான், எனது மனைவி, மனைவியின் தங்கை என மூன்றுபேர் வெகுதூரத்திலிருந்து வந்திருந்தோம். எனக்கோ என்றுமில்லாதவாறு ஒரு மிதமிஞ்சிய மனத்திருப்தி. காரணம் திருமணம் முடித்தபின் நான் முதன் முதலாய் மனைவியோடு வந்திருக்கும் நீண்டதூர கோயில் திருவிழா இது.

மனதில் மகிழ்ச்சி இருந்தாலும், விழாக் காட்சிகளைப் பார்த்தபடி வெகுதூரம் நடந்து வந்ததால் பயங்கரமான கால்வலி. அருகில் இருந்த ஒருசின்ன தங்கும் விடுதியில் மூன்றுபேரும் அமர்கிறோம்.

(அந்த விடுதி அறை கிட்டத்தட்ட கொழும்பில் "லொஜ்"களில் கட்டப் பட்டிருக்கும் சிறிய அறைகளின் அளவு இருக்கும். முகப்பில் கதவில்லை. உள்ளே சுவரோடு சேர்ந்து மூன்று புறமும் அமரக் கூடியவாறு திண்ணை கட்டப்பட்டிருந்தது.)

வெகுதூரம் நடந்துவந்த களைப்பிற்கு அந்த விடுதி அறை எமக்கு சொர்க்கம் போல் தோன்றியது. மூன்று பேரும் விழாக் காட்சிகளைப் பற்றி சுவாரஸ்யமாக உரையாடிக் கொண்டிருந்தோம்.

கூட்டத்திற்குள் இருந்து வெளிப்பட்ட இருவர் எமது விடுதிக்குள் புகுந்தனர். அவர்களில் ஒருவன் வெள்ளை சேட்டும், அதே நிறத்தில் காற்சட்டையும் அணிந்திருந்தான். மற்றவன் கிறீம் நிற சேட்டும், வெள்ளை நிற சாரமும் கட்டியிருந்தான். கையில் ஒரு பேனாவும், பேப்பர் துண்டும் காணப்பட்டது.

எங்களிடம் எதுவும் கேட்டாகமலே என் அருகில் உரிமையோடு அமர்ந்தவர்கள் "தயவு செய்து அடையாள அட்டையை எடுங்கள். இலக்கங்களைக் குறித்துவிட்டுத் தருகிறோம்." தயவாகக் கேட்டனர். அவர்களின் பேச்சையும் நடவடிக்கைகளையும் வைத்துப் பார்த்தால் அவர்கள் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பது தெளிவாகத் தெரிந்தது. இருப்பினும் கோயில் நிர்வாகத்தினர் கோயிலின் பாதுகாப்புக்கருதி இப்படியொரு ஏற்பாட்டைச் செய்திருக்கலாம் என்ற எண்ணத்தில் நானும் எமது அடையாள அட்டைகளை மிகுந்த பணிவோடு கொடுக்கின்றேன். சிரித்தவாறு இலக்கங்களைப் பதிந்த அவர்கள் சலனமின்றி எழுந்து நடந்தனர்.

சில வினாடிகள் சென்றிருக்கும், என் மனைவி நினைவு படுத்தினாள். "என்னங்க.... இலக்கங்களைப் பதிந்து விட்டு அவர்கள் அடையாள அட்டைகளைத் திருப்பித் தரவில்லை. அது இல்லாவிட்டால் திரும்பிப் போகும்போது சிரமப்படவேண்டியிருக்கும்." பதறினாள். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நான் பயந்தவனல்ல, எல்லா மொழிகளும், எந்த ஊர்ப் பாஷைகளும் எனக்கு சரளமாகப் பேசவரும். "அப்படியே இருங்கள் வாங்கிக் கொண்டு வந்துவிடுகிறேன்" என்று கூறியபடி அவர்கள் சென்ற திசையை நோக்கி ஓடுகிறேன்.

சிறிது தூரத்தில் அவர்கள் மிகவும் சாவகாசமாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். காற்சட்டை அணிந்தவனின் கையில் எமது அடையாள அட்டைகள்... "நீங்கள் எமது அடையாள அட்டைகளைத் திருப்பித் தர மறந்து விட்டீர்கள்" தாழ்மையாய் கேட்க்க, என் பேச்சைக் கவனிக்காது அவர்கள் தொடர்ந்து நடக்கிறார்கள். நான் மீண்டும் பின்னால் சென்று "எமது அடையாள அட்டைகளைத் தருகிறீர்களா?" சற்று அதட்டலாகக் கேட்டும், அவர்கள் என் பேச்சை தூசுக்கும் கணக்கெடுக்காமல் "சண்டியன்கள்" போல் பாவனை செய்தபடி தொடர்ந்து நடக்கிறார்கள்.

எனக்கு அவமானமும், ஆத்திரமும் உச்ச கட்டத்தை அடைய, காற்சட்டை போட்டவனின் கழுத்தைப் பிடித்து தூக்கி, பக்கத்தில் இருந்த சுவரில் ஓங்கி அறைகிறேன். அறைந்த அறையில் அவன் கையில் இருந்த அடையாள அட்டைகள் நிலத்தில் சிதறி விழுந்தன, அவன் வாயில் ரத்தம் கக்கியபடி சுவரோடு சாய்கிறான்.

மற்றவன் சற்றுக் கலவரமடைந்தவனாக என்னை எச்சரிக்கிறான். ஏதேதோ பெயர்களைச் சொல்லி உதவிக்கு ஆட்களை அழைக்கிறான். நானும் ஏதேதோ பெயர்களைச் சொல்லி ஆட்களை அழைக்கிறேன். (அங்கே எனக்குத் தெரிந்தவர்கள் யாருமில்லை. என்றாலும் அப்படி நான் அழைத்தது எதிரியை நிலைகுலையச் செய்தது.)

ஆட்கள் வருமட்டும் என்மேல் கை வைக்கத் தயங்கி, சமாளித்துக் கொண்டிருந்தவன் நாலைந்து பேர் வந்து என்னை சுற்றி வளைத்ததும், மீண்டும் தன்னை மிகுந்த பலசாலி என்பதைப் போல் பாவனை செய்து, பக்கத்துக் கடைக்குள் புகுந்து கையில் அகப்பட்ட ஒரு பெரிய கத்தரிக்கோலை எடுத்து வந்து, கொஞ்சமும் யோசிக்காமல் என் கண்களுக்குள் அதை சடுதியாக செருக முயலவும் நான் லாவகமாக ஒதுங்குகிறேன். கத்தரிக்கோல் என் நெற்றியைக் கீறி இரத்தத்தை சுவைத்தபடி நிலத்தில் குப்புற விழுகிறது. நான் உடனே பாய்ந்து அதை எடுத்துக் கொள்கிறேன்.

இருப்பினும் சாரக்காரன் பயப்படவில்லை. இப்போது அவனுக்கு ஆள்பலம் அதிகம் இருப்பதால், நான் ஒன்றும் செய்யமாட்டேன் என்று நினைத்தான் போலும். வில்லத்தனமாய் சிரித்தபடியே...."நீ. எங்களை ஒன்றும் செய்ய முடியாது".... என்னை அவமானப்படுத்தும் வகையில் முகத்தைக் கோணலாக்கிக் கேலி செய்தான். நான் சமாளித்தேன். அவன் சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில், அவனை சுவரோடு தள்ளி, கத்தரிக்கோலை நன்கு விரித்து "சதக்" ஒரே இறக்காய் வயிற்றுக்குள் இறக்கினேன். இரத்தம் பீறிட்டு என் முகத்திலும், அவனின் கூட்டாளிகள் முகத்திலும் பன்னீர் தெளித்தது.

சுற்றி வளைத்து நின்றவர்கள் என் நடவடிக்கையைக் கண்டு நிலைகுலைந்து ஓட ஆரம்பித்தனர். பக்கத்துக் கடைக்காரன் கோபாவேசமாக ஒரு

(17ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# சந்தனமரம் விறகானபோது..,

-மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்-

**கா**லை நேரம்!

மிப்ரா அந்த 'இன்டர்வியூ லெட்டரை' மீண்டுமொருமுறை படித்துப் பார்த்தான். 'குட் யூ ப்ளீஸ் காள் ஓவர் அற் திஸ் ஓபிஸ் ஃபோர் எ ரெஸ்ற் அன்ட் இன்டர்வியூ ஒன்.....' என்று நாளை மறுநாளைய திகதியை இட்டிருந்தார்கள்.

மிப்ரா 'டிரிம்' செய்யப்பட்ட தனது தாடியை மென்மையாக சொறிந்துகொண்டே விரக்தியாகப் புன்னகைத்தான். இது அவன் முகம் கொடுக்கப் போகும் பதினேழாவது இன்டர்வியூ'.

ஆனாலும்;

அவனது பீ.கொம் குவாலிபிகேஷனுக்கு இன்னும் வேலை கிடைத்தபாடில்லை. பெயருக்கு என்னமோ நேர்முகப் பரீட்சையே தவிர, ஆட்கள் எடுக்கும் போது எங்குமே 'நிழல் வியாபாரம்' தான் செய்கிறார்கள். திறமையை யார்தான் மதித்தார்கள்? சில கம்பனிகளில் இருபது- முப்பதாயிரம் என்று டெபாசிட் பண்ணச் சொன்னார்கள். அவர்களுக்கென்ன சொல்லுவார்கள். ஆனால்...... பணமென்ன வீட்டுக் கொல்லைப்புற மரத்திலேயா காய்க்கிறது?

அவனது தொண்டைக்குழியில் 'சோகம்' அடைபட்டுப்போனது.

இன்டர்வியூவிற்குப் போவதற்கே கையில் பணமில்லை. தவிர, போய்வந்தவுடனேயே வேலை கிடைத்துவிடுமா என்ன?

இன்டர்வியூ.... இன்டர்வியூ என எத்தனை முறைதான் உம்மாவிடமும் தங்கைகளிடமும் பணம் வாங்குவது? 'ச்சே...... இருபத்தியைந்து வயதாகியும் தன்னால் பணமென்று ஏதாவது சம்பாதிக்க முடிகிறதா? உம்மாவும்.... கல்யாணவயதில் இருக்கும் தங்கைகளும் எத்தனை நாளைக்குத்தான் அப்பம் சுட்டு விற்பார்கள்.......?'

மிப்ரா மனதுக்குள் எதையோ கசப்பாயுணர்ந்தான்.

தன் இயலாமை மீது வெறுப்பு வெறுப்பாய் வந்தது. விதி.....விதியென்று அதையும் எத்தனை நாளைக்குத்தான் நோவது?

மிப்ரா கடிதத்தைப் பத்திரப்படுத்திக் கொண்டான்.

'எதற்கும் உம்மாவிடம் சொல்ல வேண்டும்!'

என்று மனதுக்குள் எண்ணியவண்ணம் குளிப்பதற்காகக் கிணற்றுக்குக் கிளம்பினான். உடம்பு மட்டுமின்றி உள்ளத்திலும் புளுக்கம் பரவிப்போயிருந்தது.

**ம**திய நேரம்!

வீட்டு நடுக்கூடத்தில் விரிக்கப்பட்டிருந்த தென்னையோலைப் பாயில், கால்களை மடக்கி சம்மணம் கொட்டி அமர்ந்திருந்தான் மிப்ரா. தாய் கதீஜா சோறு பரிமாறிக் கொண்டிருந்தாள். பெரிய தங்கை பளீலா கறியை வைத்துவிட்டுப் போக, சின்னவள் ஹஸீனா சமையலறையில் இருந்து எட்டிப் பார்த்தாள். மிப்ரா இரண்டு தங்கைகளையும் மாறி மாறிப் பார்த்தான்.

'உம்மாவைப் போலவே தங்கைகள் எவ்வளவு அழகாயிருக்கிறார்கள். கல்யாணம் ஆகியிருந்தால் இருவருமே குழந்தைகளுக்குத் தாயாகியிருப்பார்களோ?' மனதுக்குள் கணக்குப் போட்டான் மிப்ரா. சுர்ரென இரக்கம் சுரந்தது. கண்களில் துளிர்த்த நீரை யாருமே அறியாவண்ணம் துடைத்துக்கொண்டான்.

"உம்மா!"

கதீஜா தலை நிமிர்த்திப் பார்த்தாள்.

"என்ன மகன்?"

"இன்டர்வியூவிற்கு வரச்சொல்லி காலையில ஒரு கடிதம் வந்துருச்சியும்மா..."

"எங்கேயிருந்து மகன்?"

"கொழும்பில..... ஒரு பிரைவேட் கம்பனியிலயிருந்து..."

கதீஜா சலனமேயில்லாமல் பார்த்தாள்.

"என்ன வேலை மகன்?"

"டிரெய்னி அஸிஸ்டென்ட் எக்ஸிக்கியூட்டிவ்! ஆயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளத்துக்கு ரெண்டு வருஷம் டிரெய்னிங் பண்ண வேண்டி வரும் உம்மா...!"

"கிடைக்கிற சம்பளம் கொழும்பில செலவுக்காவது போதுமா மவன்?"

மிப்ராவினால் பதில் சொல்லத் தெரியவில்லை. நியாயமான கேள்வி.

"சாப்பிடு மகன்..."

உத்திரத்தையே வெறித்துக் கொண்டிருந்த மிப்ரா சாப்பிட ஆரம்பிக்கிறான். ஆனால்....சோறு இறங்க மறுக்கிறது.

"மகன்.."

"என்ன உம்மா?"

"மகன்..... உனக்கு வேலை கிடைக்கணுமென்கிறதுதான் என்னோட ஆசை, பிரார்த்தனை எல்லாமே. ஆனாலும், தங்கச்சிகள் ரெண்டு பேருமே கல்யாண வயசைத் தாண்டிக்கிட்டிருக்காங்க. அவங்களோட கல்யாண செலவுக்காவது கையில ஐந்து சதம் சேர்த்து வைத்ததில்ல. அப்பம் சுட்டு விக்கிறது நாள் செலவுக்கே சரியாப் போகுது."

கதீஜா நிறுத்திவிட்டு.... மீண்டும் தொடர்ந்தாள்.

"வீட்டுக்கு தலைமகன் உன்னை நம்பித்தான்பா நானிருக்கேன். நானும் எத்தனை நாளைக்குத்தான் வயிற்றுல நெருப்பைக் கட்டிக்கிட்டு...தங்கச்சிகளும் விடிஞ்சா இரவுவரைக்கும் ஓயாம நெருப்புல வெந்துகொண்டு.... எல்லாமே எத்தனை நாளைக்கு மகன்...?"

கதீஜா சேலைத் தலைப்பை சரிசெய்த வண்ணம், பாயில்...மிப்ராவின் அருகிலேயே அமர்ந்து கொண்டாள். பின் கழுத்தில் வியர்வை பிசுபிசுப்பாய் படிந்து போயிருந்தது.

"உனக்கு வேலை கிடைத்து..... ரெண்டு வருஷம் டிரெய்னிங் முடிச்சு... நல்ல சம்பளம் எடுக்கிறப்போ, தங்கச்சிகள் வயசாயிடுவாங்க மகன். அதுவும், நீயும் இதுவரையில எத்தனை எத்தனை இன்டர் வியூகளுக்குப் போய்வந்தே.... அதே மாதிரி இந்த முறையும் தவறிப் போச்சுன்னா..."

கதீஜாவின் குரல் கரகரப்பாகிப் போக, மிப்ரா பரிதாபமாய்ப் பார்த்துக் கொண்டே, கேட்டுக்கொண்டேயிருந்தான்.

வினாடிகள் ஊர்ந்தன.

"நீ இன்டர்வியூவிற்குப் போக வேணாம்னு நான் சொல்லல மகன். ஆனாலும் இந்தக் காலத்துல வேலை கிடைக்கிறதுரொம்பக் கஷ்டம் மகன். அதனால.... இன்டர்வியூவென்று அலைந்து கொண்டிருக்காம ஏதாவது ஒருவேலை செய்து..... கொஞ்சம் சம்பாதித்து..... தங்கச்சிகளை கரையேத்துற வழியைப் பாரு மகன்.... எதற்கும் அல்லாஹ் இருக்கான்........"

கதீஜாவும் சாப்பாட்டுத்தட்டை எடுத்துக் கொண்டு, சாப்பிட ஆரம்பிக்க மிப்ராவுக்கு சாப்பிடப் பிடிக்கவில்லை. அப்படியே கை கழுவினான்.

"ஏன் மகன் சாப்பிடல்லையா?"

"போதும்மா....பசிக்கல!"

கதீஜா மனம் நொந்து போனவளாய் அவனையே பார்க்க,

மிப்ரா வாயிலைக் கடந்து தன் அறைக்குள் போய்விட்டிருந்தான்.

அப்படியே.....

கட்டிலில் சாய்ந்தவண்ணம் யோசிக்க ஆரம்பித்தான்.

ஐந்து நிமிடம் கழிந்திருக்கும்.

"நாநா...!"

சின்னவள் ஹஸீனா உள்ளே வந்தாள்.

"என்ன தங்கச்சி?"

"பணம் வேணுமின்னா நான் ஸரீனா மதினிகிட்ட வாங்கித் தர்றேன். நீங்க இன்டர்வியூவிற்குப் போய் வாங்க நாநா......"

ஹஸீனா கண்களில் ஆர்வம் படரக் கேட்கிறாள்.

அவளுக்குள் எத்தனை எதிர்பார்ப்புக்கள்!

"வேணாம் தங்கச்சி..."

மிப்ரா தீர்க்கமாய்- தீர்மானமாய் சொல்கிறான்.

"நான்இன்டர்வியூவிற்குப் போகிறதாயில்ல தங்கச்சி!"

ஹஸீனா புரியாமல் பார்த்தாள். பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

**மா**லை நேரம்!

மிப்ரா அந்த மண்பாதையால் வந்து கொண்டிருந்தான். கையில் அன்றைய 'தினமுரசு' வார இதழை வைத்திருந்தான். அவனைப் பொறுத்தவரையில்- அவனது வாழ்க்கையை நிர்ணயிக்கக்கூடியதொரு 'பொக்கிஷம்' அந்த தினமுரசில் இருக்கிறது.

"மிப்ரா!"

பின்புறமிருந்து குரல் கேட்கத் திரும்பினான்.

அங்கே.... அவனது மாமாவின் மகள்- முறை மதினி ஸரீனா நின்றிருந்தாள். பக்கத்தில் இருந்த அவர்களது வாழைத் தோட்டத்தில் என்னமாவது வேலையாய் வந்திருக்கிறாள் போலும்.....

ஸரீனா- மிப்ராவுக்காகவே காதலாய் ஏங்கும் ஒரு ஜீவன்! தன்னுடைய வாழ்க்கையே மிப்ராவென, மனம் கொண்டவனே கரம்பிடிக்க வேண்டுமென ஏராளமான கனவுகளோடு காத்துக் கொண்டிருக்கும் பாவையவள்.

"என்ன ஸரீனா?"

"லெட்டர் வந்திருந்தும்.... இன்டர் வியூவிற்குப் போறதில்லைனு ஹஸீனா மதினி சொன்னா. உண்மையா மிப்ரா?"

மிப்ரா மென்மையாகப் புன்னகைத்தான். சொன்னான்,

"நான் போகமாட்டேன் ஸரீனா....."


"ஏன்?" அவள் நெற்றி சுருக்கிக் கேட்கிறாள்.

"........"

"ஏன் பணமில்லையா? பணம் வேணுமின்னா நான் தர்றேன் மிப்ரா..."

"தாங்ஸ் ஸரீனா.. உனக்கு நான் ஏற்கனவே நிறையக் கடன்பட்டிருகேன். வேணாம் ஸரீனா..... நான் போகிறதாயில்ல...."

"இந்த முறை கட்டாயம் வேலை



கிடைக்கும் என்கிற நம்பிக்கை எனக்கிருக்கு. ஆண்டவன் மேல பாரத்தைப் போட்டு விட்டுப் போய்வாங்க மிப்ரா...."

"எனக்கு அறவே நம்பிக்கையில்ல ஸரீனா...."

மிப்ரா மீண்டும் விரக்தியாகப் புன்னகைத்தான்.

ஸரீனாவின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. கண்கள் கலங்க ஆரம்பித்தன.

"அப்போ என்ன செய்யப் போறீங்க மிப்ரா...?"

"எல்லாம் விதி விட்ட வழின்னு வேறொரு காரியம் பண்ணப் போகிறேன்!"

"என்....னது?"

"நேரம் வரும்போது நானே சொல்கிறேன் ஸரீனா. வர்றேன்!"

மிப்ரா வீட்டை நோக்கி நடக்க.....

ஸரீனா மனதுக்குள் பூகம்பம் வெடித்த நிலையில்.... எதையோ அச்சமாய் உணர்ந்தாள். உள்ளுக்குள் இனம்புரியாதவொரு 'திக் திக்' கேட்டது. கேட்டுக் கொண்டேயிருந்தது.

**இ**ரவு நேரம்!

மிப்ராவுக்குத் தூக்கமே வரவில்லை.

கண்களுக்குள் உம்மாவும், தங்கைகளும், ஸரீனாவும் மாறி மாறி வந்துபோனார்கள். மிப்ராவின் நெஞ்சு பலமாய் அடைபட்டுப் போக, எழுந்து செம்பிலிருந்த தண்ணீரைக் குடித்துவிட்டு... மீண்டும் கட்டிலில் அப்படியே சாய்ந்துகொண்டான்.

நேரம் பன்னிரெண்டு மணியையும் தாண்டியிருந்தது.

எங்கேயோ நாயொன்று குரைத்து ஓய்ந்துபோக,

மிப்ரா மீண்டும் மீண்டும் மீண்டுமென சிந்திக்க ஆரம்பித்தான்.

ஈற்றில் அந்த முடிவுக்கு வந்தான் மிப்ரா.

ஸரீனாவை நினைக்கும் போது பாவமாகத்தான் இருக்கிறது. 'எத்தனை ஆயிரம் கனவுகளோடு, கண்ணீரோடு காத்துக்கொண்டிருக்கிறாள் அவள்...'

மிப்ரா கண்களில் கண்ணீரின் குளுமையை உணர்ந்தான்.

ஆனாலும்; உம்மாவுக்காகவும் தங்கைகளுக்காகவும் தன் முடிவை மாற்றவும் திராணியற்று.... அப்படியே உறங்கிப் போனான் மிப்ரா.

அவனது விதியையே- ஏன் வாழ்க்கையையே மாற்றியமைக்க அடிகோலாயிருந்த அந்தத் "தினமுரசு வாரமலர்", அவன் தலை வைத்திருக்கும் தலையணைக்குக் கீழ் அப்படியே இருந்தது. ஆக, விதி அந்த இரவுக்குள் புதிதாயொரு கோலம் போட ஆரம்பித்தது.

**வி**டிந்தது!

மிப்ரா அதிகாலையிலேயே எழுந்து சுபஹுத் தொழுகையை நிறைவேற்றினான். அப்படியே உம்மாவிடமும் தங்கச்சியிடமும் சொல்லிக்கொண்டு, நேற்று நண்பனிடம் வாங்கிவைத்திருந்த பணத்தையும்..... அந்த தினமுரசு வாரயிதழையும் எடுத்துக் கொண்டு...... முதல் பஸ்ஸிலேயே கொழும்புக்குப் பயணமானான். காரணம் கேட்ட உம்மாவிடம் வாய் கூசிக்கூசிப் பொய்யொன்று சொன்னான். தவிர- உண்மையைச் சொல்லியிருந்தால்....உம்மா உயிருடனேயே இருந்திருக்க மாட்டாள் என்பதை அவன் அறியாதவனல்ல. ஏனெனில்-

பெற்ற மனம் பித்தல்லவா!

மிப்ரா மனதைக் கல்லாக்கிக் கொண்டான்.

**இ**ரண்டு வாரங்கள் கழிந்தன.

மிப்ரா அந்தப் பிரைவேட் நர்ஸிங் ஹோமில் இருந்து வெளிப்பட்டான். உடம்பில் இன்னும் நோவு இருக்கத்தான் செய்கிறது. இலேசான மயக்கமும் தலைசுற்றலும் இருந்தும்கூட... மெது மெதுவாக பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தான். உடம்பில் களைப்பு மிகுதியாயிருந்தது.

எல்லாம் நினைத்தமாதிரியே திருப்தியாய் நடந்து முடிந்துவிட்டது.

வீட்டிலிருந்து கொழும்புக்கு வந்து இரண்டு வாரங்களாகின்றன.

எல்லாவற்றிலும் ஓர் அசுரவேகம்.....

'இன்னும் ஒரு மாதகாலமாவது பூரணமாக ஓய்வு எடுக்க வேண்டும்!"

டாக்டர் அடிக்கடி சொன்னது நினைவுக்கு வர...

மிப்ரா அந்தக் 'கண்டி' பஸ்ஸில் ஏறியமர்ந்துகொண்டான். மாவனல்லைக்கு டிக்கெற் எடுத்தான். மனதுக்குள் கொஞ்சம் நிம்மதியாய் உணர்ந்தான். ஆழமானதொரு பெருமூச்சு அவனிடமிருந்து வெளியேறியது.

பஸ்ஸிற்கு வெளியே கொழும்பு நகரமே பரபரப்புக்குள்ளாகியிருக்க, மிப்ரா பத்திரமாய் மடித்து வைத்திருந்த அந்த தினமுரசை எடுத்து விரித்து வைத்துக் கொண்டு.... மீண்டுமொருமுறை படிக்க ஆரம்பித்தான். அதில், அவனது வாழ்க்கையையே திசைமாறச் செய்த... அந்தக் கொட்டை எழுத்துக்களில் இருந்த பகுதியை அவனது விழிகள் மேய்ந்தன.

**தேவை!**

சிறுநீரகம் பாதிக்கப்பட்ட ஒரு பிரபல தொழிலதிபருக்கு, அவசரமாக மாற்று சிறுநீரகமொன்று தேவைப்படுகிறது. தந்துதவ முன்வருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்."

மிப்ரா பார்த்துக்கொண்டேயிருந்தான்.

அவன் முகத்தில் மெல்லியதோர் புன்னகை படர்கிறது.

மிப்ரா கையில் இருந்த அந்த சின்னப் பார்சலை அப்படியே தன் நெஞ்சோடு சேர்த்து வாஞ்சையோடு அணைத்துக் கொள்கிறான். அதில்தான்...மிப்ரா தன் சிறுநீரகமொன்றை தானம்பண்ணியதற்கான- விற்றதற்கான விலையாகப் பெற்ற ஒன்றரை இலட்சம் ரூபாய் பணம் இருக்கிறது.

பஸ் புறப்பட ஆயத்தமானது.

'தங்கைகளினது கல்யாணத்தை சிறப்பாக நடாத்திப் பார்க்க வேண்டும்!

மிப்ரா மனதுக்குள் நினைத்துக் கொள்கிறான்.

அவனது உடம்பு முழுக்க சந்தோஷம் பரவிப்போக... அதையும் தாண்டிக் கொண்டு அவனது விழிகளுக்குள் ஸரீனா வந்து நின்றுகொண்டாள்.

'ஸரீனாவுக்கு என்ன பதிலைச் சொல்வது?'

இதய சாம்ராஜ்ய இளவரசனின் செய்கையை அவள் தாங்குவாளா?'

எதுவுமே புரியாமல்...மிப்ரா உடம்பு குலுங்கி அழத்தொடங்கினான். அடுத்தவருக்காக மணம் பரப்பிய அந்தச் சந்தன மரம், தன் வாழ்க்கையில் விறகாகிப் போய்....

எதற்கும் காலம்தான் பதில்சொல்ல வேண்டும்.

அவனையும் அவனது கனவுகளையும் கண்ணீரையும் சுமந்துகொண்டு, பஸ் சீரான வேகத்தில் ஓடத் தொடங்கியது.

மிப்ராவின் கண்ணீரிலாவது காலம் கனியட்டும்.

-யாவும் கற்பனை-

---

16ம் பக்கத் தொடர்ச்சி..

கொல்லத்தான்.....

போத்தலை உடைத்துக் கொண்டு என்னை நோக்கிப் பாய என் கையிலிருந்த கத்தரிக்கோல்அவன் கழுத்தையும் ஊடுருவிப் பாய்கிறது. எங்குமே கலவரம் போன்ற நிலமை. மக்கள் சிதறி ஓடினர். கூட்டத்தோடு கூட்டமாக நானும் எமது அடையாள அட்டைகளை எடுத்துக்கொண்டு நடக்கிறேன்.

இப்போது நேரம் இரவு 7 மணியாகியிருக்கும். ஆங்காங்கே தெரு விளக்குகள் மங்கலாக எரிய ஆரம்பித்திருந்தன... நான் எனது மனைவியையும், மனைவியின் தங்கையையும் அறவே மறந்து போயிருந்தேன்....

சற்றுத் தூரம் நடந்து ஒரு ஒதுக்குப்புறமான இடத்திற்கு வந்த போது மிகவும் மெல்லிதாய் தெருவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. அங்கே ஒரு சின்னஞ்சிறிய சிறுமி, தன்னைவிடக் கொஞ்சம் பெரிய சட்டையைப் போட்டு தெருவிளக்கின் மங்கிய ஒளியில் அழகு பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தச் சின்னவளின் அலங்காரத்தை மெய்மறந்து இரசித்துக்கொண்டிருந்த நான், ஒரேயடியாய் திடுக்கிட்டேன்!.... அந்தச் சிறுமி போட்டு அழகு பார்க்கும் சட்டை என் மனைவியின் தங்கையுடையது!.... "ஐயோ"...... அவர்களின் நினைவு என்னை விடுதி அறையை நோக்கி ஓட வைக்கிறது.

கண்ணில் நீர் கொட்ட கொட்ட ஓடுகிறேன். விடுதி அறை போத்தல் துண்டுகளாலும், குருதிக் கறைகளினாலும் அலங்கோலமாய்க் கிடக்கிறது. இருட்டையும் ஊடுருவி, அறைக்குள் என் மனைவியையும், மனைவியின் தங்கையையும் தேடுகிறேன். எங்குமே இரத்தச் சகதி. கால்கள் குருதியை மிதித்து பிசுபிசுத்தது. மனைவியின் தங்கையைக் காணவில்லை. அவளின் காலணிகள் மாத்திரம் நார் நாராகக் கிழித்து குருதியில் ஊறிப்போய்க் கிடந்தது! ........ மூலையில் லேசாய் முனகல் சத்தம்!

உற்றுப் பார்க்கிறேன்....."ஆ!"....என் மனைவி அலங்கோலமாய்அண்ணாந்து கிடக்கிறாள்! தொடையிலும், வயிற்றிலும், உடைந்த போத்தல் துண்டுகள் உள்நோக்கி இறங்கிக் காணப்பட்டன!

அவளுக்கு இன்னும் கொஞ்சமாய் உயிர் இருக்கிறது...... அன்று "யாரது சொல்லாமல் நெஞ்சள்ளிப் போனது....." என்ற பாடலை பாடி மயக்கியவள் இன்று சுவாசித்து மூச்சை வெளிவிடும் போது மிகவும் சிரமப்பட்டாள். ஒவ்வொரு சுவாசத்தின் போதும் அவள் முகத்தை அங்கும் இங்கும் திருப்பி வேதனையால் கைகால்களை, உதறும் காட்சியைப் பார்க்கும் போது...... "ஆ....ண்டவா".... முழங்காலிட்டு அமர்ந்து என் சித்திரப் பாவையின் சாந்தமான முகத்தைக் கைகளில் ஏந்துகிறேன்......

அதிக இரத்தம் ஏற்கனவே வெளியேறிவிட்டதால், முகம் வெளிறிப் போய், எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் கண்கள் திறந்தே கிடக்கின்றன...... என் அழுகைக் குரலினால் என்னை இனம் கண்டு கொண்ட அவள்.... அழாமலே விழிகளில் நீர் வடிகிறது..... "எ....என்னங்க நீ..... நீங்க சீக்கிரம் போயிடுங்க. இல்லாட்டி....அவர்கள் உ....... உங்களையும்........" மூச்சுவிட சிரமப்பட்டாள். துடித்தாள்.......

"ஐயோ!"....... நெஞ்சு குமுறுகிறது. ஏதோ ஒரு புதுவித மிருகத்தைப் போல் ஒலி எழுப்புகிறேன். கழுத்து, கை, கால்.....எல்லாமே நடுங்குகிறது.....அது பயத்தையும், சோகத்தையும் மீறிய ஒரு உணர்ச்சி..... நெருப்பைத் தின்றது போல் நெஞ்சமெல்லாம் எரிகிறது.... ஐயோ..... பயங்கரமாய் எரிகிறது..... திடுக்கிட்டு விழித்துக்கொள்கிறேன்.

ஹி....ஹி....ஹி..... எல்லாம் நான் கண்ட கனவுதான்! (இந்தக் காலகட்டத்தில் அடையாள அட்டையோடு தொடர்புபட்ட கனவுகள் வருவது வழமைதானே)

(யாவும் கனவு)

---

## என் காதலன் எப்படி?

இரண்டு ஜோடிக் காதலர்கள் ஒரு கடற்கரை ஹோட்டலில் போய் தங்கினார்கள். அவர்கள் மணலில் இருந்து கதைத்துக்கொண்டிருந்தபோது இடி இடித்தது. மழை பொழிந்தது.

இரண்டு ஜோடியும் ஓடிப்போய் தமது அறைக்குள் நுழைவதற்குள் மின்சாரம் தடைப்பட்டுவிட்டது.

ஒரு வழியாக அறைக்குள் நுழைந்து போர்வைக்குள் புகுந்து கொண்டார்கள்.

ஆண் வழக்கம்போல் முணு முணுவென்று ஜபித்துவிட்டு பெண்ணை அணைத்துக் கொண்டான்.

திடீரென விளக்குகள் எரிந்தன. அடடா தவறு செய்ய இருந்தோமோ என்பது புரிந்து ஆண் எழுந்து ஓட ஆரம்பித்தான்.

அவள் சொன்னாள், " தாமதித்து விட்டாய் நண்பனே; என் காதலன் உன்னைப்போல் ஜபம் எல்லாம் செய்வதில்லை!"

## இலக்கிய நயம்

# காணாத போதுதான் கோபம்!



## தருவது ரசிகன்

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?"

பூமிக்கு வந்த சொர்க்கம் தன் பூவிதழ் திறந்து, குரலில் தேன் கலந்து கேட்டது.

பார்வை விலக்காமல் பதில் சொன்னான் காளை.

"பசி."

"பசிக்கும் பார்வைக்கும் என்ன சம்மந்தம்?"

கள்ளமில்லா அவள் முகத்தில் ஆளைக்கொல்லுகிற விழிகள் படபடக்க அந்த வினா வெளியே வந்தது.

"பாடியிருக்கிறார்களே, கேட்ட தில்லையா நீ?"

"என்ன பாடியிருக்கிறார்களாம்?"

"பார்த்தால் பசி தீரும்."

"பார்க்காவிட்டால்?"

"பசி கொல்லும்."

சொன்னான். சிரித்தாள். சில்லென்று வந்த தென்றல் சுகமாய் தழுவியது போல் உணர்ந்தான். உள்ளே குளிர்ந்தான். அருகே சென்றான்.

சொர்க்கமாய் இருந்தவளின் தோளின் இருபுறமும் கைவைத்து, கருவிழிகளுக்குள் தன் விழி அம்பு வீசினான்.

வெட்கத்தில் கீழ்வானமாய் சிவந்தது பாவை அவள் முகம்.

குளத்திலே துள்ளும் மீன்களாய் அவள் விழிக்குளத்தில் இரு கருமீன்கள் ஓடித் திரிந்தன.

"தூண்டில் இல்லையே."

என்றான்.

"தூண்டிலா, எதற்கு?"

வெட்கத்திலும் வினா வந்து விழுந்தது.

"உன் விழிக்குளத்தில் எனக்குச் சொந்தமான இரு மீன்கள். உரிமை யாக்கிக் கொள்ள வேண்டாமா? அதற்கு?"

சொர்க்கத்தை வெட்கம் சிறைப் பிடித்தது. நிலவின் முகம் நிலம் நோக்கிக் குனிந்தது. காளையின் கரம் அந்தக் கள்ளியின் தாடை நோக்கி நீண்டது. தொட்டு உயர்த்தினான்.

"வெட்கமா?"

"போங்கள், நீங்கள் மோசம்."

"நாசமாய் போக, நானா மோசம்? மோசமானவனாய் இருக்கக்கூடாதா என்று தான் நினைக்கிறேன். மோசமானவனாய் இருந்தால்...."

"இருந்தால்......?"

"இந்தப் பூவின் வாசம் அறிந்திருக் கலாம். வானத்திலே சொர்க்கம் இருப் பதாகச் சொல்பவர்களை அழைத்து கன்னத்திலே அறைந்திருக்கலாம்?"

ஏனாம்?"

புரியாதது போல பூந்தேக அழகி கேள்வி எழுப்பினாள்.

"அழகான, அன்பான, நட்பான பெண் துணைதான் சொர்க்கம் என்று சொல்வேன். அது பூமியில் இருக்க, எவனடா அவன் வானத்தில் போய்த் தேடச் சொன்னது என்றுகேட்பேன்!"

"உங்களுக்குப் பைத்தியம்!"

"சத்தியமாய் பைத்தியம்தான். வைத்தியம் செய்ய வேண்டும். தவறினால் முற்றிவிடும்."

"தகுந்த வைத்தியரைப் பாருங்கள்."

"இது வைத்தியருக்குக் கட்டுப்படாது."

"யாருக்கு கட்டுப்படுமாம்?"

"இந்த வண்ணக்கிளிக்குத்தான் கட்டுப்படுமாம்."

பூவின் இதழ்களால் மென்மைகாட்டிய அவள் இதழ்களில் உதடுகள் என்னும் வண்டுகள் அமர்ந்து கொண்டன.

இதழ்கள் பேசிக்கொண்டன. கரங்கள் பேசாமல் இருக்குமா?

குன்றென நிமிர்ந்த மார்புகளில் குறும்பு செய்தன.

சூரியன் விடைபெற்றுச் சென்றதும் தெரியாமல் காதலர் இருவரும் கட்டுண்டு கிடந்தனர். பின்னர் 'பொழுதே பொழுதே ஏன் வேகமாய் ஓடுகிறாய்' என்று சோகமாய் நினைத்தபடி பிரிந்து சென்றனர்.

•

தோழி கேட்டாள்.

"என்னடி, அவரைப் பார்த்தால் கோபமாய் நாலு கேள்வி கேட்பதாக சொன்னாயே! கேட்டாயா?"

"இல்லையடி."

"ஏனடி, பார்க்கவே முடிய வில்லையா?"

"பார்த்தேன். ஆனால் கேட்கவில்லை."

"வெட்கமா?"

"இரண்டுமே இல்லை? அவரைப் பார்க்கும்வரை உள்ளே இருக்கும் கோபம் அவரைக் கண்டுவிட்டால் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிடுகிறதடி."

"கை கொடுக்கவேண்டுமடி."

"யாருக்கு?"

"வள்ளுவர், திருவள்ளுவருக்கு."

"ஏனடி?"

தோழி உடனே வள்ளுவரின் குறள் ஒன்று சொன்னாள்.

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணே போல் கொண்கன்
வழி காணேன் கண்ட விடத்து."

"இதற்கு என்ன அர்த்தமாம்? அதை யும் தான் சொல்லேன்."

"புருவத்திற்கு மைதீட்டும் போது தீட்டும் கோலைக் காணாத கண்களைப் போல, காதலனைக் காணாத போது மட்டும் அவன் மீது கோபம் கொள்வதும், வரட்டும் இன்று ஒரு வழி பண்ணுகிறேன் என்று காத்திருப்பதும், காதலனைக் கண்டவுடன் மறந்துவிடுமாம். பஞ்சு போலே பறந்து விடுமாம்!"

"அடி..... போடி!"

அவள் முகத்தை தன் கரங்களுக்குள் மூடிக்கொண்டாள். வெட்கம்தான் வேறென்ன?

அந்த வெண்ணிலா வெட்கப்பட்டுக் கொண்டிருக்கட்டும். நாம் இத்தோடு இன்றைய இலக்கியநயத்தை நிறுத்திக் கொள்வோம்.

## கூத்தரித்த கூடி ஜோக்ஸ்






மோட்டார் சைக்கிள் சவாரி பிடிக்கவில்லையாம்....அதுதான் ஹி.ஹி.ஹி.



தந்தை- இந்தக் கிளியை ஏலத்தில் வாங்கியது பிழையாகிவிட்டது.
மகன்- ஏனப்பா?
தந்தை- ஏலத்தில் விடுகிறது.



"யெஸ் என் மனைவியின் உடமைகள் யாவும் வந்துவிட்டன. சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்."
"பார்த்தவரை எப்படி?"
"அளவுகள் சரியாக இருக்கின்றன."



"நல்லநேரத்தில் வந்தீர்கள். இல்லாவிட்டால் உங்கள் வாகனமே உருத்தெரியாமல் போய்விடும்."
"ஏனப்பா?"
"நாட்டு நிலமை அப்படி. உடைத்துப் பார்ப்பது நமது கடமை.



"மகனே இது உன் ரிப்போட்டா?"
"இல்லையப்பா உங்களைப்பற்றி அம்மாவுக்கு வந்துள்ள ரிப்போர்ட்."

## குறுக்கெழுத்துப் போட்டி இல—27

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ■ | 3 | 4 |
| | 5 | | | | | |
| | 6 | ■ | | ■ | ■ | |
| | | 7 | | 8 | | ■ |
| 9 | | ■ | 10 | | | |
| | | 11 | | | | |
| ■ | | ■ | ■ | 12 | | |

### இடமிருந்து வலம்

1. இலங்கையின் காடுகளில் காணலாம்.
3. சொல்வதைக் கேட்க இது வேண்டும்.
5. நுகர்வோரை இது கவலைப்பட வைக்கும்.
7. சூளையில் உற்பத்தியாவது.
9. சாப்பிட ஆசை வரும்.
10. கதை எழுத இது முக்கியம்.
11. உடலின் ஆரோக்கியத்தோடு சம்பந்தப்பட்டது.
12. சீதை பிறந்த மண் (திரும்பியிருக்கிறது)

### மேலிருந்து கீழ்

1. நாடுகளில் ஒன்று.
2. திருநாட்களில் ஒரு நாள்.
4. யானையின் மறுபெயர்.
6. விலையுயர்ந்த கல்.
8. சிற்பியின் கைவண்ணம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 11.12.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-27
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-25க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஜ | ன | 2 வ | ரி | ■ | 3 ஊ | 4 சி |
| ல | ■ | 5 ணி | ன | க | ■ | கி |
| 6 த | ங் | க | ம் | ■ | ■ | ச் |
| ர | 7 ப | ன் | னீ | ர் | ■ | சை |
| ங் | ட் | ■ | 8 அ | ரு | வி | ■ |
| 9 க | டி | த | ம் | ■ | 10 பூ | மி |
| ம் | னி | ■ | 11 மி | ன் | ன | ல் |

குறுக்கெழுத்துப் போட்டி இல.25இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. வி. சிவானந்தன் கொழும்பு-6.
2. எஸ்.எம். மனாப்தீன் வத்தளை.
3. ஆர். நிர்மலா நீர்கொழும்பு.
4. ஏ. நஜ்மி. மதுரங்குளி.
5. பீ. தங்கேஸ்வரன் திருகோணமலை.
6. சாஹிரா நிசாம். சிலாபம்.
7. கே. செல்வநாயகி. கண்டி.
8. ஏ.எல். அமீர் ஹுஸைன் கல்முனை-03.
9. எஸ். தேவகுமார் புத்தளம்.
10. த. விஜயகுமாரி கல்லாறு.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

டியர் சிந்தியா- நன்மை செய்யும் போது தீமை ஏற்பட்டால்?

டி.எஸ். பிறேமேந்திரன்-அப்புகாமம் எஸ்டேட்.

பாத்திரம் அறிந்து பிச்சையிட வேண்டும். அதுபோல் யாருக்கு நன்மை செய்ய வேண்டும் என்று தெரிந்தே செய்ய வேண்டும் என்ற தெளிவு ஏற்படும்.

•

அரசியல்வாதியும், நடிகருமான அமரர் விஜயகுமாரணதுங்க மீண்டும் பிறந்துள் ளாராமே? அப்படி நடப்பதுண்டா?

எஸ்.பி.சந்திரன்.

நடப்பதில்லை. யாரோ அவர் பெயரைச் சொல்லிப் பிழைத்துக்கொள்ள நினைக் கிறார்கள். அவ்வளவுதான்.

•

நாடோடி மன்னன் திரைப்படத்தின் இயக்குநர் யார்?

எம்.எப்.எம். மஸ்னாரி- புத்தளம்.

அமரர் எம்.ஜி.ஆர்.

•

காதலி கோபம் அடையும்போது மகிழ வைப்பது எப்படி?

நாபி. ஏ. டபிள்யூ.எம்-கின்னியா-05.

இதற்கெல்லாம் விடைகள் சொல்லித் தெரிவதில்லை. மேலும் இதற்கெல்லாம் வழி சொல்லி வம்பில் மாட்டிக்கொள்ள நான் தயாரில்லை.

•

அதிகாரத்திற்கு அடி பணிவதா? அன்புக்கு அடி பணிவதா?

கனகசூரியம் ரவி-பள்ளிக்குடியிருப்பு.

முதலாவதற்கு ஆம் என்றால் அது கோழைத்தனம். இரண்டாவதற்கு ஆம் என்றால் அது மனிதத்தனம்.

•

மனிதன் தவறுகளைத் திருத்தும் போது அவனின் நிலை என்ன?

இந்து-இரத்தினபுரி.

டெட்டோல் போட்டு கழுவப்பட்டதால் அசுத்தம் போன தரைபோல சுத்தமாக இருக்கும் மனது.

•

கலைஞர் போர்வாளை (வை.கோ) வீசி விட்டாரே. வேறு யாராவது எடுத்தால் என்னவாகும்?

கே. கதிர்காமநாதன்-பாண்டிருப்பு-01.

எடுப்பார் கைப்பிள்ளையாக மாறுவதற்கு வை.கோ ஒன்றும் காளிமுத்துக்கள் ரகம் அல்ல. ஆனால் போர்வாளை இழந்த கலைஞர் வருத்தப்படுகிறாரோ இல்லையோ, கழகம் கவலைப்படுகிறது.

•

அன்புள்ள சிந்தியா, இன்றைய அரசியலில் மக்கள் எப்படி இருக்கிறார்கள்?

இரா- சசிகுமார்-இரத்தினபுரி.

பார்வையாளர்களாக.

•

கண்ணகியின் கண்ணீருக்கு காரணம் யார்?

ஜி.கே.வடிவேல்- மட்டக்களப்பு.

கண்ணகியேதான். எல்லாம், விட்டுக் கொடுத்ததால் வந்த வினை.

•

### இன்றைய அரசியலில் மக்களின் நிலை என்ன?

சினிமா உலகுக்கு முதலில் வந்தது யார்? எம்.ஜி.ஆரா, சிவாஜியா?

ஏ.எச். நியால்-இறக்காமம்-08.

இரண்டு மூன்றெழுத்திலும் முதலில் வந்த மூன்றெழுத்து எம்.ஜி.ஆர்.

•

யாழ்தேவிக்கும் தவளைப் பாய்ச்சலுக்கும் இடையில் தாங்கள் காணும் வேறுபாடு?

ரி.எல்.வரன்-வாகரை.

முன்னது இராணுவத்தினால் திட்ட மிடப்பட்டது. பின்னது புலிகளால் திட்ட மிடப்பட்டது. இரண்டிலும் நோக்கம் நிறைவேறவில்லை என்பது நமது நாரதர் சொன்னது. இதற்கு மேல் நான் என்ன சொல்வது?

•

என் காதலி அடிக்கடி என்னை வம்புக்கு இழுக்கிறாள். என்ன செய்வது?

எம்.மோகன்ராஜி-சென்கூம்ஸ் டேம்சைட்.

கையில் வெண்ணெய் இருக்க நெய் தேடிய கதையாக சந்தர்ப்பத்தை விட்டு விட்டு தபாலட்டையையும் நேரத்தையும் வீணாக்குகிறீர் ஐயா நீர்.

•

அன்பு அணைக்கும். அன்பே அணைந்தால்?

அஹமட் முபாறக்-குருத்தலாவை.

அணைத்த போது வாழ்வில் வசந்தம் தெரிந்தது. அது அணைந்த போது வாழ்வின் வெளிச்சம் போனது.

•

புன்னகையரசி கே.ஆர். விஜயா நடித்த முதல்படம் எது?

எஸ்.பி.சந்திரகுமார்-ஹொப்டன்.

கற்பகம்.

•

நம்நாட்டு அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை தமிழர்களின் நிலைப்பாடு என்ன?

பி.சேகர்-புத்தளம்.

தெரியவில்லை. நிலைப்பாடு வெளிப் படையாக பயம் தடுக்கிறதே. என்ன செய்வது?

•

தமிழ் பேசும் மக்களுக்காக உண்மையில் குரல் கொடுப்பது யார்?

எஸ். ஜெயந்தன்- ஹட்டன்.

அவசரப்பட்டுப் பதில் சொல்ல மாட்டேன்.

•

# தருமத்தின்படி நட

பாரத யுத்தம் ஆரம்ப தினத்தன்று இருதிறத்துப் படைகளும் அணிவகுத்து நின்றன. கௌரவ சேனையின் முன்னணியில் பீஷ்மர் சேனாதிபதியாக நின்றார். அதே நேரத்தில் பாண்டவரில் மூத்தோராகிய தருமர் திடீரென்று தனது கவசத்தைக் கழற்றி விட்டு எல்லா ஆயுதங்களையும் தேரில் வைத்து விட்டு, தலைமேல் கைகுவித்தபடி கால் நடையாகக் கௌரவ சேனை இருந்த பக்கம் சென்றார்.

இதைப் பார்த்த, அருச்சுணனும், மற்றையோரும் 'வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்த மாதிரி' யுத்தம் வேண்டாம் எனத் தடுக்கப் போகிறாரோ என நினைத்து அவரின் பின்னே ஓடினர்.



தருமர், பீஷ்மர் முதலானோரிடம் சென்று, யுத்தம் செய்ய அனுமதியும், ஆசிர்வாதமும் வேண்டி நின்றார். இதைக் கண்ட கௌரவ சேனை வாயடைத்து நின்றது. எல்லோரும் தருமரைக் கொண்டாடினர். கௌரவ சேனையிலுள்ள வேற்று



நாட்டரசர், இந்தத் தருமவானுக்கெதிராக யுத்தம் செய்யக் கூடாதென பாண்டவர் பக்கம் சார்ந்தனர்.

எல்லாம் உணர்ந்த கிருஷ்ணர் புன்னகையுடன் அவர்களைத் தடுத்தார். பாண்டவ சேனை திகைத்துப் போயிருந்தது. கௌரவ சேனையிலுள்ளவர்கள், "தருமர் நம்முடைய சேனையைக் கண்டு பயந்து போய்ச் சரணடைய வருகிறார். இதுதான் பாண்டவர்களின் வீரம்", என்று எள்ளி நகையாடி ஆரவாரம் செய்தனர். அதையும் பொருட்படுத்தாத

தருமருக்கு பீஷ்மர் முதலானோரின் அனுமதியும் ஆசியும் கிடைத்தது. தருமத்தின்படி நடந்ததால் யுத்தத்தில் வெற்றியும் கிடைத்தது.

திருமதி. பாலாம்பிகை
சிதம்பரநாதக் குருக்கள்

## ஆன்மீகம்

# பாவிகளை மீட்க உற்பவம் ஆனவர்

இறைமகன் இயேசுகிறிஸ்து பாவிகளை மீட்பதற்கென்றே உற்பவம் ஆனார். அதனால் பாவிகளினூடே பந்தியிருந்தார்: பசி தீர்ந்தார்: சயனித்தார். அவர்களின் மனம்திரும்புதலுக்கென்றே வந்தவராகையால் இறையரசு பற்றியும் அதனை அடையும் வழிவகைகள் பற்றியும் இலகுவாகவும் எளிய முறையிலும் போதித்தார்.



அவரது போதனைகள் அதிகாரமுள்ளவையாகவும், ஆறுதல் தர வல்லவையாகவும் இருந்தது. மக்கள் எளிதில் விளங்கிக் கொள்ளும் பொருட்டு இறைமகன் கிறிஸ்து உவமைகள் மூலமும் போதித்து வந்தார். ஒருமுறை அவர்,

"கேளுங்கள்! இதோ விதை விதைப்பவன் விதைக்கச் சென்றான். விதைக்கும் பொழுது சில விதைகள் வழியோரம் விழவே பறவைகள் வந்து அவற்றைத் தின்று விட்டன. சில அதிக மண்ணில்லாத பாறை நிலத்தில் விழுந்தன. அடி மண்ணில்லாததால் உடனே முளைத்தன. வெய்யில் ஏறியதும் தீய்ந்தன. வேரில்லாமையால் காய்ந்து போயின. சில விதைகள் முட்செடிகள் நடுவே விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெரித்துவிடவே அவை பலன் கொடுக்க வில்லை. சில நல்ல நிலத்தில் விழுந்தன. அவை முளைத்து ஓங்கி வளர்ந்து ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் கொடுத்தன. மேலும் "கேட்க செவியுள்ளவன் கேட்கட்டும்." என்றார். (மாற்கு 4:3-9)

அவர் தம் உவமைகளின் விளக்கத்தினை தம் சீடர்களுக்கு விளக்குகையில்,

"விதைப்பவன் விதைப்பது தேவ வார்த்தை. வழியோரமாய் விழுந்த வார்த்தை என்னும் விதை போல சிலர் உள்ளனர். அவர்கள் அதை கேட்டவுடனே, அவர்கள் உள்ளத்தில் விதைக்கப்பட்ட வார்த்தையை சாத்தான் வந்து எடுத்து விடுகின்றான். அவ்வாறே பாறை நிலத்தில் விழுந்த விதை போன்றவர்கள் ஒரு சிலர் உள்ளனர். இவர்கள் வார்த்தையை கேட்டவுடன் மகிழ்வோடு ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் இவர்கள் வேரற்றவர்கள், நிலையற்றவர்கள். பின்பு வார்த்தையின் பொருட்டு வேதனையுற்றாலோ-துன்புறுத்தப்பட்டாலோ உடனே இடறல் படுவர். முட்செடிகள் நடுவே விழுந்த விதை போன்றவர்கள் வேறு சிலர். இவர்கள் வார்த்தையை கேட்கின்றனர். ஆனால் உலகக் கவலையும் செல்வ மாயையும் மற்ற இச்சைகளும் நுழைந்து வார்த்தையை நெரிக்க அது பயனற்றுப் போகின்றது, நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதை போன்றவர்கள் சிலர். இவர்கள் வார்த்தையைக் கேட்டு ஏற்றுக்கொண்டு முப்பதும், அறுபதும், நூறுமாக பலன் கொடுக்கின்றனர்" என்றார்.

இவ்வாறே பற்பல உவமைகள் மூலம் பாவிகளை மனந்திரும்பப் பண்ணியருளினார்.

அவரது போதனைகளைக் கேட்டு விளங்கிக் கொண்டு நாம் நமது பாவ வாழ்வில் இருந்து விடுதலை பெற்று இறையரசில் இறைவனருகே வாழ்ந்து வருவோமாக.

எல்.கே. நாதன்-மோதர.

# அகிலத்தவர்க்கு அண்ணல் நபியின் போதனைகள்

- மரணம் எனும் நஷ்டத்திற்கு முன் வாழ்க்கையெனும் நல் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
- பூமியிலுள்ளோர் மீது இரக்கம் காட்டுங்கள். வானத்திலுள்ளோன் உங்களுக்குத் துணைபுரிவான்.
- நிறைந்த பொருட்கள் செல்வமன்று. ஆனால் நிறைந்த உள்ளமே செல்வம்.
- உங்களை நம்பி உங்களிடம் ஒப்படைக்கப்படும் அமானிதப் பொருட்களை உரியவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள். நம்பிக்கை மோசம் செய்வோர் தம்மை முஸ்லிம்கள் என்று சொல்லத் தகுதியற்றவர்களாவர்.
- ஒருவர் ஒரு தவறைக் கண்டால் நாவினால் தடுத்துக்கொள்ளவும். முடியாவிட்டால் கைகளினால் தடுத்துக் கொள்ளவும். அதுவும் முடியாவிட்டால் மனதினாலாவது வெறுத்துக் கொள்ளவும்.
- சிறியோர்மீது அன்பு காட்டாதவரும், பெரியோரைக் கண்ணியப்படுத்தாதவனும், நன்மை செய்யும்படி ஏவி தீமையை விட்டு விலக்காதவனும் நம்மைச் சேர்ந்தவனல்ல.
- உன்னைவிடச் செல்வத்திலும் அழகிலும் சிறந்தவர்களைக் காணும் போது அவற்றில் உன்னைவிடத் தாழ்ந்தோரை எண்ணிப்பார்.
- பொருளாசையும் பதவி மோகமும் உங்களை நல்வழியிலிருந்து திருப்பி விடும்.
- தருமத்தினால் பொருள் குறைந்து விடாது. மன்னிப்பதனால் சிறப்புக் குறைந்துவிடாது.
- தருமத்தை விடக் கடன் கொடுத்துதவுவதிலேயே அதிக நன்மை இருக்கிறது. ஏனெனில் தருமத்தைத் தேவையற்றவர்களும் பெறுவர். கடனைத் தேவையுள்ளோர் மாத்திரமே பெறுவர்.
- தருமம் ஆபத்துக்களை நீக்கும் ஆயுளை நீடிக்கச் செய்யும்.
- அறிவைப் பெற்று அதனைப் பரப்புகின்றவரே மக்களில் சிறந்தவர்.
- அறிவு எங்கிருந்து வந்தாலும் அது ஒரு இழந்த சொத்து என நினைத்து அதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- அறிவைத் தேடி அதன் வழி நடப்போருக்கு இறைவன் சொர்க்க வாசலை இலேசாக்கி வைப்பான்.
- பெற்றோர் தமது குழந்தைகளுக்கு நல்ல கல்வியை ஊட்டுவதை விட வேறொரு மேலான வெகுமதியை அளிக்க முடியாது.
- தெரிந்தது போல் நடித்து மக்களிடம் நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள். ஏனெனில் கல்வியில் மோசடி செய்தல் பொருளில் மோசடி செய்வதிலும் பார்க்கக் கொடுமையானது.


ஏ.எச்.ஏ.ஹுஸைன்-ஏறாவூர்.

# விளாசுவதால் விளம்பரம்

இந்திய கிரிக்கெட் அணியில் இப்போது முன்னணியில் இருப்பவர் வினோத் காம்ளி.

டெண்டுல்கர்கூட ஏமாற்றிவிடும் சமயங்களிலும் வினோத் விளாசித் தள்ளுகிறார். அதனால் ரசிக-ரசிகைகள் அதிகளவில் அவர் பக்கம் ஈர்க்கப்படுகிறார்கள். இலங்கையிலும் வினோத் காம்ளிக்கு ஏராளமான ரசிக-ரசிகைகள் இருக்கிறார்கள்.

பல விளம்பர நிறுவனங்கள் படங்களில் நடிக்குமாறு கையில் கரன்சிகளோடு அவரது கதவைத் தட்டுகின்றன.



## ஸ்போர்ட்ஸ்

# ஒலிம்பிக்கில் விளையாடும் அரசியல்!
# வஞ்சம் தீர்க்கத் தயாராகிறது சீனா!!

2000 ஆண்டில் உலக விளையாட்டு விழாவான ஒலிம்பிக்ஸ் போட்டிகள் நடைபெறுவதற்கேற்ற இடமாக அவுஸ்திரேலியாவின் துறைமுக நகரமான சிட்னி தெரிவு செய்யப்பட்டுள்ளது. மொன்டிகாலோ நகரில் செப்ரம்பர் இறுதியில் சர்வதேச ஒலிம்பிக் குழு உறுப்பினர்கள் சிட்னி நகரைத் தேர்ந்தெடுத்தமை உலகின் விளையாட்டு வீரர்கள் மத்தியிலும் இத்துறை தொடர்பான நிலையாளர்கள் மத்தியிலும் பெரும் அதிருப்திப் புயலை உருவாக்கியிருக்கிறது.

சர்வதேச ஒலிம்பிக்ஸ் குழுவில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் நேரடியாக விளையாட்டுகளுடன் தொடர்புடையவர்கள் என்று கூறிவிட முடியாது. இவர்களில் சிலர் தங்கள் தங்கள் நாடுகளில் மதிப்பு வாய்ந்த பதவிகளை வகித்தவர்கள். சிலர் முன்னாள் அமைச்சர்கள், வேறு சிலர் அவர்களுடைய நாட்டின் பிறநாட்டுத் தூதுவர்களாக இருந்தவர்கள், இராணுவ அதிகாரிகளாகவும் சிலர் முன்பு கடமை பார்த்தவர்கள்.

இவர்கள் இம்முறை சிட்னி நகரைத் தேர்ந்தெடுத்தமைக்கு அரசியல் காரணிகளே பின்னணியில் இருந்துள்ளன என்பதே அவதானிகளின் குற்றச்சாட்டாகும்.

இன்றைய விளையாட்டுத்துறையை எடுத்துக்கொண்டால் உலகின் தலைசிறந்த விளையாட்டு வீரர்களை சீனா பெற்றுள்ளது. மெய் வல்லுநர் போட்டிகளில் ஏற்கனவே நிலை நாட்டப்பட்ட பெருவாரியான சாதனைகளை சீனாவின் வீரர்களும் வீராங்கனைகளும் முறியடி புதுப்புது எல்லைகளை வகுத்துள்ளனர். இது ஒன்றே இன்னும் ஏழு வருடங்களில் நடைபெறப் போகும் போட்டிக்கு சீனாவின் தலைநகரான பெய்ஜிங்கைத் தெரிவு செய்யப் போதுமான காரணமாகும்.

இருப்பினும் பல்வேறு துறைகளிலும் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டு வரும் சீனா மீது பொறாமை கொண்ட சில செல்வாக்கு மிக்க அரசாங்கங்களின் தலையீட்டினால் பெய்ஜிங் பக்கம் சார வேண்டிய முடிவு சிட்னி பக்கம் சாய்ந்து விட்டது.




உலக விளையாட்டு விழாவில் இம்முறை மட்டும்தான் அரசியல் புகுந்துள்ளது என்று கூறிவிட முடியாது. மொஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் விளையாட்டுகளை 'பகிஷ்கரிக்க வேண்டும்' என்று அப்போது அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த ஜிம்மி காட்டர் 62 நாடுகளைத் தூண்டினார்.

மொன்ற்றியலில் நடைபெற்ற போட்டிகளில் ஆபிரிக்கா கலந்து கொள்ளாமல் விட்டமைக்கு அரசியலே காரணமாகும்.

லொஸ் ஏஞ்சல்ஸ் போட்டிகளிலும் அரசியல் தலையிட்டது.

இரண்டாயிரமாம் ஆண்டு விளையாட்டுக்களைத் தங்கள் தங்கள் நகரங்களில் நடத்த வேண்டும் என்று பேர்ளின், மாஞ்செஸ்டர், சிட்னி மற்றும் பெய்ஜிங் ஆகிய நகரங்கள் விண்ணப்பித்திருந்தன.

இவற்றுள் சகல அம்சங்களிலும் முதல் தரமான தகுதி பெற்ற இடமாக பெய்ஜிங் நகரமே திகழ்ந்தது.

ஏழு வருடங்களில் ஒரு இலட்சம்கோடி டொலரைச் செலவு செய்து தலை சிறந்த ஆயத்தங்களைச் செய்வதற்கான தகுதியைப் பெற்றிருந்தும் பெய்ஜிங் புறக்கணிக்கப்பட்டமைக்கு அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் பின்னணியில் இருந்துள்ளன.

இவ்விழாவிற்காகச் செலவிடப்படும் பணத்தை முதலீடு செய்யும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய சபை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் முக்கிய முதலீட்டாளர்களாக அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பாவும் விளங்குகின்றன. இந்நாடுகள் என்றும் சீனாவை விரும்பாதவை. அந் நாட்டின் வளர்ச்சியை- மேம்பாட்டை அங்கீகரிக்க முடியாதவை. ஆகவே இம்முறை நடைபெற்ற தேர்விலும் உண்மையான விளையாட்டுத்துறை பற்றி சர்வதேச ஒலிம்பிக்ஸ்குழு உறுப்பினர்கள் சிரத்தை காட்டாமல் பாரபட்சமாக நடந்துள்ளனர் என்பது வெளிப்படை.

பெய்ஜிங்கை விடுத்து சிட்னியைத் தேர்ந்தெடுத்தமைக்கு, சீனாவில் மனித உரிமைகள் மீறப்படுவது ஒரு தடையாக இருப்பதாகக் காரணம் காட்டப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவில், மனித உரிமைகளுள் ஒன்றான பாகுபாடற்ற நிலை மீறப்பட்டது என்பதற்கு எத்தனையோ ஆதாரங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

அவுஸ்திரேலிய நாட்டுக்கே பாரம்பரிய உரித்தாளர்களான ஆதி வாசிகளை, பின்னர் வந்து குடியேறிய ஆங்கிலேயர்கள் எவ்வாறு புறக்கணித்து வருகிறார்கள் என்று பல சான்றுகளை நடுநிலையாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

1971ம் ஆண்டு அவுஸ்திரேலிய அரசாங்கம் நடத்திய தேசிய கணக்கெடுப்பின்போது அந்நாட்டு ஆதிவாசிகள் கணக்கெடுக்கப்படவில்லை. இதனால் அதே ஆதிவாசிகள் சிட்னி விளையாட்டுகளைப் புறக்கணிக்கக்கூடும். அவர்கள் இன்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் பாரபட்சமாக, நடத்தப்படுவதாக முறையிடுகின்றனர்.

மனித உரிமைகள் மீறலே பெய்ஜிங் போட்டியை ஒதுக்குவதற்கான காரணமானால், அமெரிக்க நகரமான லொஸ் எஞ்சல்ஸ் ஒலிம்பிக்ஸ் போட்டிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது எப்படி? இங்கு தானே மனித உரிமைகளுக்காகப் போராடி அமெரிக்க நிற வெறியாளர்களால் கொலையுண்ட ரொட்னி கிங் பிறந்தார். 1973ல் மொஸ்கோவிலும் 1981ல் கொறிய தலைநகரான சியோலிலும் ஒலிம்பிக்ஸ் போட்டிகள் நடைபெற எவ்வாறு அனுமதிக்கப்பட்டது? என்று சீனாவுக்கு அநீதி விளைவிக்கப் பட்டதை ஆட்சேபித்துக் குரல் கொடுப்போர் வாதிக்கின்றனர்.

சிட்னியில் உலக விளையாட்டுகள் நடைபெறத் தேர்ந்தெடுக்கப்பட்டமையினால் சீனா சினம் கொண்டுள்ளது.

சிட்னியை சீனா பகிஷ்கரிக்கப் போவதில்லை. தனது வீரர்களையும் வீராங்கனைகளையும் மிக உன்னதமான நிலையினை அடையும் இலக்கோடு பயிற்சி அளிக்கும். வஞ்சம் வைத்தே போட்டிகளில் பங்கேற்கும்- பதக்கங்களை வாங்கிக் கொள்ளும்.

இன்றைய உலக விளையாட்டு வீரர்களில் 20 சதவிகிதத்தினர் சீனாவிலிருப்பதால் சிட்னி விளையாட்டரங்குகளில் சீனாவின் வீரர்கள் சிறப்பு விருதுகளைப் பெறுவார்கள் என்பதில் ஐயமே இல்லை.



தரம் குறையாத தங்க-வைர நகைகள்.
எழிலூட்டும் எடுப்பான தயாரிப்புக்கள்.
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு

அருள் ஜூவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு.
கொழும்பு—11.
தொ.பேசி: 436331









# பெண்களையும் துரத்தும் பேரபாயம்!

'எய்ட்ஸ்' அபாயம் பற்றி எச்சரிக்காத நாடுகளே கிடையாது.

செக்ஸ் பற்றிய தெளிவு இல்லாமையும், வக்கிரங்களும் உருவாக்கியிருக்கும் கொடிய உயிர் கொல்லும் நோயே 'எய்ட்ஸ்'

'எய்ட்ஸ்' ஆண்களை மட்டுமல்ல, பெண்களையும் துரத்துகிறது.

உலக சுகாதார நிறுவனம் ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

இனிவரும் ஏழு வருடங்களுக்குள் ஒரு கோடியே முப்பது இலட்சம் பெண்கள் 'எய்ட்ஸ்' நோயால் தாக்கப்படுவார்கள் என்கிறது உலக சுகாதார நிறுவனம்.

பெண்களும் குழந்தைகளும் 'எய்ட்ஸ்' கிருமிகளால் இலகுவாகத் தாக்கப்படுவார்கள்.

இரத்தம் ஏற்றப்படுதல், தூய்மையற்ற விதத்தில் மருத்துவ உபகரணங்களை பயன்படுத்தல் போன்றவற்றால் எய்ட்ஸ் கிருமிகள் பரவமுடியும்.

உடல் உறவுகள் மூலம் மட்டுமே எய்ட்ஸ் பரவும் என்பது பழைய கதை எனினும் 'எய்ட்ஸ்' நோயை உற்பத்தி செய்தலை தவறான முறைதவறிய பாலியல் நடவடிக்கைகளே என்பதும் உண்மை.

தகுந்த செக்ஸ் கல்வி இன்மையும் அதற்கு ஒரு பிரதான காரணம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து.'எய்ட்ஸ்' நோயை தடுக்க உலகெங்கும் பல கோடி செலவில் பிரச்சாரங்கள் செய்யப்படுகின்றன.

போதாக்குறைக்கு 'ஸாப்புறைகள்' தயாரிப்பாளர்களும் தமது விளம்பரங்களில் எய்ட்ஸ் தடுப்பு பற்றிப் பிரச்சாரம் செய்கிறார்கள். எய்ட்ஸ் அபாயம் சொல்லி விற்பனைகளைப் பெருக்கும் தந்திரம்.

ஆனால் எய்ட்ஸ் அபாயம் மட்டும் தீர்ந்தபாடில்லை.






உயர்ந்த கலை கலைப் புரிந்து கொள்ள மொழிகள் தடையல்ல. நாடுகளின் எல்லைகளும் தடையல்ல. கலைகளை ரசிக்கும் விரிந்த மனம் இருந்தால் போதும்.

அமெரிக்காவில் உள்ள ஃபிரீர் காட்சிசாலையில் இந்திய கலை வடிவங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

அந்தக் காட்சிசாலையில் மொத்தம் 19 அரங்குகள். 18 அரங்குகளில் இந்திய கலைப் பொருட்கள் காட்சியளித்து அமெரிக்கரின் மனங்களைக் கவர்கின்றன.

தங்கத்தால் செய்யப் பட்ட பன்னீர்செம்பு, ஆபரணங்கள், காதணிகள், நகைப்பெட்டி, செம்பியன் மாதேவியின் வெண்கலச் சிற்பம், சிவபிரானின் வாகனமான நந்தி போன்றவையும் காட்சிசாலையில் இருக்கின்றன. பிரமிக்க வைக்கின்றன.

நல்ல கலைப் படைப்புக்கள் காலத்தால் அழிவதில்லை.

# ஆடினார் அகன்றார் எனினும் நிலைப்பார்!

தனது 19வது வயதில் கிரிக்கெட் அரங்கில் நுழைந்தவர் பொத்தம்.

இங்கிலாந்து அணியின் கப்டனாக இருந்து பல சாதனைகள் படைத்தவர்.

இப்போது ஆடி அலுத்துவிட்டது, ஒதுங்கிவிட்டார்.

கிரிக்கெட்டின் சகல துறைகளிலும் வல்லவர். ஒரு டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தும் சாதனையை நான்குமுறை நிகழ்த்திக்காட்டினார்.

ரன்களை குவிப்பதிலும் படுசூரர். பந்தை அடித்து விரட்டும் அழகே தனிதான். வேகமும் உண்டு. ரன் மழை பொழியும்.

இவ்வொத்தம் கால்பந்து விளையாட்டிலும் வல்லவர்.

பொத்தம் கப்பல் ஓட்டுவதில் விருப்பம் உள்ளவர், ஹெலிகொப்டர் ஓடுவதிலும் தணியாத ஆசை.

புற்று நோயாளிகளுக்காக பொத்தம் ஒரு முறை பாதயாத்திரை சென்றார். பல இலட்சங்கள் திரண்டன. சமூகப் பொறுப்பும் அவருக்கு உண்டு.

அரங்கை விட்டு விலகிய போதும் கிரிக்கெட் உலகம் மறந்துவிடாத வீரர்களில் ஒருவர் பொத்தம்.



# அட... கமரா வலம்!

மட்டக்களப்புக்
கல்லடிப் பாலத்திலே
நின்று பாருங்கள்.
இயற்கையின் எழில்மிகு
களிநடனம்
கவலைகளை
மறக்கவைக்கும்

காட்சியைப் பதிவு செய்தவர் வாழைச்சேனை ஸ்ரீவாணி.




ஜப்பான தொழில் நுட்பவியலாளர்கள் படு புத்திசாலிகள் எரிபொருளின் விலையோ ஏறிவருகிறது. தட்டுப்பாடும் இருக்கிறது. வரும் காலத்தில் நிலைமை இன்னும் மோசமாகலாம்.

எனவே ஜப்பான் தொழில்நுட்பக்காரர்கள் மூளையை கசக்கினார்கள். [illegible] சக்தியில் இயங்கும் கார்கள் ரெடி. [illegible] முறையில் உருவாகி, உருவாகி விற்பனைக்கும் வந்துவிட்டன.

உருவமும் சிறிது. எந்த நெருக்கமான வீதியிலும் நுழைந்து செல்ல வசதி. நிறுத்தி வைக்கவும் சரி.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இம்முறை நடைபெற்ற மோட்டார் வண்டிகளின் கண்காட்சியில் குட்டிக்கார்களே நிறைந்து காணப்பட்டன.

அழகான கார்களை கவனித்தவர்கள் அருகில் நின்ற அழகிகளையும் கவனிக்கத் தவறியிருக்கமாட்டார்கள்.

வியாபாரிகள் புத்திசாலிகள். விளம்பரம் என்றால் விழிகளையிழுக்கும் அழகுப் பெண்களும் வேண்டும்தானே. அதுதான் கார்களுக்கருகில் அழகுத் தேர்களையும் நிறுத்தி விட்டார்கள்.

# அழகே ஆயுதம்!

ஒவ்வொரு நாடும் தங்கள் நாடுகளில் உள்ள அழகிகளை ஆண்டுக்கொரு தடவை தேர்ந்தெடுக்கின்றன.

பின்னர் சகல நாட்டு அழகிகளையும் ஒன்றாகத் திரட்டி சேகரித்து உலக அழகுராணிப் போட்டிகள் நடக்கும்.

பல்வேறு விதமான ஆடைகளோடு ஒய்யாரமாய் வந்து அழகிகள் தோன்றுவார்கள். பார்வையாளர்கள் மெய்மறந்து போவார்கள்.

சில பெரிய தனியார் நிறுவனங்களும் விளம்பர நோக்கத்தோடு அழகுராணிப் போட்டிகளை நடத்தத் தொடங்கிவிட்டன.

எல்லாமே வியாபாரமாகிவரும் உலகில் அழகுராணிப் போட்டிகளும் வியாபாரமாகி வருகின்றன.

அழகுராணியாகத் தெரிவு செய்யப்படும் சிலர் நன்றாக சம்பாதிக்கிறார்கள். விளம்பரப்படங்களுக்கு போஸ் கொடுப்பது, பெரிய நட்சத்திர ஹோட்டல்களில் வரவேற்பாளர்களாக இருப்பது, ரசிகர்கள் இருந்தால் நடிகைகளாக மாறுவது என்று பல்வேறு துறைகளில் கால் வைக்கிறார்கள்.

அழகு மூலதனமாகிறது.

